விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 15 புதன்கிழமை (02.10.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 287

## தேரரின் உடல் அழுகுவதற்கு முன் தகனம் செய்தோம் இதனை பெரிதுபடுத்தாமல் விட்டு விடுங்கள்

### கலகொட அத்தே ஞானசார தேரர்

(கொழும்பு)
முல்லைத்தீவு நாயாறு விகாரையின் விகாராதிபதியின் பூதவுடலைத் தகனம் செய்வது தொடர்பில் நீதிமன்றத்தில் நீண்ட விசாரணை நடந்தால், தேரரின் பூதவுடல் அழுகுவதற்கு முன்னர் உடலைத் தகனம் செய்தோம். இந்த விடயத்தை பெரிதுபடுத்தாமல் இரண்டு தரப்பும் விட்டுவிட வேண்டுமென தெரிவித்துள்ளார் பொது பல சேன அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்.

நேற்று செவ்வாய்கிழமை கிருலப்பனையில் உள்ள பொது பல சேனா அமைப்பின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். 23

6 கிலோ கஞ்சாவுடன்

## மணற்காட்டில் இருவர் கைது

(கரணவாய்)
மணற்காட்டுப் பகுதியிலிருந்து கஞ்சா கடத்த முற்பட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து 6 கிலோ கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று செவ்வாய்க் 23

இறக்குமதியாகும்

## வெங்காயத்துக்கான வரி குறைப்பு

(கொழும்பு)
இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பெரிய வெங்காயத்திற்காக சுங்க வரி 39 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த விலைக்குறைப்பு நேற்று செவ்வாய்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரவுள்ளது.

சந்தையில் பெரிய 23

## அரசியலில் திடீர் திருப்பம்

# கூட்டணி தொடர்பில் மைத்திரி - சஜித் பேச்சு

(கொழும்பு) ஜனாதிபதித் தேர்தலில் கூட்டணி அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஐ.தே.க ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவும் அடுத்த சில தினங்களில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

மேற்படி சந்திப்பானது அரசியலில் திடீர் திருப்பத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(23ஆம் பக்கம் பார்க்க)


கோப்புப்படம்

## ஆசிரிய, ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)
ஜனாதிபதி தலைமையில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஆசிரியர் சேவை மற்றும் ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இதேவேளை ரயில்வே தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் விசேட அமைச்சரவைக் குழுவிற்குமிடையில் நேற்று மாலை இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவுற்றதால் வேலை நிறுத்தத்தை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று மாலை ரயில்வே தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் அமைச்சரவை உபகுழுவிற்கும் இடை 23

முன்னாள் பொலிஸ்மா அதிபர்

## பூஜித கைதாகி பிணையில் விடுதலை

(கொழும்பு)
கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவை பிணையில் விடுவித்தது கொழும்பு கோட்டை 23

நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு

## 15 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)
இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் உள்ளடங்கலாக நிறைவேற்றுநி 23

## பாம்புக்கடிக்கு இலக்கான குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
பாம்புக்கடிக்கு இலக்கான குடும்பப்பெண் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் ஆவடி, உடுவிலைச் சேர்ந்த சுமன்ராஜ் சுதர்சினி (வயது-28) என்ற 5 பிள்ளைகளின் தாயே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில மேலும் தெரிய வருகை 23

ஜே.வி.பி தலைவர்

## அநுரகுமார இன்று யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)
ஜே.வி.பியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடத் தீர்மானித்துள்ள அநுரகுமார திஸாநாய 23

நீதிமன்ற கட்டளையை பெற்றுச் சென்று

## அதனை அவமதித்த பிக்குவை மன்றில் முற்படுத்த முல்லை நீதிமன்றம் உத்தரவு

(முல்லைத்தீவு)
பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய தீர்த்தக் குளத்துக்கு அருகில் பௌத்த பிக்குவின் உடலைத் தகனம் செய்தமை தொடர்பில் நீதிமன்றின் கட்டளையைப் பெற்று அதனை அவமதித்த பௌத்த பிக்குவை மன்றில் முற்படுத்துமாறு முல்லைத்தீவு நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின் குமார், பொலிஸாருக்கு உத்தர 23

## நீராவியடி ஆலய சூழலில் சட்டத்தரணி மீது தாக்குதல்

வீடியோ ஆதாரங்களைப் பெற பொலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதி

(முல்லைத்தீவு)
நீராவியடி பிள்ளையார் ஆலய சூழலில் வைத்து சட்டத்தரணி சுகாஷ் உள்ளிட் 23

**ஜி.எச்.ஏ.டி சில்வா அன் கோ,**
**பிரதான வீதி, முல்லைத்தீவு**
**ஏல விற்பனை**

ஜி.எச்.ஏ.டி சில்வா அன் கோ, பிரதான வீதி, முல்லைத்தீவு நிறுவனத்தில் 01.07.2017 முதல் 30.12.2017 வரையான காலப்பகுதியில் வைக்கப்பட்ட அடகு நகைகள் யாவற்றையும் 09.11.2019 ற்கு முன்பாக மீட்கவும். மீட்க முடியாது விட்டால் ஒரு பகுதி பணத்தை செலுத்திப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத்தவறின் 10.11.2019ல் ஏலத்தில் விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**தொ.பே.இல : 077 665 2895** (487)


# மதுபான சாலைகள் நாளைபூட்டு

(கொழும்பு)

உலக மது ஒழிப்பு தினமான நாளை (ஒக்ரோபர் 3) வியாழக்கிழமை மதுபான சாலைகள் அனைத்தும் மூடப்படவேண்டும் என மதுவரித் திணைக்களம் அறிவித் துள்ளது.

இந்தக் கட்டளையை மீறுவோர் மீது நட வடிக்கை எடுக்க நாடுமுழுவதும் ஆயிரம் அலுவலகர் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்றும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள் ளது. மதுபான நிலையங்களில் விற்பனை செய்தல், மதுபானங்களை ஏற்றிச்செல்லல் மற்றும் விநியோ கித்தல் ஆகியன நாளை தடை செய் யப்பட்டுள்ளது. மீறி வோர் மீது சட்ட நட வடிக்கை எடுக்கப்ப டும் என்று மதுவரித் திணைக்களத்தின் உதவி ஆணையா ளர் கபில குமார சிங்க தெரிவித் தார். (ம-3)


HOTLINE 0777 17 35 17



**IT** மற்றும் **ஆங்கிலம்**
**இரட்டை டிப்ளோமா**
TVEC APPROVED CENTRE

ஒக்டோபர் மாதத்திற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IT Courses**
- Dip.in Information Teachnology
- Office Automation
- PC Application
- Microsoft Office
- Web Designing
- Hardware,Mulitmedia,
- Auto CAD,Java,C++,PHP

**DMI** COMPUTER EDUCATION
TVEC Reg.No.:P25/0056

NVQ COURSES
ICT -Full Time (Level 4 )
CAA -Full/Part Time

- இலங்கை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.
- NVQ சான்றிதழ்களை வழங்கிவரும் ஒரேஒரு தனியார் கணினி நிறுவனம்

(C-7764)

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்

DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
Reading Writing Listening Speaking
சர்வதேச ஆங்கிலப்பரீட்சைகள்
IELTS | IELTS Life Skills

சிங்கள வகுப்புக்கள் ஆரம்பம்
Sinhala Medium இல் கற்ற பட்டதாரி ஆசிரியரால் வகுப்புக்கள் அனைத்து கிளைகளிலும் நடாத்தப்படுகிறது.

**DMI COMPUTER EDUCATION**
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சிறுப்பிட்டி சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |


# மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

## திரு. வீரசிங்கம் சிவாகரன்



எமது கல்லூரியில் கணித பாட ஆசிரியராகச் சேவையாற்றித் தற்போது இலங்கை அதிபர் சேவை தரம் III நியமனம் பெற்றுள்ள எமது ஆசிரியர் **திரு.வீரசிங்கம் சிவாகரன்** அவர்களை நாம் மனம் மகிழ்ந்து வாழ்த்துவதோடு, அவர் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று வாழ்வில் உயர்ந்திட இறையருளை வேண்டி நிற்கின்றோம்.


**வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிச் சங்கம், யா/வட்டு இந்துக் கல்லூரி, சித்தன்கேணி.**

(490)

# மரண அறிவித்தல்

## கணபதி நாகசுந்தரம் (நாகமணி)

**பிறப்பு : 14.12.1941 இறப்பு : 30.09.2019**



கென்ஸ்மன் வீதி சாவகச்சேரியை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி நாகசுந்தரம் 30.09.2019 திங்கட்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - தெய்வி தம்பதியினரின் அன்பு மகனும் நாகேஸ் வரியின் அன்புக் கணவரும், நாகலக்ஸ்மி, நரேந் திரன், நாகராஜன், நாகநந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான குண்டு மணி, நல்லப்பு பாக்கியம் மற்றும் நடராஜா ஆகி யோரின் பாசமிகு சகோதரரும், நிஷாந்தி, பாலலோஜனன், ரேணு ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நாகேந்திரம் அவர்களின் அன்புமிக்க மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை நிகழ்வுகள் இன்று (02.10.2019) புதன்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத் திற்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி. (493) தகவல் : குடும்பத்தினர்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள்

**அமைச்சர் மனோகணேசன் (பா.உ)**

அவர்களால் 02.09.2019ஆம் திகதி கொழும்பு தாமரைத் தடாக மண்டபத்தில் அரச விருது வழங்கும் வைபவத்தில்

**"கலைமாமணி"**

என்ற விருதினைப் பெற்ற



**திரு.சின்னத்துரை சண்முகராசா**

**(முன்னாள் வருகைதரு விரிவுரையாளர், சித்திரமும் வடிவமைப்பும் அலகு, யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் ஓய்வுநிலைப் பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)**

**அவர்களை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

**1ஆம் அணி மாணவர்கள், சித்திரமும் வடிவமைப்பும் அலகு, யாழ்.பல்கலைக்கழகம்.**


(C-7763)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு

7ம் வட்டாரம், சிவநகர், புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் சின்னையா நாகராசா (மெக்கானிக்)**

**தோற்றம்** 08 03 1947



**மறைவு** 03 09 2019

கடந்த 03.09.2019 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு சின்னையா நாகராசா அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி நாளை 03.10.2019 (வியாழக்கிழமை) 7ஆம் வட்டாரம் சிவநகர் புதுக்குடியிருப்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

எனவே அவரது இல்லத்தில் நடைபெறும் 31ம் நாள் நினைவஞ்சலி மதிய போசன நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

7ஆம் வட்டாரம் சிவநகர், புதுக்குடியிருப்பு. (C 7748) தகவல் : குடும்பத்தினர் தொடர்புக்கு - 077 272 6692

# சிறுபான்மை மக்களை அச்சுறுத்தி பிரசாரம்

## மகிந்த அணியின் மீது பரணவிதான குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தோர் சிறுபான்மை மக்களை அச்சுறுத்தி தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டு வருவதாக குற்றம்சாட்டியிருக்கும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதான தாம் ஜனநாயக ரீதியிலேயே தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

நிதியமைச்சர் மங்கள சமரவீரவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குற்றம்சாட்டினார்.

அடுத்தவாரம் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் இடம்பெறவுள்ளது. அரசியல் கட்சிகள் அவற்றின் வேட்பாளர்களை நியமித்தவண்ணம் இருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சி அதன் பிரதித்தலைவர் சஜித் பிரேமதாசவை நிறுத்தியுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதித்தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைளை ஜனநாயக விதி முறைகளுக்கு இணங்க நாம் எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கவுள்ளோம்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தால் தேர்தலின் போது சட்டத்திற்கு புறம்பான செயற்பாடுகள் பல இடம்பெற்றன. நாம் தற்போது அவ்வாறான நிலையை மாற்றியமைத்துள்ளோம். ஆகவே, அவ்வாறான ஊழல் மிகுந்த தேர்தல் பிரசாரங்கள் இனி இடம்பெற மாட்டாது. மாறாக ஜனநாயக ரீதியாகவே தேர்தல் பிரசாரங்கள் ஐக்கிய தேசிய கட்சியால் முன்னெடுக்கப்படும்.

மேலும், ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவதற்கு அனைவருக்கும் சுதந்திரம் வழாங்கப்பட்டுள்ளது. அனைவருடைய எண்ணங்களுக்கும் சுயாதீனத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல் எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாஸவும் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்டதுடன், தேர்தல் பிரசார நடவடிக்கைகளும் முறையான விதத்திலேயே எதிர்காலத்தில் இடம்பெறவுள்ளன. தேசப்பற்றுள்ள மக்கள் யார் பக்கம் உள்ளார்கள் என ஜனாதிபதித்தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளின் போது கண்கூடாகப் பார்க்க முடியும் என. அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வாகன விபத்தில் மாணவன் மரணம்

(திருகோணமலை)

பாடசாலை மாணவன் ஒருவர் வீதி விபத்தில் உயிரிழந்தார்.

திருகோணமலை - மஹமொரகந்த பிரதேசத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்திலேயே குறித்த மாணவன் உயிரிழந்தார்.

லொறி ஒன்றும் சைக்கிளும் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு இச்சம்பவத்தில் காயமடைந்த மாணவனை வைத்தியசாலையில் அனுமதித்த பின் சிகிச்சை பலனின்றி மாணவன் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# வெற்றி நிச்சயம் - 2021

அமரர்களான வெக்டர் போ.வேலாயுதம், ஆ.மகாதேவன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக நடைபெறும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை

உயிரியல் பாடத்தில் முதன்மை பெறுபேறுகள்-2021 (உ/த) உயிரியல் பிரிவு

| சுட்டெண் | மாணவர் பெயர் | பாடசாலை | புள்ளிகள் ஜூன் | புள்ளிகள் ஜூலை | புள்ளிகள் ஓகஸ்ட் | சராசரி | தர நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 213016 | Balendren Apiram | J/ Jaffna Hindu College | 92.20 | 93.10 | 93.90 | 93.07 | 1 |
| 213019 | Arulmoli Harshan | J/ Jaffna Hindu College | 92.70 | 88.30 | 96.20 | 92.40 | 2 |
| 212031 | கிருஸ்ணகுமார் டிறோஜன் | யா/ ஹாட்லி கல்லூரி | 96.30 | 88.42 | 83.30 | 89.34 | 3 |
| 212568 | சர்மினி ஜெயராஜா | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 95.60 | 92.14 | 79.30 | 89.01 | 4 |
| 213010 | Sivakonesan Sivamsan | J/ Jaffna Hindu College | 92.30 | 83.30 | 91.30 | 88.97 | 5 |
| 211008 | லோகேஸ்வரன் ஸ்ரீஹரீரன் | யா/ யாழ்ப்பாணக் கல்லூரி | 93.40 | 84.50 | 88.80 | 88.90 | 6 |
| 212566 | தனுஷ்கா சசிகரன் | யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | 95.50 | 84.57 | 85.60 | 88.56 | 7 |
| 213501 | Arani Sriskantharajah | J/ Vembadi Girls' High School | 89.80 | 88.90 | 86.50 | 88.40 | 8 |
| 211693 | மவ்ஷாலி ரவி | க/ இந்து தேசிய கல்லூரி | 84.60 | 91.14 | 88.80 | 88.18 | 9 |
| 213507 | Kirthiga Ravishangar | J/ Vembadi Girls' High School | 93.10 | 84.60 | 85.20 | 87.63 | 10 |
| 213529 | Mayooraky Sureshkumar | J/ Kokuvil Hindu College | 87.20 | 86.50 | 88.40 | 87.37 | 11 |
| 212017 | ஸ்ரீலயேந்திரா சாதனன் | யா/ ஹாட்லி கல்லூரி | 91.90 | 88.71 | 80.70 | 87.10 | 12 |
| 211588 | மருதசகி சிவநேசன் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 91.10 | 78.57 | 91.30 | 86.99 | 13 |
| 212501 | மேரிலக்ஷிகா யுஸ்ரின்குரூஸ் | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 89.40 | 86.00 | 84.50 | 86.63 | 14 |
| 211522 | நிதுஷா உதயராஜ் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 88.80 | 75.29 | 95.40 | 86.50 | 15 |
| 211665 | கீர்த்தனா இராஜமுகுந்தன் | யா/ யாழ்ப்பாணக் கல்லூரி | 87.80 | 84.90 | 85.70 | 86.13 | 16 |
| 213500 | Ashwinie Sivachandran | J/ Vembadi Girls' High School | 92.20 | 75.60 | 90.50 | 86.10 | 17 |
| 213021 | Lakshman Lavan | J/ Jaffna Hindu College | 94.20 | 76.30 | 87.50 | 86.00 | 18 |
| 211005 | அருளழகன் வெற்றிதரன் | யா/ வட்டு இந்துக் கல்லூரி | 82.80 | 86.70 | 88.10 | 85.87 | 19 |
| 212553 | சுவாங்கி தோமஸ்யூட் | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 90.40 | 83.85 | 82.00 | 85.42 | 20 |
| 212516 | விஷ்ணுஜி கதிரமலை | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 90.90 | 84.42 | 80.50 | 85.27 | 21 |
| 213001 | Thevananth Abiram | J/ Jaffna Hindu College | 87.50 | 83.30 | 84.30 | 85.03 | 22 |
| 211602 | விதுஸ்சனா மோகன்ராஜ் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 81.70 | 91.00 | 81.30 | 84.67 | 23 |
| 211513 | சிவனயா சிவகானந்தன் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 87.80 | 81.43 | 83.80 | 84.34 | 24 |
| 211521 | மிதுலா உருத்திரமூர்த்தி | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 89.80 | 76.71 | 85.60 | 84.04 | 25 |
| 213531 | Sharangi Ganeshalingam | J/ Vembadi Girls' High School | 89.50 | 77.70 | 84.80 | 84.00 | 26 |
| 212567 | அபிநயா மனோராஜா | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 92.30 | 77.28 | 82.40 | 83.99 | 27 |
| 211060 | அருள்நாதன் துவாரகன் | யா/ யாழ் இந்து கல்லூரி | 86.10 | 78.70 | 86.70 | 83.83 | 28 |
| 212569 | பைரவி சேந்தன் | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 91.20 | 84.85 | 75.00 | 83.68 | 29 |
| 211607 | யதுஷா கனகரத்தினம் | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 85.50 | 80.42 | 84.90 | 83.61 | 30 |
| 212554 | டிவின்சியா யோகராசா | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 93.70 | 75.00 | 80.70 | 83.13 | 31 |
| 211581 | சரணியா ஜெயபாலன் | யா/ புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி | 88.70 | 82.71 | 77.10 | 82.84 | 32 |
| 211547 | வைஷ்ணவி லோகநாதன் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 77.30 | 86.42 | 84.00 | 82.57 | 33 |
| 211033 | குணசேகரன் சாருஜன் | யா/ மானிப்பாய் இந்து கல்லூரி | 74.30 | 86.10 | 86.70 | 82.37 | 34 |
| 212005 | புவனேந்திரன் சயன் | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 85.70 | 84.28 | 77.00 | 82.33 | 35 |
| 211508 | கார்த்திகா காண்டீபராசா | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 84.10 | 78.42 | 84.30 | 82.27 | 36 |
| 211517 | சங்கவி பாலசிங்கம் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 91.70 | 65.29 | 89.50 | 82.16 | 37 |
| 211618 | கயல்விழி மகேஸ்வரநாதன் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 76.60 | 89.57 | 79.10 | 81.76 | 38 |
| 212505 | சங்கவி ரவிக்குமார் | யா/ நெல்லியடி மத்திய கல்லூரி | 90.20 | 81.71 | 73.10 | 81.67 | 39 |
| 213012 | Kalaiselvan Keerththikan | J/ Jaffna Hindu College | 76.60 | 81.10 | 87.30 | 81.67 | 40 |
| 212533 | நிவாஷிகா சண்முகநாதன் | யா/ நெல்லியடி மத்திய கல்லூரி | 87.90 | 79.14 | 77.70 | 81.58 | 41 |
| 211617 | தரணிகா ஜோறம் அனசிலி | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 82.90 | 83.57 | 77.50 | 81.32 | 42 |
| 212576 | பிரியங்கா வெற்றிவேலாயுதம் | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 89.50 | 84.57 | 69.00 | 81.02 | 43 |
| 213011 | Sivakumar Nisayeesan | J/ St. John's College | 90.50 | 74.50 | 77.90 | 80.97 | 44 |
| 212018 | பாஸ்கர் சிந்துஜன் | யா/ ஹாட்லி கல்லூரி | 85.40 | 79.28 | 76.10 | 80.26 | 45 |
| 211663 | கிருஸ்ணவி உதயகுமார் | யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி | 82.70 | 74.70 | 83.20 | 80.20 | 46 |
| 212558 | ஹம்சவி உமாசங்கர் | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 88.90 | 86.57 | 64.60 | 80.02 | 47 |
| 212530 | திருமகள் விநாயகமூர்த்தி | யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி | 88.70 | 78.42 | 72.90 | 80.01 | 48 |
| 211046 | டிலோன்ரத்னா டேவிட் லிவிங்ஸ்ரன் | யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி | 71.60 | 80.70 | 87.60 | 79.97 | 49 |
| 212555 | கிவிர்த்திகா விஜேந்திரன் | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 87.60 | 84.42 | 67.80 | 79.94 | 50 |
| 213510 | Semparathy Puspasothy | J/ Jaffna College | 83.10 | 74.50 | 82.00 | 79.87 | 51 |
| 212559 | வேணுஜா நந்தகுமார் | யா/ இடைக்காடு மகா வித்தியாலயம் | 83.00 | 80.71 | 75.70 | 79.80 | 52 |
| 211566 | அபிசாயினி சிவனேசன் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 74.50 | 83.28 | 81.60 | 79.79 | 53 |
| 213006 | Arul Dino Sowmiyan | J/ St.Patrick's College | 85.20 | 71.40 | 82.40 | 79.67 | 54 |
| 212032 | நாகேஸ்வரன் விதுஷணன் | யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி | 90.70 | 76.00 | 72.20 | 79.63 | 55 |
| 211091 | கெங்கேஸ்வரன் மதுசங்கர் | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 79.30 | 76.00 | 83.30 | 79.53 | 56 |
| 213521 | Abiramy Thirulinganathan | J/ Vembadi Girls' High School | 88.10 | 69.20 | 80.40 | 79.23 | 57 |
| 213528 | Thamilmathy Thaneskumar | J/ Vembadi Girls' High School | 86.80 | 72.40 | 78.40 | 79.20 | 58 |
| 211097 | விக்னேஸ்வரன் டிலக்ஷன் | யா/ யாழ் மத்திய கல்லூரி | 72.20 | 74.14 | 90.60 | 78.98 | 59 |
| 212001 | நித்தியஜோதி சஹீர்ராம் | யா/ ஹாட்லி கல்லூரி | 75.20 | 83.71 | 77.90 | 78.94 | 60 |
| 211023 | ஏகாந்தநாதன் தவசுதன் | யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி | 85.50 | 77.40 | 73.80 | 78.90 | 61 |
| 212514 | மதுரா பாக்கியகுமார் | யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி | 82.40 | 80.57 | 73.40 | 78.79 | 62 |
| 211657 | சுவர்ணா சச்சிதானந்தம் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 75.90 | 80.10 | 80.30 | 78.77 | 63 |
| 211510 | றெஜினி தானியா கமலடாசன் | யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 76.00 | 71.57 | 88.50 | 78.69 | 64 |
| 213513 | Sneha Anton Alvenas | J/ Uduvil Girls' College | 82.20 | 72.50 | 81.20 | 78.63 | 65 |
| 213018 | Shanthakumar Prashanth | J/ Jaffna Hindu College | 85.80 | 74.10 | 75.60 | 78.50 | 66 |
| 213505 | Paheerathy Thavaratnam | J/ Vembadi Girls' High School | 80.60 | 74.90 | 79.90 | 78.47 | 67 |
| 213524 | Jathusha Ragavan | J/ Vembadi Girls' High School | 79.30 | 74.40 | 81.70 | 78.47 | 68 |
| 211528 | சங்கவி கங்காதரன் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 86.50 | 68.71 | 79.90 | 78.37 | 69 |
| 213020 | Yogarajah Achuthan | J/ Jaffna Hindu College | 78.40 | 75.50 | 79.30 | 77.73 | 70 |

☞ ஆங்கிலமொழி மூலப் பரீட்சார்த்திகளின் விபரங்கள் ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளன.

☞ பரீட்சைக்குத் தோற்றிய ஏனைய மாணவர்களின் பெறுபேறுகளை அறிய விரும்பும் பெற்றோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
பரீட்சை இணைப்பாளர்கள் யாழ்ப்பாணம்- +94777917611 வடமராட்சி - +94778884068

New Science Hall
Kannathiddy, Jaffna.

(C-7760)

Beacon Study Centre
Vathiry, Karaveddy

## பாபர் அசம் சதம்

# இலங்கையை வென்றது பாகிஸ்தான்



பாகிஸ்தான் அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது.

இலங்கை அணி, பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அங்கு ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் இரு அணிகளுக்கிடையேயான முதல் ஒருநாள் போட்டி மழையால் பாதிக்கப்பட்டதால், இரண்டாவது ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் பகல்-இரவு ஆட்டமாக கராச்சியில் நடைபெற்றது.

அதன் படி நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி, துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அந்த அணியின் பகர் ஜமான், இமாம் உல் ஹக் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 73 ஓட்டங்கள் சேர்த்த போது, இமாம் உல் ஹக் 31 ஓட்டங்களிலும், பகர் ஜமான் 54 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த பாபர் அசம் இலங்கை அணியின் பந்து வீசசை அற்புதமாக எதிர்கொண்டு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

சொந்த நாட்டில் முதல் சர்வதேச ஒருநாள் போட்டியில் களம் இறங்கிய அவர், 11-வது சதத்தை பூர்த்தி செய்தார். தொடர்ந்து விளையாடிய அவர் 105 பந்தில் 8 பவுண்டரி, 4 சிக்சர்களுடன் 115 ஓட்டங்கள் குவித்தார்.

ஹரிஸ் சோஹைல் 48 பந்தில் 40 ஓட்டங்களும், இப்திகார் அகமது 20 பந்தில் 32 ஓட்டங்களும் அடிக்க பாகிஸ்தான் அணி இறுதியாக 50 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 305 ஓட்டங்கள் குவித்தது.

அதன் பின் 306 ஓட்டங்கள் குவித்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை துடுப்பெடுத்தாடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக குணதிலகா மற்றும் சமர விக்ரமா களம் இறங்கினர்.

இருவரும் இணைந்து நிதானமாக ஓட்டங்களை குவிக்க தொடங்கிய நிலையில் ஆட்டத்தின் 3.6வது ஓவரில் சமர விக்ரமா தனது விக்கெட்டை பறிகொடுத்தார்.

இதனையடுத்து பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் இலங்கை அணி வீரர்கள் குணதிலகா (14), அவிஷ்கா பெர்னாண்டோ (0), திரிமானே (0), பெர்னாண்டோ (1) தொடர்ந்து விக்கெட்டை பறிகொடுத்தனர்.

இதனை தொடர்ந்து களம் இறங்கிய ஜெயசூர்யா, ஷனகா ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இருவரும் இணைந்து அணியின் ரன் விகிதத்தை உயர்த்திய நிலையில் ஆட்டத்தின் 40.5வது ஓவரில் ஜெயசூர்யா 96 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் உஷ்மான் பந்து வீச்சில் தனது விக்கெட்டை இழந்தார்.

அதன் பின் ஷனகா (68) ஓட்டங்களில் ஆட்டம் இழக்க, 46.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 238 ஓட்டங்கள் எடுத்து 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது.

பாகிஸ்தான் அணி தரப்பில் உஷ்மான் 5 விக்கெட்களையும், கான் 2 விக்கெட்களையும், அமிர், வாசிம், ரியாஷ் தலா ஒரு விக்கெட்களையும் வீழ்த்தினர்.

இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் அணி 1-0 என்று முன்னிலையில் உள்ளது. முதல் போட்டி மழையால் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மேரிலிபோன் கிரிக்கெட் கழகத்தின் தலைவராக

# இலங்கை கிரிக்கெட் ஜாம்பவான் குமார் சங்கக்கார பதவியேற்றார்



இலங்கை ஜாம்பவானும், முன்னாள் அணித்தலைவருமான குமார் சங்கக்கார, உலகின் தலை சிறந்த மேரிலிபோன் கிரிக்கெட் கிளப்பின் (எம்.சி.சி) தலைவராக பதவியேற்றார்.

எம்.சி.சி.யின் முதல் பிரித்தானியர் அல்லாத தலைவராக திகழும் சங்கக்கார, எதிர்வரும் ஒரு வருடம் இப்பதவியை வகிப்பார்.

உலக கிரிக்கெட்டில் மிகப் புகழ்பெற்ற கிரிக்கெட கிளப்புகளில் மேரிலிபோன் கிரிக்கெட் கிளப்பும் ஒன்றாகும். லண்டனில் உள்ள இந்த கிளப் சுமார் 232 ஆண்டுகளாக இயங்கி வருகிறது.

எம்.சி.சி தலைவரின் மதிப்புமிக்க பதவியை வகிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன், ஒரு வருடம் வியக்கத்தக்க கிரிக்கெட்டைக் கட்டமைக்க எம்.சி.சி உடன் கடுமையாக உழைக்க எதிர்பார்க்கிறேன் என்று முன்னாள் இலங்கை அணித்தலைவர் கூறினார்.

நாங்கள் விரும்பும் விளையாட்டுக்கு அதிகமான ஆதரவாளர்களை மாற்றுவதற்கும், கிரிக்கெட்டிற்கும் அதன் சமூகங்களுக்கும் எம்.சி.சி உள்நாட்டிலும், தேசிய அளவிலும், உலக அளவிலும் செய்யும் அருமையான பணிகளைப் பற்றி அவர்களுக்குக் கற்பிப்பதற்கான வாய்ப்பை நாங்கள் பெற்றுள்ளோம் என கூறினார்.

சங்கக்காரவுக்கு எம்.சி.சி உடன் நீண்ட தொடர்பு உள்ளது. அவர் 2002ல் கிளப்புக்கு எதிராக விளையாடினார். Chesterfield-ல் உள்ள குயின்ஸ் பூங்காவில் நடந்த முதல் தர போட்டியில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணிக்கான ஆரம்ப துடுப்பாட்டகாரராக களமிறங்கினார்.

2005-ல் சுனாமி நிவாரணப் போட்டியில் லார்ட்ஸில் நடந்த சர்வதேச லெவ்ன் அணிக்கு எதிராக எம்.சி. சி.க்காக விளையாடினார்.

இந்த ஆண்டு மே மாதம் லார்ட்ஸில் நடந்த எம்.சி.சி ஆண்டு பொதுக் கூட்டத்தில், விடைபெறும் தலைவர் Anthony Wreford, சங்கக்காரவின் நியமனத்தை அறிவித்தார்.

அடுத்த 12 மாதங்களில் எம்.சி.சி தலைவராக பொறுப் பேற்க குமார் சங்கக்காரவை விட சிறந்த நபர் வேறு யாரும் இல்லை என்று Wreford கூறினார்.

சமூகங்களை ஒன்றிணைக்கும் சக்தி கிரிக்கெட்டிற்கு இருப்பதாக அவர் தீவிரமாக நம்புகிறார், மேலும் எம்.சி.சி செய்யும் முக்கியமான பணிகளுக்கு ஒரு முக்கிய தூதராக சங்கக்கார இருப்பார் என Wreford கூறினார்.(ம)

## இந்தியா - தென்னாபிரிக்கா

# முதல் டெஸ்ட் இன்று ஆரம்பம்




இந்தியா- தென்னாபிரிக்கா இடையேயான 3 டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் டெஸ்ட் போட்டி விசாகப்பட்டினத்தில் இன்று ஆரம்பமாகின்றது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 3 போட்டிகளைக்கொண்ட 20 ஓவர் தொடர் 1-1 என்ற கணக்கில் சம நிலையில் முடிந்தது. முதல் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. 2-வது ஆட்டத்தில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்திலும், 3-வது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா 9 விக்கெட் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றன.

இந்தியா- தென்னாபிரிக்கா இடையேயான 3 டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் டெஸ்ட் ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் இன்று தொடங்குகிறது.

விராட்கோலி தலைமையிலான இந்திய அணி வெற்றியுடன் கணக்கை தொடங்கும் ஆர்வத்தில் உள்ளது. இந்திய அணி சமீபத்தில் வெஸ்ட் இண்டீஸ் மண்ணில் 2 டெஸ்டிலும் வென்று தொடரை கைப்பற்றியது. இதனால் தென்னாபிரிக்காவை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும்.

இந்தியா: விராட்கோலி (கப்டன்), அகர்வால், சுப்மன் ஹில், புஜாரா, ரகானே, விகாரி, ரோகித்சர்மா, ஜடேஜா, ரிஷப்பந்த், விர்த்திமான் சஹா, இஷாந்த் சர்மா, உமேஷ் யாதவ், குல்தீப் யாதவ், அஸ்வின், முகமது ஷமி.

தென்னாபிரிக்கா: டு பெலிசிஸ் (கப்டன்), எல்கர், மர்கிராம், பவுமா, குயின்டன் டிகாக், ரபடா, பிலாண்டர், கேசவ் மகராஜ், டி புருயின், கிளாசன், நிகிடி, செனுரான் முத்துசாமி, ஆன்ரிச் நோர்ட்ஜே, டானே பியட், சுபையர் ஹம்சா. (ம)

ஜி.எச்.ஏ.டி. சில்வா அன் கோ
A9, வீதி, கிளிநொச்சி.

ஏல விற்பனை


ஜி.எச்.ஏ.டி சில்வா அன் கோ, A9 வீதி, கிளிநொச்சி. நிறுவனத்தில் 01.07.2017 முதல் 30.12.2017 வரையான காலப்பகுதியில் வைக்கப்பட்ட அடகு நகைகள் யாவற்றையும் 09.11.2019ற்கு முன்பாக மீட்கவும். மீட்க முடியாது விட்டால் ஒரு பகுதி பணத்தை செலுத்தி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத்தவறின் 10.11.2019ல் ஏலத்தில் விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தொ.பே. இல. 0770034133 (487)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

பணிநிலை வேண்டுகை

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் நாறோ நிறுவனத்தில் செயற்றிட்டமுகாமையாளராக பணியாற்றுவதற்கு அதாவது புதிய செயற்றிட்டங்களை ஆங்கிலத்தில் வரையும் ஆற்றல் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வேதனம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதி 15.10.2019 தொலைபேசி இல : 021 228 3659, மின்னஞ்சல் முகவரி - nahrongo@gmail.com (C-7743)



# ஞானசார தேரருக்கு நாவடக்கம் வேண்டும்



## ஈ.பி.ஆர்.எல்.எவ்.இடித்துரைப்பு

**(யாழ்ப்பாணம்)**

**இலங்கை சிங்கள பௌத்த நாடு. இதை ஏற்பவர்கள் இந்த நாட்டில் இருக்கலாம். ஏனையோர் தங்களது உடைமைகளுடன் வெளியேறலாம் என்று பொதுபலசேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கருத்து வெளியிட்டுள்ளார். அவரது இக்கருத்தானது இனங்களுக்கிடையில் குரோதத்தையும் வன்முறையையும் தூண்டுவதாக அமைந்துள்ளது எனத் தெரிவித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது கண்டனத்தை வெளியிட்டது:**

இது குறித்து ஈ.பி.ஆர்.எல். எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கையின் அரசியல் சாசனத்தின் பிரகாரம் இத்தீவானது ஜனநாயக சோசலிசக்குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது சிங்கள பௌத்த நாடு என்று எந்தவொரு சட்டத்திலும் குறிப்பிடப்படவில்லை என்பதை சிங்கள பௌத்த இனவாதத்திற்குள் புதைந்து கிடக்கும் ஞானசார தேரர் போன்ற பிக்குகளும் அவர்களின் வாரிசுகளும் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கை என்பது பலமொழி, பலமத,பல இனங்களைக் கொண்ட நாடு என்றும் வடக்கு-கிழக்கு என்பது தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுப் பூர்வமான வாழ்விடம் என்றும் 1987 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்டுள்ள இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் முதலாவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் ஏற்றுக்கொண்டு கையொப்பமிட்டுள்ளனர்.

ஆகவே இலங்கை என்பது ஒரு சிங்கள பௌத்த நாடென்ற ஞானசார தேரரின் திமிர்த்தனமான கருத்தும் அதனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் வெளியேறலாம் என்னும் ரௌடித்தனமான கருத்தும் மிகமிக வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இராவணபலய என்ற ஒரு அமைப்பு சிங்கள பௌத்த தீவிரவாதிகளால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பெயரில் இருக்கும் இராவணன் யார்? இலங்காபுரியின் மன்னனாக இருந்த இராவணன் என்பது குறிப்பிடத்தக்கது. இராமாயணம் நடந்த காலகட்டம் என்பது ஏறத்தாழ பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

அவ்வாறிருக்குமாக இருந்தால் சிவபக்தனான இராவணனின் காலகட்டமும் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகவே இருக்க முடியும். எனவே, விஜயன் வருவதற்கு முன்பும் பௌத்தம் வருவதற்கு முன்பும் சிங்களமொழி தோன்றுவதற்கு முன்பும் இங்கு சிவபக்தர்கள் இருந்தார்கள் என்பதும் சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் இருந்தார்கள் என்பதும் வெளிப்படையானது.

பிரிட்டிஷார் இந்த நாட்டிற்கு வந்த போதும்கூட, கண்டிராச்சியத்தின் நீதிமன்ற மொழியாக தமிழே இருந்ததென்னும் வரலாற்றை நாம் பார்க்கின்றபோது இந்நாட்டின் வரலாற்றுப் பூர்வமான பூர்வீகக்குடிகள் தமிழர்களே என்பது நிதர்சனமானது.

இவ்வாறான சூழ்நிலையில், தமிழர்களையோ,தமிழ் பேசும் ஏனைய இனத்தவரையோ இந்நாட்டை விட்டுவெளியேறும்படி கூறுவதையும் சிங்களத்தைப் படிக்கச் சொல்லி கர்ஜிப்பதும் அறிவிலித்தனமானதாகும். பெரும்பான்மைச் சமூகத்து மதப் பிரமுகர்கள் என்ற அடிப்படையில், சிறுபான்மை மக்களை அடக்கியாளலாம், சிறுபான்மை மதங்களை அழித்தொழிக்கலாம் என்ற இழிவான சிந்தனை இனி மேலும் சிங்கள பௌத்த மேலாதிக்கவாதிகளிடம் இருக்கக்கூடாது.

ஞானசார தேரர் அண்மையில் முல்லைத்தீவிற்குச் சென்றிருந்தார் என்பதும் அங்கு நீதிமன்றக் கட்டளையைப் புறக்கணித்து நீராவியடி பிள்ளையார் கோயிலில் பலாத்காரமாக உட்கார்ந்திருந்த பௌத்தபிக்குவின் உடலை அக்கோயில் அருகாமையிலேயே தகனம் செய்வதற்கு முன்னின்று செயற்பட்டார் என்பதும் அண்மைய செய்திகள்.

முல்லைத்தீவிற்குப் போனதும் தமக்கு தமிழகத்திற்குப் போனதான ஒருமன உணர்வு ஏற்பட்டதாக ஞானசார தேரர் அங்கலாய்த்திருக்கின்றார். ஞானசார தேரர் ஒருவிடயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். வடக்கு-கிழக்கு மாகாணங்களின் எட்டு மாவட்டங்களிலும் தமிழ் பேசும் மக்களே பெரும்பான்மையாக வாழ்கின்றனர் என்பதையும் சிங்கள பௌத்த மக்கள் என்பவர்கள் சிறிய அளவிலேயே வாழ்கிறார்கள் என்பதையும் இலங்கையின் குடிசன புள்ளி விபரங்களிலிருந்து அறிந்து கொள்ள முடியும். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு, நல்லிணக்கம் ஏற்படவேண்டுமாக இருந்தால் இவற்றைப் புரிந்து கொண்டு கருத்துக்களை வெளியிடுவதே சிறப்பாக இருக்கும்.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்குகிற ஒருகாலகட்டத்தில், ஞானசார தேரர் வெளியிட்டிருக்கும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான காட்டமான கருத்துக்கள் என்பது, சிங்கள பௌத்த வாக்குகளை ஒரு கட்சியை நோக்கிக் குவிப்பதை நோக்கமாகக் கொண்டு, தேர்தல் காலகட்டத்தில் ஒரு பதற்றமானதும் தமிழன விரோதமானதுமான ஒரு சூழ்நிலையை உருவாக்க நினைக்கிறாரோ என்று சிந்திக்கத் தூண்டுகிறது.

ஏற்கனவே நீதிமன்றத்தை அவமதித்ததன் காரணமாக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டவர்தான் இந்த ஞானசார தேரர். ஆனால் மீண்டும் நீதிமன்றத்தை அவமதித்து நீதிமன்றக் கட்டளையை மீறி செயற்பட்டுக் கொண்டிருப்பவர்தான் இந்த புத்த பிக்கு. எனவே, மற்றவர்களுக்கு அறிவுரை கூறுவதற்கோ அல்லது மேலாதிக்க சிந்தனையிலிருந்து ஏனையோருக்கு உத்தரவு போடுவதற்கோ ஞானசார தேரருக்கோ அல்லது அவரது வாரிசுகளுக்கோ எத்தகைய அருகதையுமில்லை என்பதை சிங்கள பௌத்த மேலாதிக்கவாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

நீதிமன்றத்தை அவமதித்ததன் காரணமாக தண்டனை பெற்று சிறைவாசம் அனுபவித்த ஞானசார தேரர், மீண்டும் ஒருமுறை அவ்வாறான நீதிமன்ற அவமதிப்புக்களில் ஈடுபடமாட்டார் என்பதாலும் இனங்களுக்கிடையில் குரோத உணர்வுகளை வளர்க்க மாட்டார் என்ற அடிப்படையிலுமே அவருக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதாக நாங்கள் அறிகிறோம்.

ஆனால் வெளியில் வந்து சில மாதங்களுக்குள்ளேயே நீதிமன்றக் கட்டளையை ஏற்க மறுத்து, பௌத்த பிக்குகள் சொல்வதுதான் முதன்மையானது என்றும் நீதிமன்றக்கட்டளைகள், தீர்ப்புக்களையும் விட தனது தான்தோன்றித்தனமான கருத்துக்கள் தான் உயர்ந்தது என்றும் செயற்படக்கூடிய இந்த பௌத்த பிக்கு தொடர்பாக இலங்கை அரசாங்கமும் இலங்கையின் நீதித்துறையின் உயர்பீடமும் எத்தகைய தீர்மானங்களை மேற்கொள்ளப் போகின்றன என்பதை தயவு செய்து மக்களுக்கு அறியத் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இனத்துவேஷத்தையும் இனமோதலையும் உருவாக்கக்கூடிய ஞானசார தேரரின் கருத்துக்களை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மீண்டும் ஒருமுறை வன்மையாகக் கண்டிக்கிறது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

---

### ஞானசார தேரர் உள்ளிட்ட

# இனவெறிக் கும்பலைக் கைதுசெய் யாழில் ஆர்ப்பாட்டப் பேரணி!

## தமிழ் ஈழ விடுதலை இயக்கம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு நீதிமன்றத்தின் கட்டளையை அவமதித்து சட்டத்தை கையில் எடுத்த ஞானசார தேரையும் அவரின் தலைமையிலான இனவெறிக் கும்பலையும் கைது செய்து நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றுக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் அழைப்பு விடுத்தது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் யாழ்.நகரில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி எந்த வித கட்சி அரசியலையும் கலக்காமல் ஒன்றுபட்ட தமிழினத்தின் உணர்வலைகளை அரசுக்கு உணர்த்தும் வகையில் பொது மக்கள் ஆர்ப்பாட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்து நீதி கோரும் குரல்கள் பேரலையாக எழுவதை உறுதிப்படுத்த முன்வருமாறு யாழ்.மாவட்டத்தில் செயற்படும் சகல சமய, சமூக பொது அமைப்புக்களையும் தொழிற் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், மற்றும் யாழ்.பல்கலைக்கழக சமூகம் உட்பட அனைத்து தரப்பினரையும் நாம் அழைக்கின்றோம்.

தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தினதும் ஆதரவையும் பங்களிப்பையும் இந்த போராட்டத்தில் நாம் நாடி நிற்கின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

---

# டீ.ஏ.ராஜபக்ஷ அருங்காட்சியக வழக்கு எதிர்வரும் 14ஆம் திகதி

(கொழும்பு)



வீரகெட்டிய, மெதமுலன டீ.ஏ.ராஜபக்ஷ ஞாபகார்த்த அருங்காட்சியகம் தொடர்பில் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கை இடைநிறுத்த பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நீடிக்கப்பட்டது.

இந்நிலையில் டி.ஏ.ராஜபக்ஷ அருங்காட்சியகம் தொடர்பில் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கை இடைநிறுத்த பிறப்பிக்கப்பட்ட உத்தரவு எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

டீ.ஏ.ராஜபக்ஷ நினைவுத் தூபி மற்றும் நூதனசாலை அமைப்பதற்கு அரச நிதியைப் பயன்படுத்தியதாக கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பேர் மீது குற்றம் சாட்டப்பட்ட வழக்கே இவ்வாறு ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி வரை கொழும்பு நீதிமன்றத்தால் நேற்று நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஒருவரின் பெயரின் அதிர்ஷ்டம்

## உயிரிலேயே அடங்கி இருக்கிறது பெயரியல்

**அதிர்ஷ்ட சோதிடம்**

''அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது'' என்பது ஒளவையின் வாக்கு. ஓரறிவு முதல் ஆறறிவு வரை உலகில் மொத்தம் எண்பது இலட்சம் யோனி பேத உயிர்கள் உள்ள தாக சாஸ்திரங்கள் உரைக்கின்றன.

அவற்றிலெல்லாம்தப்பி மனிதப் பிறவியில் நாம் ஜனனம் கொண்டது இறைவன் நமக்கு வழங்கிய அருட்கொடையே ஆகும்.

மானிட ஜென்மம் கொண்டதே வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்குத்தான். ஆனால் மனிதன் அப்படி வாழ முடியாமல் புழுவைப் போலத் துன்பங்களிலும் துயரங்களிலும் நெளிந்து கொண்டிருக்கிறான்.

இன்பம் எங்கே இருக்கிறது? சுகத்தைப் பெறுவதற்கான சூத்திரம் என்ன? அதன் சூட்சுமம் தான் என்ன?

இறைவன் ஓரவஞ்சனை உடையவன் அல்லன். எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றும் அறியாதவன் அவன்.

ஆனால் நாம் பிரத்தியட்சமாக காணக் கூடியதென்ன? வெகு சிலரே சகல சௌபாக்கியங்களும் பெற்று சௌக்கியமாக வாழ்கின்றனர்.

மற்ற எல்லோரும் "அது இருந்தால் இது இல்லை இது இருந்தால் அது இல்லை. அதுவும் இதுவும் சேர்ந்திருந்தால் அவனுக்கிங்கே இடமில்லை" என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடியபடி ஏதாவது குறைபாட்டுடன் தான் வாழ்வை நகர்த்துகிறார்கள்.

இதற்குக் காரணமென்ன? ''மரத்தை மறைத்து மாமத யானை மரத்தில் மறைந்தது மாமதயானை" எனத் திருமூலர் உரைத்த மாதிரி ஏதோ ஒன்று உண்மை நிலையை உண்ரயொண்ணாமல் மறைத்துக் கொண்டிருக்கிறது.

இதைப் பற்றி நான் தீவிரமாகச் சிந்தித்தேன். பல்வேறு கால தேச வர்த்தமானங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கையை ஆழமாக ஆராய்ந்தேன்.

அப்போது நான் கண்ட உண்மைதான் உயிரிலேயே பெயரியலில் அடங்கியிருக்கிறது என்பது.

துயரோடு நித்தம் நித்தம்
துன்பத்தில் உழலச் செய்யும்
புயலான வாழ்வில் உள்ள
புதிரினைக் காண்பதற்காய்
அயராமல் தேடல் கொண்டேன்
ஆராய்ச்சி பலவும் செய்தேன்
பெயரேதான் வாழ்க்கை என்னும்
பேருண்மை அறிந்து
கொண்டேன்

எண்ணங்கள் தான் வாழ்க்கையை அமைக்கின்றன என்று மேலைநாட்டு அறிஞர் ஜேம்ஸ் ஆலன் கண்டறிந்து அதை நிரூபித்தார். அந்த எண்ணங்களை அமைப்பது ஒருவனின் பெயர் தான் என்பதை நான் கண்டறிந்து நிரூபித்துள்ளேன.

குறிப்பிட்ட ஒரு பெயரை, குறிப்பிட்ட ஒரு நபரைக் குறிப்பிட்டுத் தொடர்ந்து கூப்பிட்டால் அந்த சப்த அலைகளால் சலனம் ஏற்பட்டு அம்மனிதன் குறிப்பிட்ட ஒரு குணமுள்ளவனாக வடிவமைக்கப்பட்டு விடுகிறான்.

பெயரிலிருந்து வரும் வெறும் சப்தத்தால் இது எப்படிச் சாத்தியமாகும் என்று பலர் சந்தேகிக்கலாம். வேத மந்திரங்களெல்லாம் ஓசையையே ஆதாரமாகக் கொண்டுள்ளன என்பதும் அவை தவறாக உச்சரிக்கப் பட்டால் எதிர்மறையான விளைவுகள் ஏற்படும் என்பதும் ஆன்றோர் கூறும் உண்மை.

கந்தபுராணத்தில் நாரதர் நன்மை காணும் பொருட்டு ஒரு வேள்வி தொடங்குகிறார். அதில் மந்திரங்கள் தவறாக உச்சரிக்கப் பட்டதால் கிணறு வெட்டப் பூதம் கிளம்பியதுபோல யாகக்கினியிலிருந்து ஓர் ஆட்டுக்கடா வெளியே வந்து உலகையே துவம்சம் செய்ய ஆரம்பிக்கிறது.

கடைசியில் அதைக் கந்த கடவுள் அடக்கித் தமது வாகனமாக்கிக் கொள்கிறார். வெறும் ஓசை என்று நீங்கள் கூறுவது எவ்வளவு பெரிய விளைவை ஏற்படுத்தியது என்பதற்கு இது ஓர் உதாரணம்.

உலகம் ஓம் என்னும் ஓங்கார ஒலியில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதை நாத தத்துவம் என்று சாஸ்திரங்கள் சாற்றுகின்றன.

ஒருவருவனுடையபெயர்தோ அதைச் சார்ந்தே அவன் வாழ்க்கை அமைகிறது என்பதற்கு பெரும் ஆதார ஸ்ருதியாய்க் காட்சி தந்தவை சித்தர்கள் எழுதி வைத்துச் சென்றுள்ள நாடி ஜோதிட சுவடிகள் ஆகும்.

ஒருவர் நாடி ஜோதிடம் பார்க்கச் சென்று அவருக்குரிய ஏட்டை எடுத்து வாசித்தால் அதில் அவருடைய பெயர் இன்னதென்றும் கூறப்பட்டிருக்கும்.

ஆக, ஒரு குறிப்பிட்ட பெயரை உடையவனின் வாழக்கை இன்ன விதத்தில்தான் இருக்கும் என்பது தீர்மானிக்கப்பட்டதாகி விடுகிறது. மேலும் பெயரியல் ஜோதிடம் மூலம் பெயர் மாற்றியவர் நாடி ஜோதிடம் பார்க்கச் செல்ல அப்படி மாற்றப்பட்டுள்ள பெயரே அந்தச் சுவடியில் காணப்பட்டுள்ளது. இது பெயரியல் ஜோதி டத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

சாதனை படைத்தவர்கள் பலரின் சரித்திரத்தைப் புரட்டிப்பார்த்தால் ஓர் உண்மை புலனாகும். அது என்னவென்றால் வாழ்க்கை மாறும்போது அவர்கள் வாழ்க்கை மாறியிருக்கும். அல்லது பெயர் மாறும்போது அவர்கள் வாழ்க்கை மாறியிருக்கும்.

காவியங்களையோ வேறு இலக்கியங்களையோ படைக்கும் போது குறிப்பட்ட சில மங்கலச் சொற்களை ஆரம்பமாக வைத்து ஆரம்பித்தால் நன்மை என்ற இலக்கணமே ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

சீர்மணி பரிதி யானை
திருநில முலகு திங்கள்
கார்மலை சொல்லமுத்துக்
கங்கைநீர் கடல்பூத்
தேர்பொன்
ஏருறு மிவைமூ வாறு
மிதிற்பரி யாயப் பேரும்
ஆருமங் கலச்சொற் செய்யு
ளாய்ந்து முன் வைக்க நன்றாம்
என்று நிகண்டு கூறுகிறது.

சீர், மணி, பரிதி, யானை, திரு... முதலியசொற்களைநூலின்ஆரம்பப் பாடலின் முதற்சொல்லாகக் கொண்டு நூலைத் தொடங்கினால் சிறப்பு என்பது இப்பாடலின் பொருள்.

மனிதர்களின் பெயரும் ஒரு சொல்தான். எனவே அந்தப் பெயரைத் தனக்கோ தன்னைச் சார்ந்தவர்களுக்கோ சூட்டிக் கொள்ளும் முன் அதனால் உண்டாகும் பலாபலன்களை உணர்ந்து சூட்டிக்கொண்டால்தான் மேன்மை பெறமுடியும்.

மனித வாழ்க்கையே பிரச்சினைகளால்தான் பின்னப்பட்டிருக்கிறது. பிறவி எடுத்துவிட்டால் அல்லல்களை அனுபவித்துத்தான் தீர வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் பெயரை மாற்றிக் கொண்டால் அல்லலின்றி ஆனந்தம் அடைய லாம்.

துன்பங்கள் விதியின் இயக்கம், மதியின் இயக்கம் என்னும் இரண்டுவிதங்களில்வருகின்றன. பெயரை மாற்றிக் கொண்டால் அறிவில் தெளிவு ஏற்படும். மனத்தில் உறுதி உண்டாகும்.

எது பாதை, எது பயணம் என்பதில் ஒரு தீர்க்கம் உருவாகும். இதனால் மதிமயக்கத்தால் எவ்விதத் துன்பமும் ஏற்படாமல் அறவே தடுக்கப்படுகிறது.

விதியால் – ஊழ்வினையால் ஏதாவது துன்பங்கள் வந்தா லும் அவற்றை எதிர்கொண்டு புறமுதுகிட்டுஓடச்செய்யும்ஒருமனோ சக்தியும் உண்டாகிறது. வள்ளுவன் கூறுகின்ற ஊழையும் உப்பக்கம் காணும் திறனை ஒருவன் பெயரை மாற்றிக் கொள்வதன் மூலம் பெற்றுவிடலாம் என்பது பேருண்மையாகும்.

பெயரைத்தானேமாற்றவேண்டும். அது என்ன பெரிய காரியமா? என்றுசொல்லிக் கொண்டு சிலர் பிளாட்பாரங்களில் இருபது, முப்பது ரூபாய்க்கு விற்கும் எண் கணிதப் புத்தகங்களை வாங்கித் தங்கள் பெயரில் சில எழுத்துகளை நீக்கியோ, புதிதாகச் சேர்த்தோ மாற்றம் செய்து கொள்கின்றனர்.

இது அநேகமாக, பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காய் முடிந்த கதைதான். இதன்மூலம் எல்லாம் வாழ்க்கையில் வசந்தத்தைக் கொண்டு வந்துவிட முடியாது. வேரோடுகளையப்பட் டால் தான் அது உண்மையான களையெடுப்பு. மேம்போக்காக இலையையும் தழையும் மட்டும் கொய்தால் அது கண் துடைப்பு.

மூதேவிஎன்றுபொருள்தொனிக்கக்கூடிய ஒரு பெயர் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அதன் முன்னாலும் பின்னாலும் இடையிலும்எத்தனை எழுத்துகளைச் சேர்த்தாலும் அல்லது நீக்கினாலும் மூதேவி மூதேவி தான்.

மூதேவி செல்வம் தரக்கூடியவளாக ஒருக்காலும் மாற முடியாது. எனவே அந்தப் பெயரையே அடியோடு நீக்கிவிட்டு வேறு பெயர் சூட்டிக் கொள்வது தான் புத்திசாலித்தனம்.

பெயரை மாற்றிக் கொள்வதற்குப் பலர் மிகவும் தயங்குகிறார்கள் ''மாற்றம் மட்டும் தான் இவ்வுலகில் மாறாதது'' என்றார் கார்ல்மார்க்ஸ்.

நீங்கள் தக்க பெயரை மாற்றிக் கொள்ள நினைத்தாலே அதிர்ஷ்டதேவதை உங்களுக்குக் கதவைத் திறக்கத் தொடங்கி விட்டாள் என்று பொருள்.

## இராசி பலன்

**மீனம்:** காலையில் தாமதமான காரியங்கள் மாலை நேரம் கைகூடும் வாய்ப்புண்டு, அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.

**மேடம்:** முக்கிய பொறுப்புக்களை மதியத்திற்கு முன்னர் நிறைவேற்றுவது நல்லது, மாலை நேரம் தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம், போசன நன்மையுண்டு, புகழ் கூடும் நாள்.

**இடபம்:** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும் ,மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், ஆன்மீக சிந்தனை கூடும் நாள்.

**மிதுனம்:** தொழில் முன்னேற்றமுண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வீண் பழிகள் அகலும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சியில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அச்சுவினி, பரணி | | |
| சனி, கேது | குரு | சந், புத | சூரி.சுக். செவ் |

**02.10.2019**

புரட்டாதி 15,புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

சதுர்த்தி பிற்பகல் 5.02 மணிவரை

விசாகம் முன்னிரவு 6.39 மணிவரை

சுபநேரம் 4.32-6.02 மணிவரை

இராகுகாலம் 12.02-1.32 மணிவரை

சதுர்த்தி விரதம், சித்தாமிர்தம்

வளவன்

**கடகம்:** தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்:** தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், ஆதாயம் அதிகரிக்கும் நாள், சகோதர ஒற்றுமை மேலோங்கும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு:** பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், தூர தேசத்திலிருந்து அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பிரபல மானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள், சேமிப்பு உயரும் நாள்.,

**துலாம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், பணப் பிரச்சினைகள் சுமுகமாக அமையும், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், போசன சுகமுண்டு.

**கன்னி:** வியாபாரத்தை விரிவுபடுத்த முற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வாக்கு மேன்மையுண்டு, உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

# வவுனியாவில் இலத்திரனியல் நூலகம் திறந்து வைப்பு





(குருமன்காடு)


வவுனியா பொது நூலகத்தில் இணைய வசதியுடனான இலத்திரனியல் நூலகம் நேற்றுக்காலை திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வவுனியா பொது நூலகம் மாவட்டத்தில் உள்ள பல தரப்பட்டோரின் வாசிப்புத் தேவையை பூர்த்தி செய்து வருகின்றது.

இந்நிலையில் தற்போது வளர்ச்சியடைந்து வரும் கணனி யுகத்திற்கு அமைய நூலகத்தின் ஒரு பகுதி இலத்திரனியல் நூலகமாக உருவாக்கப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டது. இதன் மூலம் புத்தகங்களை கணனி மூலம் வாசிக்கக்கூடிய வசதியினை வவுனியா நூலகம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் நகரசபை தலைவர் இ.கௌதமன், உபதலைவர் சு.குமாரசாமி, உறுப்பினர்களான க.சந்திரகுலசிங்கம், நா.சேனாதிராஜா, ரி.கே.ராஜலிங்கம், செந்தில்ரூபன், சு.காண்டீபன், சுமந்திரன், பா.பிரசன்னா, செயலாளர் இ.தயாபரன், நூல்நிலைய உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டு இலத்திரனியல் நூல்நிலையப் பகுதியை திறந்து வைத்திருந்தனர். (9-250-299)

## வாகன விபத்தில் இரு கன்றுகளை இழந்த பசு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு-பரந்தன் ஏ-35 வீதியை கடக்க முற்பட்ட தாய்ப் பசுவையும் இரு கன்றுக் குட்டிகளையும் டிப்பர் வாகனம் மோதியதில் இரு கன்றுகளும் சம்பவ இடத்தில் உயிரிழந்த சம்பவம் நேற்று அதிகாலை உழவனூர் பகுதியில் இடம் பெற்றுள்ளது. (9-10)





சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கொண்டாடப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட செயலக மேலதிக மாவட்டச் செயலாளர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

பழைமை வாய்ந்த

ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற
- பில்லி சூனியங்கள் அகற்ற வேண்டுமா?

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ரெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153, 076 841 1848

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4ஆம் பாதம்
கி.பா: 26 ¾
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: Diploma Agriculture (பிரதேச செயலகம்) திருமணமாகி 3 மாதத்தில் விவாகரத்துப் பெற்றவர்
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B10096

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1 ஆம் பாதம்
கி.பா: 42 செவ் 1 இல்
உயரம்: 174 cm
தகைமை/தொழில்: Asst.manager B.A Reading (ஜேர்மனி)
எதிர்பார்ப்பு: படித்தபெண்A/L/ Degree
தொ.இ: B/10097

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூனர்பூசம்
கி.பா:45 ½ செவ் 2 இல்
உயரம்: 5' செவ் 10 இல்
தகைமை/தொழில்: B.B.M கட்டார் விமான நிலையம்
எதிர்பார்ப்பு:ஆகக் குறைந்தது பட்டதாரி
தொ.இ: B/10099

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 1 ஆம்பாதம்
கி.பா:24 ½ செவ் 8 இல்
உயரம்: 172 cm
தகைமை/தொழில்:B.E.Marine Engineering (First Class-Distinction ) கடல்சார் பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/10100

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 2 ஆம் பாதம்
கி.பா: 69 ½ சூரி செவ் 1 இல்
தகைமை/தொழில்:Bio Medical Science கொழும்பு லங்கா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் பயற்சி
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/10118

பிறப்பு: 1993 இந்து
உயரம்: 5'6"
நட்சத்திரம்: உத்திரட்டாதி4 ஆம் பாதம்
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: படித்தவர்
தொ.இ: G/10120

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1 ஆம் பாதம்
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: **BSC IT** திருமணப் பதிவாகி விவாகரத்து பெற்றவர்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/10121

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கேட்டை 2ஆம் பாதம்
கி.பா:05 உயரம்: 160cm
தகைமை/தொழில்:B.SC பட்டதாரி S.L.A.S Pass உதவி பிரதேச செயலர்
எதிர்பார்ப்பு: படித்த உத்தியோகம்
தொ.இ: G/10125

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

சேவை நலன் பாராட்டு

திருமதி
சொபியாவதனி வில்லியம் ஜோர்ஜ்

S.L.T.S-I பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்

(ஆரம்பக்கல்வி)



சேவை விபரம்

21.10.1988-31.12.1995
யா/மண்டைதீவு மகா வித்தியாலயம்
01.01.1996-04.07.1997
மன்/பெரிய பண்டி விரிச்சான் அ.த.க. பாடசாலை
05.07.1997-24.08.1997
யா/மண்டைதீவு மகா வித்தியாலயம்
25.08.1997-26.01.2014
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
27.01.2014-30.09.2019
யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்

எமது பாடசாலையில் 06 ஆண்டுகள் ஆரம்பக்கல்வி ஆசிரியராக சேவையாற்றி ஓய்வு நிலை காணும் ஆசிரியரை சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

(474)


ஆசிரியர் நல்லுறவுக் கழகம்,
யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்.
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## "குற்றவாளி நீதிபதியா? அரசே பதில் கூறு"?

# எங்கள் பிள்ளைகள் எங்கே?

- காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்றுப் போராட்டம்
- யாழிலுள்ள ஓ.எம்.பி. அலுவலகப் பெயர்ப்பலகை மீது சாணம் வீச்சு





(யாழ்ப்பாணம்) காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகப் பெயர்ப் பலகை மீது சாணம் வீசி வெளியேறுமாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சர்வதேச சிறுவர் தினமான நேற்று காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகள் எங்கே? எனக் கோரி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணம் கல்வியங்காடு செம்மணி வீதியிலுள்ள பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக ஆரம்பித்து, காணாமல் போனோர் அலுவலகம் வரை நடைபவனியாகச் சென்று குறித்த அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தின் போது, 2009 இல் இராணுவத்திடம் சரணடைந்த போராளிகளின் பிள்ளைகள் எங்கே? யுத்த காலத்தில் இலங்கை இராணுவத்தினரால், காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கு அரசே பதில் கூறு?

குற்றவாளி நீதிபதியா? குற்றம் செய்தவன் நீதிபதியாகலாமா? எமது பிள்ளைகளுக்கு நீதி வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட எமது சிறுவர்கள் எங்கே? போன்ற கோசங்களை எழுப்பியவாறு தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த போராட்டத்தின் போது, காணாமற் போன ஆட்கள் பற்றிய (OMP) அலுவலகத்தின் மீது சாணம் வீசியதுடன், அலுவலகத்தை விட்டு வெளியேறுமாறும் கோசம் எழுப்பினர். (இ-9-101)

# இன்றைய சிறுவர்கள் நாட்டின் எதிர்காலச் சிற்பிகள்

இந்த நாட்டை ஏன் இந்த உலகையே சிறந்த அழகிய நந்தவனமாக மாற்றக்கூடிய சக்தி இன்றைய சிறுவர்களின் கைகளில் உள்ளது. அவர்களை நல்லவர்களாக, வல்லவர்களாக, கல்வியாளர்களாக, சிறந்த சிந்தனையாளர்களாக உருவாக்க வேண்டிய பொறுப்பு எம் சமூகத்திடமே உள்ளது. சமூகம் என்று சொல்லும் பொழுது பெற்றோர்கள், ஆசிரியர்கள், குடும்ப அங்கத்தவர்கள், அயலவர்கள், நண்பர்கள், உறவினர்கள் என யாவரும் இதில் அடங்குவர். எல்லோரும் சேர்ந்து இன்றைய சிறுவர்களை நற்பிரஜைகளாக வளர்த்தெடுப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டியது இக்காலத்தின் கட்டாய தேவையாகும்.

சிறுவர்களை சிறந்த முறையில் வளர்த்தெடுப்பதில் பெற்றோர்களின் பங்கு மிகவும் முக்கியமானது. அவற்றிலும் ஒரு தாயின் பொறுப்பு அதிகம் முக்கியத்துவம் வாய்ந்தது. தாயின் கருவறையில் இருக்கும் பொழுதே குழந்தை கற்கத் தொடங்குகிறது. ஒரு குழந்தையை வயிற்றில் சுமக்கும் தாய், சிறந்த கடவுள் பக்தி, தன்னம்பிக்கை, உயர்ந்த சிந்தனை, நல்ல எண்ணங்கள், கொண்டவராக இருந்தால் பிறக்கும் குழந்தையும் எதிர்காலத்தில் ஒரு நற்பிரஜையாக உருவாகும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். தாய், தந்தையர் இருவரும் ஒற்றுமையாகத் தாங்களே முன்மாதிரியாக இருந்து சிறுவர்களைப் பல சிறந்த நற்பண்புகளுடன் வளர்த்தெடுத்தல் அவசியமாகும்.

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் அதியுச்ச வளர்ச்சியடைந்த நிலையில் உலகம் மிகவும் சுருங்கிய நிலையில் உள்ளது. உலகம் அதிகூடிய வளர்ச்சியும் அபிவிருத்தியும் அடைந்து மக்கள் பலவித வசதி வாய்ப்புக்களையும் நன்மைகளையும் அனுபவிக்கும் அதேவேளை பலவிதமான பிரச்சினைகளையும் பாதிப்புக்களையும் அழிவுகளையும் துன்ப துயரங்களையும் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

தொலைபேசி இணையத்தளங்களின் பாவனையில் (பேஸ்புக், ஸ்கைப், இன்டர்நெட, டுவிட்டர், கணனி) இன்றைய சிறார்கள் தங்களைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி பாதிக்கப்படுவதுடன் அவர்களின் மனநிலையும் ஒழுக்க விழுமியங்களும் பாதிக்கப்படுகின்றன. இந்த விடயத்தில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் சமூக நலன்விரும்பிகளும் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டியது மிக மிக அவசியமானதாகும். பெற்றோர்கள்கூட தொலைக்காட்சிப் பெட்டிக்குள் தங்களை மறந்திருக்கும் பொழுது பிள்ளைகளும் அதேவழியில் செல்ல முயலுவார்கள் என்பதை அறிந்து தம்மைத் தாமே திருத்திக் கொள்ள வேண்டும்.

இன்றைய மாணவர்கள் எப்பொழுதும் தொலைபேசியை வைத்துக்கொண்டு இன்டர்நெற்றில் எதைப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை யாராலும் அறிந்துகொள்ள முடியாத ஓர் துர்ப்பாக்கிய நிலை இன்றைய சமுதாயத்தில் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதைவிட மது, போதைவஸ்து போன்ற பொருட்களுக்கு அவர்களை அறியாமலே சில தீய சக்திகளினால் இன்றைய சிறுவர்களும் இளைஞர்களும் அடிமையாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் மிகச் சிறுவயதிலேயே பாடசாலையை விட்டு விலகி மேலும் மேலும் தங்களை அழித்துக் கொண்டிருக்கின்ற சிறுவர்களைக் காப்பாற்றியே ஆகவேண்டும் என்ற பொறுப்பு எமது சமூகத்திற்கு உண்டு.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்ற பழமொழிக்கு இணங்க எமது இளம் சிறார்களைத் தீய பழக்கவழக்கங்களில் இருந்து ஆரம்ப நிலையிலேயே காப்பாற்றி அவர்களை நல்லவர்களாக மாற்ற வேண்டிய பொறுப்பு யாவரையும் சாரும். சிறுவர்களை சிறிய வயதிலேயே இறை வழிபாட்டில் ஈடுபடுத்துவதன் மூலம், இறைவன் மீது நம்பிக்கை மாத்திரமல்ல அவர்களுக்கு தன்னம்பிக்கை, ஒழுக்கம், கட்டுப்பாடு, மன ஒருமைப்பாடு என்பன அதிகரிப்பதுடன் இறைகடாட்சமும் கிடைத்து விடுவதனால் அவர்கள் வருங்காலத்தில் நாட்டின் நற்பிரஜைகளாகவும் மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பாங்கு உள்ளவர்களாகவும், தான் விரும்பியதைச் சாதிக்கும் வெற்றியாளர்களாகவும் திகழ முடியும்.

ஆகவே பெற்றோர்கள் சிறுவயது முதல் இறை பக்தியை, முக்கியமாகக் கோயில் வழிபாட்டைச் சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுத்தல் அவசியமாகும். இதன் மூலம் அவர்கள் கல்வியிலும் ஆர்வம் காட்டுவதை அவதானிக்க முடியும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுடன் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொள்ளல் வேண்டும். அவர்களுடன் நண்பர்கள் போலவும் பழகிக் கொள்ளுதல் அவசியமாகும். பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் இடையில் பரிபூரணமான புரிந்துணர்வு இருத்தல் வேண்டும். பிள்ளைகள் பிழைவிடும் போது கண்டிக்கவும் பின்னர் அரவணைக்கவும் பெற்றோர்கள் கற்றுக் கொள்ளல் வேண்டும. பிள்ளைகளின் சிநேகிதர்கள் யார் என்பதனையும் அவர்கள் என்ன செய்கிறார்கள், எங்கே போகிறார்கள் என்பதனையும் உன்னிப்பாகக் கவனித்துத் தேவையான இடத்தில் கண்டித்துத், தகுந்த ஆலோசனைகளும், புத்திமதிகளும் கூறி நல்வழிப்படுத்த வேண்டும்.

உலகில் உள்ள அனைத்துச் செல்வங்களிலும் கல்விச் செல்வமே மேலானது என்பதனையும், கல்வியின் மூலம் எதையும் சாதித்து விடமுடியும் என்பதனையும் மாணவர்கள் அறிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

'கேடில் விழுச் செல்வம் கல்வி
மாடல்ல மற்றயவை."

எனக் கூறுகின்றார் திருவள்ளுவர்.

தங்களால் முடிந்த மட்டும் பிள்ளைகளுக்கான கல்விக்கு வேண்டிய சகல உதவிகளையும் ஒழுங்குகளையும் செய்ய வேண்டியது பெற்றோரின் கடமையாகும். ஒரு மனிதனுக்குக் கல்விச் செல்வம் இருந்தால் மற்றைய எல்லாச் செல்வங்களும் தானாகவே கிடைத்து விடுகின்றன.

தாரமும் குருவும் தலைவிதிப்படி என்பார்கள். மாணவர்களுக்கு நல்ல ஆசிரியர்கள் கிடைத்து விட்டால் அவர்கள் கல்வியிலும் ஒழுக்க விழுமியங்களிலும் சிறந்து விளங்குவார்கள். சிறுவர்களின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களின் பங்கு மிகமிக முக்கியமானது. குருவை விஞ்சிய சீடர்களை உருவாக்குதல் எமது ஆசிரியர்களின் தலையாய கடமையாகும்.

நல்ல சிறந்த ஒழுக்க விழுமியங்களும், பண்பாடும் நிறைந்த தமது கலாசாரங்களை பின்பற்றி, தமது குடும்பத்திற்கும், நாட்டிற்கும் மாத்திரமல்ல இந்த உலகத்திற்கே நன்மைகளையும், உதவிகளையும், தியாகங்களையும் செய்யக்கூடிய முன்மாதிரியான சிறந்த நற்பிரஜைகளை உருவாக்குவதற்குப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், கற்றோர்கள், நலன்விரும்பிகள் யாவரும் அயராது உழைத்தல் வேண்டும். அப்பொழுதுதான் எமது நாட்டின் நலனிற்காகவும், விடியலுக்காகவும், தனது உடலையும் உயிரையும் துச்சமென மதித்துப் பாடுபடும் சிறந்த வருங்கால சிற்பிகளை உருவாக்க முடியும்.

ஏழை மாணவர்களின் வளர்ச்சிக்காக எல்லோரும் பாடுபடுதல் இன்றைய காலகட்டத்தில் அவசியமானது ஆகும். கல்வியின் மூலமே எல்லாப் பிரச்சினைகளையும் தகர்த்தெறிய முடியும் என்பதை சிறுவர்கள் அறிந்து கொள்ளுதலும் சிறந்த கற்றல் செயற்பாடு ஆகும். ஆகவே சிறந்த, நிறைந்த கல்வியறிவைக் கொடுத்து எமது நாட்டின் சிறுவர்களை, எமது நாட்டிற்கு தேவையான சிறந்த அழகிய சிற்பிகளாக உருவாக்குவதற்காக எல்லோரும் பாடுபடுவோம்.

கலாநிதி. (திருமதி) வீரமங்கை ஸ்ராலினா யோகரத்தினம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
மொழியியல் ஆங்கிலத் துறை,
கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு புருசோத்தமன் எழுதும் அன்பு மடல்

*(ஆக, ஒட்டுமொத்தத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பின்பாக, தமிழ் மக்கள் பேரவையை வலுக் குறைப்புச் செய்யவேண்டுமென நீங்களும் உங்கள் கட்சியின் ஒரு சில தலைவர்களும் முடிவு செய்தனரோ என்ற நினைப்புக்கு நாம் வருவதில் தவறில்லை.)*




நேற்றைய தொடர்ச்சி...

தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கம், அதற்கான ஏற்பாடுகள், நேரச் செலவுகள், அர்ப்பணிப்புக்கள் என அனைத்தையும் அறிந்த தாங்கள் எழுந்தமானமாக தமிழ் மக்கள் பேரவை மீது குற்றம் சுமத்தும் வகையில் நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு பேரவை முண்டு கொடுக்கிறது எனக் கூறியிருந்தீர்கள்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பேரவை என்று சிலர் குறிப்பிட்ட போது அவர்களின் குறுகிய பார்வை கண்டு வேதனைப்பட்டதற்கு மேலாக உங்களின் கருத்து பேரவையை வேதனைப்படுத்தியது.

என்னைப் பொறுத்தவரை உங்களுக்கு யாம் கூறக்கூடிய ஆலோசனை பேரவை மீதும் நீதியரசர் விக்னேஸ்வரன் மீதும் நியாயமற்ற குற்றச் சாட்டுக்களை முன்வைக்காதீர்கள். அவ்வாறு முன்வைத்தால் அதன் விளைவு உங்களையும் உங்கள் கட்சியையும் கடுமையாகப் பாதிக்கும் என்பதுதான்.

மேலும் ஒருவிடயத்தை இங்கு கூறித்தானாக வேண்டும். அது என் சார்ந்தோ அன்றி பேரவை சார்ந்தோ அல்ல. மாறாக உங்கள் மீது கரிசனை கொண்டதன் அடிப்படையில் கூறப்படுகிறது.

நீங்கள் இந்தியாமீது குறைபடுவதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.இந்தியா மீது நீங்கள் குறைபடுவதற்கான காரணம் என்ன என்று எமக்குப் புரியவில்லையாயினும் இந்தியா மீதான உங்களின் குற்றச் சாட்டும் குறைபடுதலும் தான் உங்கள் கட்சியின் வளர்ச்சிக்கு மிகப்பெரும் பாதகமாக அமைந்துள்ளது.

இந்தியாவைக் குறைபடுவதை ஈழத்தமிழ் மக்கள் ஒருபோதும் அங்கீகரிக்க மாட்டார்கள். அதற்குப் பல காரணங்கள் உள்ளன.

ஈழத்தமிழர்களின் இன்றைய அவல நிலைக்கு இந்தியாவின் நடவடிக்கைகளும் காரணம் என்பது நிராகரிக்க முடியாத உண்மையாயினும் இந்திய தேசத்தை எமக்கு ஆதரவாக்காத வரையில் எங்களுக்கான அரசியல் தீர்வு என்பது சாத்தியமானதல்ல என்பதே நிதர்சனமானது.

எனினும் அந்த நிதர்சனத்தையும் கூட உங்களாலும் உங்கள் கட்சியின் முதன்மை நிலைத் தலைவர்களாலும் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஏதோ இந்தியாவை எதிர்ப்பதுதான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அடிக்கட்டுப் பசளை என்பது போல நீங்கள் நினைத்து நடந்து கொள்கிறீர்கள்.

உண்மையில் இந்தியாவை எதிர்ப்பது தான் உங்கள் கட்சியின் ஆணிவேரை வெட்டவல்ல அகளான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

இந்தியா எங்கள் தாயகத்தின் அண்டைநாடு. எங்கள் தொப்புள் கொடி உறவுகளான எட்டுக் கோடி தமிழ்மக்கள் வாழுகின்ற தமிழகத்தைத் தாங்கி நிற்கும் பூமி.

சமயத்தாலும் ஆன்மீகத்தாலும் ஈழத் தமிழ் மக்களை இணைத்து நிற்கின்ற ஞான பூமி. இதனை மறந்து இந்தியாவைக் குறிவைத்து நீங்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டும் பகைமையும் ஒரு பொருத்தமற்ற நடைமுறை என்றே கூறவேண்டும்.

இது விடயத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி உட்பட ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளின் அணுகுமுறை யதார்த்தமானது என்பதையும் அவை ஒருபோதும் இந்தியாவைக் குறைபட விரும்பவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கவை.

இஃது அவர்களின் மிக உச்சமான இராஜதந்திரம் என்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய உண்மை.

எனவே இந்தியாவை உங்களுக்கான நட்பு நாடாக ஆக்கிக் கொள்ளுங்கள். ஈழத் தமிழினத்திற்காகக் குரல் கொடுக்கும் தமிழகத்து அரசியல் தலைவர்களுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்துங்கள். இது எங்கள் தமிழினத்தின் எதிர்காலத்திற்கு ஆரோக்கியமாக அமையும்.

இதைக்கூறும் போதுகூட எங்களையும் இந்தியாவின் ஆள் என்று நீங்கள் பார்க்கலாம். ஆனாலும் கடிதம் எழுதுவது என்று முடிவு செய்த பின்பு கூறவேண்டிய அத்தனை விடயங்களையும் கூறுவதுதான் தர்மம் என்ற அடிப்படையில் கூறியுள்ளோம்.

இதனை ஏற்பதும் ஏற்காமல் விடுவதும் விமர்சிப்பதும் உங்களின் உரிமை. அதில் நாம் ஒருபோதும் தலையிட மாட்டோம்.

தவிர, தமிழ்மக்கள் பேரவை என்ற மக்கள் இயக்கம் காலத்தின் தேவை. அதன் எழுச்சி தமிழ் அரசியல் தரப்புக்களை நிச்சயம் ஒழுங்குபடுத்தும். ஆகையால் தமிழ் மக்கள் பேரவையின் வளர்ச்சி தொடர்பில் உங்கள் கரிசனை இருக்கவேண்டும் என்பது என் தனிப்பட்ட விருப்பம்.

இது தொடர்பில் உங்கள் முடிவுகளை மீள் பரிசீலனைக்குட்படுத்த வேண்டும் என விரும்புகிறேன். இவை யாவற்றுக்கும் மேலாக எழுக தமிழ்-2019 எழுச்சிப் பேரணி தொடர்பில் சிலாகிக்க வேண்டும் என்பது தான் இக்கடிதத்தின் அடிப்படை நோக்கம்.

எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் நீங்களும் உங்கள் கட்சியினரும் பங்குபற்றவில்லை என்பது மிகுந்த மனக் கவலையைத் தந்தது.

2016 ஆம் ஆண்டில் நடைபெற்ற எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்குத் தாங்கள் செய்த அளப்பரிய வகிபங்கு இம்முறை நியாயமற்ற மனக்கசப்புடன் விடுபட்டுப் போனமை வேதனைக்குரியது.

பரவாயில்லை, கருத்தியல் சார்ந்து உடன்பாடில்லாத சந்தர்ப்பத்தில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு நேரடி ஆதரவு வழங்கமுடியவில்லை என்றால், அதைக்கூட ஏற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் இந்த எல்லைகளைத் தாண்டி; பேரவையின் உருவாக்கத்தில் தங்களுக்கும் கணிசமான பங்கு இருக்கையில், நீங்களும் உங்கள் கட்சியினரும் எழுக தமிழுக்கு எதிராகச் செய்த பிரசாரங்களை அறிந்த போது இதயம் அடைத்துக் கொண்டது.

அரசியல் என்றால் இப்படித் தானா? என்று ஒருகணம் எம்மை நின்று திகைக்க வைத்தது. ஆளுக்கு ஆள் மாறி மாறி எழுக தமிழ் எழுச்சிப் பேரணியைச் சிதைப்பதில் காட்டிய முனைப்புக்கண்டு திணுக் குற்றோம்.

இப்படியானதொரு செயற்பாட்டை யாரிடம் இருந்து நாம் எதிர்பார்க்கவில்லையோ அவரிடம் இருந்து நடந்தது எனும் போது எங்கள் தமிழ் மக்கள் பாவங்கள் என்று நினைப்பதைத் தவிர வேறு எதுவும் தோன்றவில்லை.

(தொடரும்)

# காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி கோரி போராட்டம்




இறுதி யுத்தத்தின் போது இராணுவத்தின் கைகளில் பெற்றோருடன் ஒப்படைக்கப்பட்டு வலிந்து காணாமலாக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதிகோரி வடக்கில் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சிறுவர் தினத்தை முன்னிட்டு வடக்கு- கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட அமைப்பினால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டம் நேற்றுக் காலை வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாகவும் முல்லைத்தீவு மாவட்டசெயலக முன்றலிலும் கிளிநொச்சி பசுமைப் பூங்காவிலும் முன்னெடுக்கப்பட்டது. இப் போராட்டத்தில் மதகுருக்கள், பொது அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகள், மாணவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (9-281-299)

## காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களின் விபரம் அடங்கிய நூல் வெளியீடு



(நெளுக்குளம்)

இறுதி யுத்த காலத்தில் குடும்பத்தினருடன் இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களது விபரங்கள் அடங்கிய நூல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவினர் ளால் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் தின த்தை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி கோரி நேற்று வடகிழக்குப் பகுதிகளில் ஆர்ப்பாட்டமொன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது இறுதி யுத்த காலத்தில் வட்டுவாகல், ஓமந்தை மற்றும் பல்வேறு இடங்களிலும் தமது தாய் தந்தையருடன் இராணுவக்கட்டுப்பாட்டு பகுதிக்குள் வரும்போது பெற்றோர் சரணடையும்போது அவர்களுடன் இராணுவத்திடம் சரணடைந்த சிறுவர்கள் காணாமல் போயிருந்தனர்.

இந் நிலையில் அச்சிறுவர்கள் சிலரது தகவல்கள் அடங்கிய நூலை வடக்கு-கிழக்கு மாவட்டங்களில் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் பின்னர் வெளியிட்டு வைக்கப்பட்டது. (9-299)

## பங்குப் பணிமனையில் திருட்டு

(மன்னார்)

மன்னார்-யாழ் பிரதான வீதி, மாந்தையில் அமைந்துள்ள மாந்தை மாதா ஆலயத்தின் பங்கு பணி மனையின் கதவு நேற்று முன்தினம் திங்கட் கிழமை மாலை உடைக்கப்பட்டு ஒரு தொகை பணம் திருடிச் செல்லப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாந்தை மாதா ஆலயத்தின் பங்குத்தந்தை இல்லாத நேரத்தில் குறித்த திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட நபர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற ஆதாரத்தின் அடிப்படையில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (9-285)

## மரநடுகை திட்டம் மன்னாரில் ஆரம்பம்



(மன்னார்)

வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம் பெறும் தேசிய மரநடுகை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்ட மடு வட்டார வன அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "வன பாதுகாப்பு வேலைத்திட்டமானது நேற்றுக்காலை மன்/ வட்டக் கண்டல் அ.த.க பாடசாலையில் அதன் அதிபர் எஸ். தேவதாஸ் தலைமையில் இடம் பெற்றது

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கலந்து கொண்டதுடன் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான மரக்க ன்றுகளையும் வழங்கி வைத்தார்.

அத்துடன் குறித்த நிகழ்விற்கு மன்னார் மாவட்ட வனப் பாது காப்பு திணைக்கள அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் ,ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டதுடன் இந்த நிகழ்ச்சிக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலை வளாகத்தில் மரக கன்றுகள் விருந்தினர்களால் நாட்டிவைக்கப்படமை குறிப்பிடத்தக்கது. (9-285)




## யாழ்.பல்கலை வவுனியா வளாகத்தில் ஆய்வு மாநாடு



யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான ஆய்வு மாநாடு நேற்று பம்பைமடுவில் அமைந்துள்ள வளாகத்தில் இடம்பெற்றது.

வவுனியா வளாகத்தின் முதல்வர் ரி.மங்களேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தி னராக வாழ்நாள் பேராசிரியரும், யாழ் பல்கலைக்கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரியுமான கே.கந்தசாமி கலந்து கொண்டார்.

மாநாட்டில் சிறப்பு பேச்சாளர்களாக டென்மார்க் நாட்டை சேர்ந்த பேராசிரியர் கான்ஸ் பீட்டர் கன்சென், யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் என். சுரேந்திரா, பிரித்தானியாவை சேர்ந்த பேராசிரியர் என்.சிறிஸ் கந்தராஜா, ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த மாநாட்டில் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும், நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் வெளியிடப்பட்டிருந்ததுடன், ஆய்வு சுருக்கங்களும் முன்வைக்கப்பட்டது.

நிகழ்வில் கலாநிதி எஸ்.விஜயமோகன், பேராசிரியர்கள், பீடாதிபதிகள், துறைதலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-299)

## மத நல்லிணக்கம் எனும் பெயரில்

# வவுனியாவில் புத்தரை குடியேற்றிய முச்சக்கர வண்டி சாரதிகள்



(குருமன்காடு)

மத நல்லிணக்கம் என்னும் பெயரில் வவுனியா, புகையிரத நிலையம் முன்பாக புதிதாக புத்தர் சிலை ஒன்றினை முச்சக்கர வண்டி சாரதிகள் நேற்று வைத்துள்ளனர்.

வவுனியா, புகையிரத நிலையம் முன்பாக சிறிய கட்டடம் ஒன்று அமைத்து அதில் பிள்ளையார், புத்தர் ஆகிய சிலைகள் வைக்கப்பட்டுள்ளதுடன், மாதா சிலையும் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள முச்சக்கர வண்டி சாரதிகள் தமது வழிபாட்டுக்காக குறித்த வழிபாட்டு தலத்தை மத நல்லிணக்கம் என்னும் பெயரில் அமைத்துள்ளனர். இருப்பினும் குறித்த புகையிரத நிலைய முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் புத்தரை வழிபடும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த எவரும் இல்லை. இந்நிலையில் தமிழ் மக்கள் வாழும் அப்பகுதியில் புத்தரின் சிலை வைக்கப்பட்டுள்ளமை எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளை உருவாக்கும் என அதிருப்தி வெளியிட்டுள்ள அப்பகுதி மக்கள் குறித்த செயற்பாட்டுக்கு வவுனியா நகரசபையும் அனுமதி வழங்கி துணை போகின்றதா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

குறித்த பகுதிக்கு வருகை தரும் பயணிகளின் வழிபாட்டுக்காகவும் தமது வழிபாட்டுக்காகவும் புத்தர் உள்ளிட்ட சிலைகள் வைத்துள்ளதாக முச்சக்கர வண்டி சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத் தலைவரிடம் கேட்ட போது, குறித்த நிகழ்வு நடைபெற்றுள்ளதாக நானும் அறிந்தேன். இது குறித்த பகுதியில் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிட சாரதிகளால் அமைக்கப்பட்டது. இதற்கும் முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்திற்கும் தொடர்பில்லை எனத் தெரிவித்தார்.

வவுனியா நகரசபை உப தலைவர்சுகுமாரசாமியை தொடர்புகொண்டு கேட்ட போது, குறித்த விடயம் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது எனத் தெரிவித்தார். இது தொடர்பில் வவுனியா நகரசபைத் செயலாளர் இ.தயாபரனை தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்ற போதும் அவர் பதில் அளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (9-250)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(நெளுக்குளம்)

வவுனியாவில் மடுகந்தை பகுதியில் நேற்று முன்தினம் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் சோதனை நடவடிக்கையில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் சட்டவிரோதமாக பதிவுகளின்றி துப்பாக்கி வைத்திருப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரப்பன்மடுவ மடுகந்தை வீட்டிற்குச் சென்ற பொலிஸார் வீட்டினை சோதனை செய்த போது பதிவுகள் ஏதுமின்றி சட்டவிரோதமாக துப்பாக்கி ஒன்றை வைத்திருந்ததன் பேரில் ஜெயவர்த்தனகே நிஹால் (வயது-61) என்பவரை துப்பாக்கியுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மடுகந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (9-299)

# பெண் தலைமைத்துவ குடும்பங்களின் புதிய முயற்சி

மன்னார் மாந்தை பிரதேச சபைக்குட்பட்ட அடம்பன் பகுதியில் உள்ள பெண் தலைமைத்துவ குடும்ப தலைவிகளை பொருளாதர ரீதியில் முன்னேற்றும் நோக்குடன் அண்மையில் அரச சார்பற்ற நிறுவனமான பிரிஜிங் லங்கா நிறுவனத்தால் ஆரோக்கிய உணவகம் ஒன்று அமைக்கப்பட்டு இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவரால் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த உணவகத்தில் புதிய முயற்சியாக வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவும் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் நோக்குடன் இசையுடன் கூடிய புதிய உணவுகளை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

வார இறுதி நாட்களில் புதிய உணவுகள் விற்பனைக்காக காட்சிப்படுத்தப் படவுள்ளதுடன் இளம் கலைஞர்களுக்கான வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன. குறித்த உணவகத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் இளையோரின் செயற்பாடுகளுக்கு ஒதுக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (9-285)

# ஹரிஸ்ணவி வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

(நெளுக்குளம்)

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் கடந்த 2016 ஆம் ஆண்டு வீட்டில் தனியாக இருந்த போது பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவியான கெங்காதரன் ஹரிஸ்ணவி (வயது-16) யின் வழக்கு விசாரணை மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா நீதிமன்றில் நேற்று முன்தினம் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் எதிர்வரும் ஜனவரி 06 ஆம் திகதிக்கு வழக்கு விசாரணைகள் ஒத்தி வைக்கப்பட்டது.

இவ்விடயம் குறித்து ஹரிஸ்ணவியின் உறவினர்கள் தெரிவிக்கையில்,

கடந்த 2016 ஆம் ஆண்டு பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ள ஹரிஸ்ணவியின் வழக்கு விசாரணைகள் திகதியிடப்பட்டு செல்லப்படுகின்றதே தவிர, வழக்கு விசாரணைகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இதனால் காலதாமதம் ஏற்படுகின்றதே தவிர குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை.

நேற்று முன்தினம் இடம்பெற்ற விசாரணைகளின் போதும் சட்டமா அதிபரிடம் இருந்து குற்றப்பத்திரம் வராமையால் வழக்கு ஜனவரி 6 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் மனிதவுரிமை அபிவிருத்திக்கான நிலை சட்டத்தரணி அனிஸ் மன்றில் முன்னிலையாகி வழக்கை நெறிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-250-299)




# சிறுவர் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் சைக்கிள் பவனி







(நெளுக்குளம்)

"பிள்ளைகளின் வெற்றிக்கான நட்பான நாடு" எனும் தொனிப்பொருளில் சர்வதேச சிறுவர் தினம் வவுனியா மாவட்ட செயலகத்தால் நேற்று அனுஷ்டிக்கபட்டது.

அந்த வகையில் காலை நிகழ்வாக வவுனியா நகர பாடசாலை மாணவர்களை உள்ளடக்கியதான துவிச்சகரவண்டி பேரணி காலை 7 மணிக்கு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து ஆரம்பமாகி, கந்தசுவாமி கோவில் வீதி வழியாக இறம்பைக்குளம் மகளிர் பாடசாலையை அடைந்து, அங்கிருந்து இலங்கை திருச்சபை வித்தியாலயம், முஸ்லிம் மகாவித்தியாலயம், சைவப் பிரகாசா மகளிர் பாடசாலை ஆகியவற்றிற்கு சென்று அப்பாடசாலைகளின், மாணவர்களையும் இணைத்துக்கொண்டு வவுனியா மாவட்ட செயலகம் வரை சென்று நிறைவடைந்திருந்ததுடன் ஏனைய நிகழ்வுகள் அங்கு இடம்பெற்றன.

துவிச்சக்கரவண்டி பேரணியை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் ஆரம்பித்து வைத்திருந்தார். சிறுவர் தினத்திற்கான ஆசியுரையினை மாவட்ட அரச அதிபர் எம்.கனீபா நிகழ்த்தியிருந்தார்.

நிகழ்வில் உதவி மாவட்ட செயலர் ந.கமலதாஸ், ஒமேக நிறுவனத்தின் பிரதிநிதி சமன் ஜெயசிங்க, வவுனியா வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், மாவட்ட செயலக கணக்காளர் பாலகுமார், சிறுவர் நன்னடத்தை அதிகாரி ஜெயகெனடி மற்றும் பலர் கலந்து கொண்டனர். (9-299)

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஆக்கங்கள் கோரல்

(பூநகரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பூநகரி பொது நூலகத்தால் வெளியிடப்படவுள்ள "பூங்கதிர் இதழ் 07" சஞ்சிகைக்கான சுய ஆக்கங்கள் படைப்பாளிகளிடம் இருந்து கோரப்பட்டுள்ளன. ஆக்கங்களை ஒக்டோபர் 15 ஆம் திகதிக்கு முன் நேரிலோ தபால் மூலமாகவோ நூலகர், பொது நூலகம்,வாடியடி,பூநகரி என்னும் முகவரிக்கு அனுப்ப முடியும்.

விண்ணப்பதாரி பெயர்,முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை தவறாது குறிப்பிட்டு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். தேசிய வாசிப்பு மாத நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் மாத இறுதி வாரத்தில் நடைபெறலாமென அறிவிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்களிடமிருந்தும் "பூங்கதிர்" இற்கான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுவதாக நூலகர் தெரிவித்துள்ளார். (9-84)

# வீதிக்கு வரும் யானைகளால் பயணிகள் அசௌகரியம்

(நெளுக்குளம்)

வவுனியா, புளியங்குளம் பகுதியில் மாலை வேளைகளில் வீதிக்கு வரும் யானைகளால் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

வவுனியா புளியங்குளம் - நெடுங்கேணி வீதியில் யானைகள் வருவதால் அவ்வீதி வழியாக போக்குவரத்து செய்த பயணிகள், வாகன சாரதிகள் எனப் பலரும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இதேவேளை, அவ்வப்போது மாலை வேளைகளில் குறித்த வீதிக்கு யானைகள் வருவதால் மக்கள் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர். (9-299)

# மூத்தோர்களின் ஆன்மீகப் பயணம்

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தினால் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள புன்னைநீராவி கிராமத்தின் மூத்தோர்கள் 50 பேர் மன்னார் மாவட்டத்தின் திருத்தலங்களுக்கு நாளை வியாழக்கிழமை அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

திருக்கேதீஸ்வரம்,பள்ளிமுனை சென் ஜூசியா தேவாலயம்,மடு ஆகிய திருத்தலங்களைப் பார்வையிடவுள்ளனர். யாழ்ப்பாணம் பெரிய கோயிலடியைச் சேர்ந்த லீனப்பு குடும்பத்தினர் இப் பயணத்திற்கான அனுசரணையை வழங்கியுள்ளனர். (9-350)

# பாரதம்

## குஜராத்தில் பேருந்து கவிழ்ந்து விபத்து 21 பேர் உயிரிழப்பு; 50 பேர் படுகாயம்





(அகமதாபாத்)

குஜராத் மாநிலத்தின் பனஸ்கந்தா மாவட்டத்தில் நேற்று மாலை தனியாருக்கு சொந்தமான சொகுசு பேருந்து மலைப்பாங்கான வீதியில் கவிழ்ந்த விபத்தில் 21 பேர் உயிரிழந்தனர்.

குஜராத் மாநிலத்தின் வடக்கேயுள்ள பனஸ்கந்தா மாவட்டத்துக்குட்பட்ட அம்பாஜி-டன்ட்டா வீதி வழியாகச் சென்று கொண்டிருந்த தனியாருக்குச் சொந்தமான ஒரு சொகுசு பேருந்து திரிஷூல்யா காட் என்ற மலைப்பாங்கான இடத்தில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பக்கவாட்டில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் 21 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த சுமார் 50 பேர் அருகில் உள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (ஜ-2)

## நாங்கள் எல்லை தாண்டினால் விளைவுகள் மோசமாக இருக்கும்

### இந்திய இராணுவத் தளபதி எச்சரிக்கை



(டில்லி)

இந்திய எல்லைக்குள் ஊடுருவக் காத்திருக்கும் பயங்கரவாதிகளை பாகிஸ்தான் கட்டுப்படுத்தி வைக்க வேண்டும். வான் வழியாகவோ அல்லது தரை வழியாகவோ அல்லது இரு வழிகளிலுமோ எல்லை தாண்டிச் சென்றால், அதன் விளைவுகள் மோசமாக இருக்கும் என்று இந்திய இராணுவத் தளபதி பிபின் ராவத் தெரிவித்தார்.

தனியார் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு நேற்றையதினம் பேட்டி அளித்த பிபின் ராவத் தெரிவிக்கையில்,

பாலகோட்டில் பயங்கரவாத முகாம்கள் மீண்டும் செயற்பட தொடங்கி இருக்கலாம். ஆனால், காஷ்மீரின் சூழலை சீர்குலைக்க பாகிஸ்தானை இனி ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்பதில் இந்தியா தெளிவாகவுள்ளது.

இந்திய எல்லைக்குள் ஊடுருவக் காத்திருக்கும் பயங்கரவாதிகளை பாகிஸ்தான் கட்டுப்படுத்தி வைக்க வேண்டும். இனியும் கண்ணாமூச்சி ஆடிக் கொண்டிருக்க முடியாது. வான் வழியாகவோ அல்லது தரை வழியாகவோ அல்லது இரு வழிகளிலுமோ நாம் எல்லை தாண்டிச் சென்றால், அதன் விளைவுகள் மோசமாக இருக்கும்.

370 பிரிவு நீக்கப்பட்ட பிறகு காஷ்மீரில் பயங்கரவாதத்தை பரப்புவது பற்றி பாகிஸ்தான் வெளிப்படையாகக் கூறி வருகிறது. அணுவாயுதம் என்பது குற்றங்களைத் தடுப்பதற்காகத்தான். அவர்களிடம் போர் புரிய ஆயுதங்கள் ஏதும் இல்லை. ஒரு வேளை, இந்தியாவைத் தாக்க அவர்கள் அணுவாயுத--த்தைப் பயன்படுத்தினால், அதை உலக நாடுகள் பார்த்துக் கொண்டிருக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து நீக்கம்; வீர மரணமடைந்தவர்களுக்கான அஞ்சலி

### அமித்ஷா குற்றச்சாட்டு

(டில்லி)

காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய சட்டப்பிரிவுகளை நீக்கியதன் ஊடாக தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராடி வீர மரணமடைந்த வீரர்களுக்கு உண்மையான அஞ்சலி செலுத் தப்பட்டுள்ளதென மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா சுட்டிக்காட்டினார். குஜராத் மாநிலத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அமித்ஷா மேலும் கூறியுள்ளதாவது, "ஜம்மு- காஷ்மீரில் தீவிரவாதத்தை எதிர்த்து பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட பல வீரர்கள் தங்களின் உயிரை தியாகம் செய்தனர்.

கடந்த 70 ஆண்டாக காஷ்மீரில் நீடித்த அந்தச் சூழலை சரி செய்யவோ, அதில் கவனம் செலுத்தவோ யாருக்கும் தைரியம் வரவில்லை. ஆனால் காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் சட்டப்பிரிவுகள் 370 மற்றும் 35 ஏயை நீக்கியதன் ஊடாக வீர மரணம் அடைந்த வீரர்களுக்கு உண்மையான அஞ்சலி செலுத்தப்பட்டிருக்கிறது.

இதனால் காஷ் மீர் இனி, வளர்ச்சிப் பாதையின் கீழ் பயணிக்குமென இந்திய மக்களுக்கு உறுதி அளிக்கிறேன்" என மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## ஆயுதங்களை விற்பனை

## தூண்டும் நாடுகள் அகத

### போப் பிரான்சிஸ் குற்ற

(வாடிகன் சிற்றி)

**உலகெங்கும் இடம்பெற்று வரும் போர்களில் பய ஆயுதங்களைத் தயாரித்து விற்று வரும் நாடுகள் பி காரணமாக நாட்டை விட்டு வெளியேறும் அகதிகளை வதாக போப் பிரான்சிஸ் கடந்த ஞாயிற்றுக்கிழமை**

இத்தாலியக் குடியேற்றவாசி பெற்றோருக்கு பிறந்த போப் பிரான்சிஸ் (வயது-82) குடியேற்றவாசிகள் மற்றும் அகதிகளுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அவர் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஐரோப்பாவிலுள்ள குடியேற்றவாசிகளுக்கு எதிரான அரசியல்வாதிகளின் குடிவரவுக் கொள்கை தொடர்பில் அவர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறார்.

இந்நிலையில் அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை உலக குடியேற்றவாசிகள்

## மீன்வளத்துறைக்கு எ காலவரையறையற்ற

(இராமநாதபுரம்)

இராமநாதபுரம்- பாம்பன் பகுதியிலுள்ள விசைப்படகுகளுக்கு முறையாக மானிய டீசல் வழங்காத மீன்வளத்துறையைக் கண்டித்து காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை நேற்றுச் செவ்வாய்க்கிழமை முதல் மீனவர்கள் ஆரம்பித்தனர்.

பாம்பன் பகுதியில் சுமார் 120 விசைப்படகில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு மாதந்தோறும் 1500 லீற்றர் டீசல் மானியமாக வழங்கப்படுவது வழக்கம்.

இந்நிலையில் இரும்புப் படகு வைத்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் 50 விசைப்படகுகளுக்கு கடந்த சில மாதங்களாகவே மீன்வளத்துறை அதிகாரிகள் மானிய டீசல் வழங்கவில்லை என ஒரு புகார் எழுந்தது.



இவ்விடயம் தொடர்பாக மீன்வளத்

## வெளிநாடுகளிலுள்ள சீனர்களும் வெளிநாட்டவரும் ஒற்றுமைப்

### சீனாவின் தேசிய தினத்தில் சீன ஜனாதி

(பீஜிங்)

சீனாவில் வாழும் பல்வேறு இனக்குழுவினரும், வெளிநாடுகளில் வசிக்கும் சீனர்களும் ஒற்றுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் வேண்டுகோள் விடுத்தார். சீனாவின் எழுபதாவது தேசிய தினத்தை முன்னிட்டு நேற்று தியானன்மென் சதுக்கத்தில் இடம்பெற்ற பெருவிழாவில் உரையாற்றிய போதே அவர்






# வெளிநாடு

## னை செய்து போர்களை
## கதிகளை ஏற்பதில்லை

### ற்றச்சாட்டு

**ரில் பயன்படுத்துவதற்காக கள் பின்னர் அதே போர்கள் திகளை ஏற்க மறுத்து வரு ிழமை குற்றஞ்சாட்டினார்.**



மற்றும் அகதிகள் தினத்தையொட்டி வத்திக்கானில் சென்பீற்றர்ஸ் சதுக்கத்தில் இடம்பெற்ற ஆராதனை நிகழ்வில் ஆற்றிய உரையின் போதே மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

உலகில் சில பிராந்தியங்களை மட்டுமே போர்கள் பாதித்துள்ளன எனவும் அந்தப் பிராந்தியங்களுக்கு போர்களுக்கான ஆயுதங்களை விற்று போரைத் தூண்டி வரும் நாடுகள் பின்னர் அந்தப் போர்களால் உருவாகிய அகதிகளை ஏற்க விருப்பமற்றனவாக உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## த எதிராக மீனவர்கள்
## ற்ற வேலை நிறுத்தம்



துறை அதிகாரிகளுக்கு மீனவர்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்தும் பல முறை மாவட்ட ஆட்சியரை சந்தித்தும் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காதமையினால் ஆத்திரமடைந்த மீனவர்கள், 120 விசைப் படகுகளை கரையோரம் நங்கூரமிட்டு, தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போராட்டம் காரணமாக நேரடியாக இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்களும் மறைமுகமாக 50000 இற்கும் மேற்பட்ட மீனவர்களும் வாழ்வாதாரம் இன்றி தவித்து வருகின்றனர்.

இதனால் நாள் ஒன்றுக்கு சுமார் 3 கோடி ரூபாய் வர்த்தகம் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் கவலை வெளியிட்டனர். மேலும் மீன்வளத்துறை அதிகாரிகள் அனைத்து மீனவர்களுக்கும் மானிய டீசல் வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ஜ-2)

## ளும் சீனாவிலுள்ள
## மப்பட வேண்டும்

### னாதிபதி வலியுறுத்து



இந்த கோரிக்கையை விடுத்தார். அதேவேளை, ஹொங்கொங் கில் "ஒரே நாடு, இரண்டு நடைமுறை" என்ற கொள்கையைச் சீனா பின்பற்றவிருப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

தேசிய தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், சர்வதேச தளத்தில் சீனாவின் வளர்ச்சி குறித்து பெருமிதம் அடைவதாகத் தெரிவித்தார். வழக்கமாக தேசிய தின நிகழ்ச்சியில் சீனப் பிரதமரே உரையாற்றுவார். ஆனால் இம்முறை சீன ஜனாதிபதி உரையாற்றியிருக்கின்றமை விசேட அம்சமாகும். அதேவேளை, ஹொங்கொங் ஆர்ப்பாட்டக்காரர்கள் சீனாவின் தேசிய தினத்தை புறக்கணிக்கும் வகையில் தமது பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-2)

## பிலிப்பைன்ஸில் ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் எதிரொலி; 20 ஆயிரம் பன்றிகள் கொன்று குவிப்பு

(மணிலா)

பிலிப்பைன்சில் ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் பரவிவரும் காரணத்தால் 20,000 பன்றிகளை அந்நாட்டு அரசு கொன்று குவித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டில் ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் அதிகமாகப் பரவி வருகிறது. இதனால் பொதுமக்களிடையே பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது. பன்றிக் காய்ச்சலை கட்டுப்படுத்த அரசு பல்வேறு முயற்சிகள் எடுத்து வந்த போதிலும் நோயின் வீரியத்தை கட்டுப்படுத்த இயலவில்லை. இதையடுத்து நோய் ஏற்படக் காரணமான பன்றிகளை அந்நாட்டு அரசு கொன்று குவிக்கத் தொடங்கியுள்ளது.


இது குறித்து பிலிப்பைன்ஸ் வேளாண்துறை செயலர் வில்லியம் தார் கூறுகையில், "பன்றி பண்ணைகள் சரியாக பராமரிப்பு இல்லாமல் இயங்குவதே நோய் பரவுவதற்கு முக்கிய காரணமாகும். நேற்று, 20,000 பன்றிகள் கொல்லப்பட்டுள்ளன. அவற்றில் 6,600 பன்றிகள் நோயால் பாதிக்கப்பட்டவை. மீதம் உள்ள பன்றிகள் நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கை காரணமாக கொல்லப்பட்டுள்ளன. அதிகபட்சமாக புலாகான் மாகாணத்தில் இருந்து அதிக பன்றிகள் கொல்லப்பட்டுள்ளன" என மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## இஸ்ரேலை உலக வரைபடத்திலிருந்தே அகற்றுவோம்-ஈரான் இராணுவத்தளபதி

(டெஹ்ரான்)

ஈரானின் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக இஸ்ரேலை உலக வரைபடத்திலிருந்தே அழிப்பது தற்போது சாத்தியமாகக்கூடிய விடயமாக மாறியுள்ளது என ஈரான் புரட்சிகர காவல்படையின் தளபதி ஜெனரல் ஹொசைன் சலாமி தெரிவித்தார்.

இஸ்ரேலின் தீய அரசாங்கத்தை உலக வரைபடத்திலிருந்தே துடைத்தெறிய வேண்டும், எனத் தெரிவித்துள்ள சலாமி இது தற்போது வெறும் கனவு மாத்திரமல்ல சாத்தியமாகக்கூடிய



விடயம் எனவும் தெரிவித்தார்.

ஈரானியப் புரட்சி இடம்பெற்று நான்கு தசாப்தத்திற்கு பின்னர் நாங்கள் சியோனிச ஆட்சியாளர்களை அழிப்பதற்கான திறனைப் பெற்றுள்ளோம் எனவும் புரட்சிக்கு ஆதரவாக அதிகாரத்தைப் பலப்படுத்துவதே புரட்சியின் இரண்டாம் கட்ட நடவடிக்கை எனவும் தெரிவித்தார்.

இஸ்லாமிய புரட்சியே இரண்டாம் கட்டத்தில் அதிக கவனத்தை பெறும் நாங்கள் சர்வதேச அளவில் இஸ்லாமியர்களை அணிதிரட்டுவது குறித்து கவனம் செலுத்துவோம் என மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## பேருந்து கவிழ்ந்து விபத்து; 15 மாணவர்கள் உயிரிழப்பு!


(பாங்கொக்)

தாய்லாந்தில் இடம்பெற்ற பேருந்து விபத்தொன்றில் கல்லூரி மாணவர்கள் 15 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் உள்ள தனியார் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் புறநகர்ப் பகுதியில் உள்ள தொழிற்சாலையொன்றில் தொழில்முறை பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த பயிற்சிகள் நிறைவடைந்த பின்னர் தொழிற்சாலை நிர்வாகத்தின் சார்பில் அவர்களுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிறப்பு விருந்தும் ஏற்பாடு செய்யப்பட்டது.

அதன் பொருட்டு கல்லூரி மாணவர்கள் 15 பேரும், தொழிற்சாலை அதிகாரிகள் 3 பேரும்



பேருந்தொன்றில் புறப்பட்டுச் சென்றனர்.

இதன்போது, அதிவேகத்தில் பயணித்துக் கொண்டிருந்த பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இந்தக் கோர விபத்தில் கல்லூரி மாணவர்கள் 15 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். அத்துடன் தொழிற்சாலை அதிகாரிகள் 3 பேரும் படுகாயங்களுக்குள்ளாகி அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஜ-2)

## கைத்தொலைபேசி வெடித்ததில் 14 வயது மாணவி உயிரிழப்பு!

(கசகஸ்தான்)

கைத்தொலைபேசி வெடித்ததால் மாணவி ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் கசகஸ்தான் நாட்டில் இடம்பெற்றது.

தனது வீட்டின் அறையில் பாடல் கேட்டுக்கொண்டிருந்த 14 வயது மாணவியொருவர் கைத்தொலைபேசியைச் சார்ச் செய்வதற்காக அதனை சார்ச் போட்டுவிட்டு தலையணைக்கு அடியில் வைத்தபடி நித்திரைக்குச் சென்றுள்ளார். இதன்போது மின்கலம் சூடேறி வெடித்ததால் மாணவி தலைப் பகுதியில் பலத்த காயமடைந்து உயிரிழந்தார்.

நேற்று அதிகாலை அவர் நித்திரைவிட்டு எழும்பாததால் மாணவி நித்திரையில் இருந்த அறைக்குச்சென்ற பெற்றோர் மகள் இறந்து கிடப்பதை பார்த்து பெரும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்தனர். சம்பவத்தையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் குறித்த மாணவி கைத்தொலைபேசியை மின் இணைப்புடன் வைத்து உறங்கியதால் ஏற்பட்ட அதிக மின் ஏற்றம் காரணமாக மின்கலம் சூடேறி வெடித்து சிதறியது. இதனால் மரணம் சம்பவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-2)

# தவறான தீர்மானங்களை திருத்திக்கொண்டு சு.கட்சி பெரமுனவுடன் இணைய வேண்டும்

## ரோஹித அறிவுரை

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தில் சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து முன்னெடுத்த தவறான அரசியல் தீர்மானங்களை இனியாவது திருத்திக் கொண்டு பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன அறிவுரை வழங்கினார்.




அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சுதந்திரக் கட்சி மீண்டும் இணைந்தால் சுதந்திரக் கட்சி முழுமையாக இல்லாதொழிக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ பொதுஜன பெரமுனவின் வெற்றிக்கு ஒரு தடையல்ல. பொதுஜன பெரமுனவில் அங்கத்துவம் வகிக்கும் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்த கூட்டணி இம்மாதம் 5 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஸ்தாபிக்கப்படும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனாக பரந்துபட்ட கூட்டணி குறித்த பேச்சுவார்த்தை தொடர்ந்த வண்ணமே காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தென்கிழக்குப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் போராட்டம்



(அம்பாறை)

தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களால் நேற்று முன்தினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக நுழைவாயிலில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு முன்பாக உள்ள வீதி வரை ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் சிறிது நேரம் போக்குவரத்து தடைப்பட்டது.

கல்விசாரா ஊழியர்களின் தொடர் பணிப் பகிஷ்கரிப்பின் 21 ஆவது நாளான நேற்று முன்தினம் திங்கட்கிழமை அடையாளப் போராட்டமாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், வேட்பாளர்கள் தொடர்பிலே கவனம் செலுத்துகின்றனர். நாட்டின் பல பாகங்களிலும் அரச ஊழியர்கள் சம்பள உயர்வு சம்பந்தப்பட்ட போராட்டங்களைத் தொடர்ந்த வண்ணம் உள்ளனர். அதனை கவனிக்கவில்லை எனப் போராட்டக்காரர்கள் குற்றம் சுமத்தினர்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் சம்பந்தமாக உயர் கல்வி அமைச்சருக்குத் தெரியப்படுத்திய போதும் அது தொடர்பில் இதுவரை எதுவித முடிவும் எட்டப்படாத நிலை ஏமாற்றத்தை தருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-7)

## அரசியல் துறையிலுள்ள

# அனைத்து இனவெறி செயற்பாடுகளும் தோற்கடிக்கப்பட வேண்டும் - அநுர

(பதுளை)

நாட்டின் சக்திவாய்ந்த அரசியல் பிரமுகர்கள் தங்கள் அரசியல் பிரசாரங்களை மக்களை இன ரீதியாக பிரிப்பதை மையமாகக் கொண்டே மேற்கொள்வதாக தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சாட்டினார்.

பதுளையில் இடம்பெற்ற பேரணி ஒன்றில் கருத்துத் தெரிவித்த அநுர, நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும் என்றால் அரசியல் துறையில் உள்ள அனைத்து இனவெறி செயற்பாடுகளும் தோற்கடிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.



பல சிங்கள, முஸ்லிம் மற்றும் தமிழ் அரசியல் தலைவர்கள் தங்களது சொந்த அரசியல் பிழைப்புக்காக இத்தகைய செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

எனவே நாட்டை மற்றொரு போரை நோக்கி தள்ளக்கூடாது என்றும், இனவெறியைத் தூண்டுவதற்கு யாரையும் அனுமதிக்கக் கூடாது என்றும் அநுர வலியுறுத்தினார்.

மேலும் வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் அமைதியை நேசிக்கும் சக்தியை பொதுமக்கள் ஆதரிக்க வேண்டும் என்றும் முற்போக்கான நாட்டை ஸ்தாபிக்க மக்கள் வழியமைத்துத் தர வேண்டும் என்றும் அநுரகுமார கோரிக்கை விடுத்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## யானையும் பானையும்

ஒரு அமைச்சர் அரண்மனைக்கு ‘ லேட்டா ’ வந்திருக்கிறார். ‘ஏன் லேட்! ’ என்று கேட்டிருக்கார் ராஜா.

அரசே! நான் சீக்கிரமாகவே புறப்பட்டுவிட்டேன்...

அந்த சமயம் பார்த்து என் பையன் அடம் பண்ண ஆரம்பித்து விட்டான்... நானும் கூட வருவேன் என்று பிடிவாதம் பிடிக்கிறான்...அவனை ஒரு வழியாக சமாதானம் செய்து சரி செய்து விட்டு வருவதற்குள்ளே... போதும் போதும் என்று ஆகிவிட்டது... அது தான் கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது....! என்றார் அமைச்சர்.

அரசர் சிரித்தார் ‘என்ன அமைச்சரே! அரண்மனையிலே எத்தனையோ கடுமையான பிரச்சினைகளுக்கெல்லாம் மிகவும் சாமர்த்தியமாகப் பதில் சொல்லி சமாளிக்கிற உங்களுக்கா ஒரு குழந்தையை சமாதானப்படுத்துறது பெரிய விடயமாப் போய் விட்டது?' என்றார்.

‘ ‘ மன்னா ... ஒரு பெரிய யானையை அடக்குவதை விட ஒரு பெரிய சேனையை போரிலே ஜெயிப்பதைவிட, ஒரு குழந்தையை சமாதானப்படுத்துவது கஷ்டமான செயல்...! ” என்றார் இவர்.

‘ ‘அப்படியா சொல்றீங்கள்? ’ என்று சந்தேகமாகக் கேட்டார் ராஜா.

‘ ‘வேணும்னா நான் அதை நிரூபித்துக் காட்டுகின்றேன்... அதற்கு நீங்கள் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டும்” என்றார்.

என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்.

‘ ‘கொஞ்ச நேரம் நீங்கள் எனக்கு அப்பாவா நடிக்க வேண்டும். நான் உங்க குழந்தையா நடிக்கிறேன். நான் அடம் செய்வேன். நீங்கள் என்னை சமாதானப்படுத்த வேண்டும்!”என்றார் அமைச்சர்.

‘ ‘ சரி ! ” என்று ஒத்துக் கொண்டார் ராஜா.

இப்ப...ராஜா தான் அப்பா! அமைச்சர் தான் குழந்தை!

அமைச்சர் தரையிலே உட்கார்ந்தார். கையைக் காலை உதைச்சிக்கிட்டு கத்த ஆரம்பித்துவிட்டார்.

அதாவது குழந்தை அடம்பண்ண ஆரம்பித்துவிட்டது.

அப்பா...அதுதான் ராஜா...கிட்டத்திலே வந்தார்! ‘ ‘ ஏன் அழுகிறாய்? உனக்கு என்ன வேணும் !”என்றார். எனக்கு ஒரு யானை வேண்டும் என்று அழுதது அந்தக் குழந்தை!

இது தானா பிரமாதம்... என்று ஒரு பொம்மை யானையைக் கொண்டு வந்து குடுக்கச் சொன்னார். கொடுத்தார்கள்.

குழந்தை மறுபடியும் கத்தியது.

‘‘எனக்கு இது வேண்டாம்.. நிஜம் யானை வேண்டும்!” என்றது. ராஜா நினைத்தால் முடியாதா?

“உடனே ஒரு பெரிய யானையை கொண்டு வந்து நிறுத்தினாங்க. ‘ ‘ அப்பா... எனக்கு இப்போ ஒரு பானை வேண்டும்! என்றது குழந்தை! ராஜா பார்த்தார்... ஒரு பானை கொண்டு வந்து கொடுக்கச் சொன்னார்...”

குழந்தை மறுபடியும் உதைச்சுக்க ஆரம்பித்தது. ‘ ‘ நீ கேட்டதை கொடுத்து விட்டேன். மறுபடியும் ஏன் கத்துகிறாய்?” என்றார்.

‘ ‘இந்த பானைக்குள்ளே அந்த யானை போக வேண்டும்!” என்று கத்துகிறது குழந்தை.ராஜா பார்த்தார். ‘ ‘ சரி... இந்த பானையிலே அந்த யானை போக வேண்டும்! அவ்வளவு தானே!” என்றார். அந்தப் பானையை தரையிலே வைத்தார்... அதிலே அந்த யானையை போகச் சொன்னார்.

யானை அதிலே காலை வைத்தது... பானை உடைந்து போய் விட்டது. குழந்தை மறுபடியும் கத்த ஆரம்பித்துவிட்டது.

“எனக்கு பானை வேணும்!”என்று சரி ... இன்னொரு பானை கொண்டுவந்து கொடுங்கள்! என்றார். கொண்டுவந்து கொடுத்தார்கள்! “எனக்கு இந்தப் பானை வேண்டாம்! அந்தப் பானை தான் வேண்டும்!” என்று கத்துகிறது குழந்தை.

“அதுதான் உடைந்து போய்விட்டதே!”என்றார்.

‘‘உடைந்தால் என்ன... அதை மறுபடியும் ஒன்று சேர்த்து பழையபடி பானையாக்கிக் கொடு!”என்று பிடிவாதம் செய்தது குழந்தை! ராஜா பார்த்தார்... இதுக்கு மேலே நம்மாலே தாக்குப் பிடிக்க முடியாது என்று முடிவுக்கு வந்துவிட்டார்.


‘‘போதும் அமைச்சரே! குழந்தையை சமாதானப்படுத்துறது கஷ்டம் தான் என்று புரிந்து கொண்டேன். எழுந்திடுங்கள்!” என்றார். அமைச்சர் அதற்குப் பிறகுதான் கையை, காலை உதறிக் கொண்டு எழுந்தார். குழந்தைகள் பிடிவாதம் இருக்கிறது பாருங்கள்...அது ஒரு தனி ரகம் தான்!

பள்ளிக்கூடத்திலே ஒரு பையன்...தரையிலே கிடந்து வாள் வாள் என்று கத்திக் கொண்டு கிடந்தான். அந்த நேரம் பார்த்து அந்தப் பையனுடைய அப்பா வந்தார். அழைத்துக் கொண்டு போவதற்கு! ஏன் பையன் கத்துகிறான்? என்று கேட்டார்.

பையன்களுக்குள்ளே ஏதோ சண்டை. அதிலே ஒரு பக்கத்துக் காதை கடித்துவிட்டான். அதுதான் கத்துகிறான்! என்றார் ஆசிரியர். அய்யய்யோ...அப்படி என்றால் என் பையனை உடனே ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு போக வேணுமே ! என்று பதறினார் அந்த அப்பா! பதறாதீங்க சேர்! கடிபட்டவன் வைத்தியசாலைக்குப் போய்விட்டான். இவன் கடித்தவன் கத்துறான் ! என்றார் ஆசிரியர். ஏன் ? என்று கேட்டார் அப்பா!

‘ ‘இன்னொரு பக்கத்துக் காதும் வேணும் கடிக்கிறதுக்கு என்று அடம் செய்கிறான் சேர்! ”அப்படி என்றால் ஆசிரியர் தன்னுடைய காதை தடவிப் பார்த்துக் கொண்டே.

# காந்தியின் 150வது பிறந்த தினம், சர்வதேச அகிம்சை தினம் இன்று



மகாத்மா காந்தியடிகளின் 150 ஆவது ஜெயந்தி தினம் இன்று (ஒக்டோபர் 02) புதன்கிழமை கொண்டாடப்படுவதை முன்னிட்டு இவ்வாக்கம் பிரசுரிக்கப்படுகிறது. காந்தியடிகளின் பிறந்த தினத்தை சர்வதேச அகிம்சை தினமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

புகழ் பெற்ற தத்துவார்த்த இயற்பியலாளர் ஆல்ப்ர்ட் ஐன்ஸ்டீன் ஒருமுறை மகாத்மா காந்தியைப் பற்றி கூறும் போது, "வருகின்ற தலைமுறைகள் நன்றாக இருப்பினும் இதுபோன்ற ஒரு மனிதர் இரத்தமும் சதையுமாக இந்த பூமியின் மேல் உலவினார் என்பதை அரிதாகவே நம்புவார்கள்" எனக் கூறினார். ஆம் இன்றைய அவசர உலகில் இப்படியான மனிதர்களின் உன்னத தியாகங்களை சிந்திப்பது என்பதே முடியாததொன்றாகி விட்டது.

மகாத்மா என்று பாசத்துடன் அழைக்கப்படும் காந்தி, இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய கதாநாயகர்களில் ஒருவர். அகிம்சையின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்த அவர் சுதந்திரத்திற்கான அவரது போராட்டத்தில் அதே அணுகுமுறையைக் கையாண்டார். காந்தி அரசியல் சுதந்திரத்திற்காக மட்டும் போராடவில்லை. சாதி, மதம், பொருளாதார நிலை மற்றும் ஆண், பெண் சமத்துவ சமூகத்தினைக் கொண்ட ஒரு தேசத்திற்காகவும் போராடினார்.

காந்தி அரசியல் ஞானி, ஆன்மீக ஞானி என்பதற்கப்பால் கீழைத்தேசத்தில் பெயர் குறிப்பிடக்கூடிய தத்துவவியலாளராகவும் கல்வியியலாளராகவும் விளங்குகிறார். அந்த வகையில் அவரின் கல்வித்திட்டம் பற்றி அவரின் பிறந்தநாளில் நோக்குதல் பொருத்தமுடையதாகும்.

காந்தியடிகள் காட்டிய கல்வித்திட்டம் ஆதாரக் கல்வித்திட்டமாகும். இது சர்வோதய சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெறுகிறது. கல்வி சார்ந்த சர்வோதய இயக்கமானது பல துறைகளின் வளர்ச்சியை தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது. ஆதாரக் கல்வி, முதியோர் கல்வி, தாய்மொழி வளர்ச்சி, மாதர் முன்னேற்றம், உழவர் நிலை உயர்தல், தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்வு, பூர்வீக குடிகளின் உயர்வு போன்ற சகல துறைகளின் வளர்ச்சியையும் அது தன்னுள் அடக்கியுள்ளது.

ஆன்மீக, பொருளாதார, அரசியல் விடுதலைக்கு வித்திட்டு அதன் மூலமாக தேசிய நோக்கை வளர்த்துச் சுயாட்சி ஏற்பட வேண்டும் என்று காந்தியடிகள் விரும்பினார்.

ஆதாரக் கல்வி என்பது ஒரு வாழ்க்கை நெறி. இது ஒரு கற்றல் முறையும் வாழும் முறையுமாகும். வாழ்க்கை மூலம் கற்றல் என்ற உயர் விழுமிய முறையினை இது கொண்டுள்ளது.

கல்விக்கு வரையறை கூறிய காந்தியடிகள், கல்வி அறிவை வளர்ப்பது ஆற்றல்களை வளர்ப்பது, உணர்ச்சிகளைப் பண்படுத்துவது, மக்களை வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வது, மனிதனின் சமூக நடத்தையை மாற்றி அமைப்பது, மக்களில் உள்ளடங்கியிருக்கும் ஆன்மீகப் பண்புகளைப் படிப்படியாகவும் முழுமையாகவும் வெளிப்படுத்துவது என்று கூறினார்.

கல்வி மனிதனின் உரிமையென்று கொள்ளும் காந்தியடிகள் அவ்வுரிமையைத் தமது கல்வித்திட்டத்தில் உயிர் நாடியாகக் கொண்டார்.

ரஷ்ய நாட்டினரான டால்ஸ்டாய் எனும் தத்துவஞானி விவசாய அடிப்படையில் கல்வி, மத, சமரச அடிப்படையில் கல்வி, உலக நெறியை வளர்க்கும் கல்வி போன்ற கருத்துக்களைப் பரப்பியவர். இவரது கருத்துக்கள் காந்தியடிகளைக் கவர்ந்தன. இதனால் தத்துவஞானி டால்ஸ்டாய்க்கு அஞ்சலி செலுத்தும் முகமாக டால்ஸ்டாய் பண்ணையை காந்தியடிகள் நிறுவினார்.

"ஓர் ஆசிரியன் தன்னால் ஆற்ற முடியாத கருமத்தை மாணவர்கள் ஆற்ற வேண்டுமென்று போதித்தல் கூடாது" என்று ஒரு முடிவு இப்பண்ணையின் மேற்கோளாக அமைந்திருந்தது.

காந்தியடிகள் உடலுழைப்பைக் கல்வியுடன் இணைத்தார். உடல் உழைப்பிற்கு உரிய இடம் கொடுக்கும் கல்வியே சிறந்த கல்வியென்பது அவருடைய சித்தாந்தம், கல்வி அனுபவச் செயற்பாட்டிற்குத் தொடர்புடையதாய் அமைய வேண்டும். வெறுமனே பெறும் ஏட்டுக் கல்வி மட்டும் கல்வியாகாது" என்று கூறும் காந்தியடிகள், தொழிற் பயிற்சியும் கல்வியின் பாற்பட்டது என்று அறிந்து கைத்தொழில் ஒன்றையும் கற்க வேண்டும் என்றார்.

காந்தியடிகளின் கல்விச் சிந்தனைகளுக்கு உறுதியளித்த சிந்தனையாளர்களில் டால்ஸ்டாயைத் தவிர ஜோன் ரஸ்கின் என்பவரும் சிறப்பிடம் பெறுவார். ஜோன் றஸ்கின் என்பவர் எழுதிய "கடையனுக்கும் கடைத்தேற்றம்" என்னும் நூல் காந்தி அடிகளின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியதுடன் அவரது உள்ளத்தில் சர்வோதயம் என்ற இலட்சியம் உதயமாவதற்கும் கரு அளித்தது.

காந்தியடிகள் உலகிற்கு அளித்த சிறந்த தத்துவம் இதுவென அறிஞர் கூறுவர். தம் வாழ்க்கையில் உடலுழைப்பின் மூலம் பொருளைச் சம்பாதித்து உயர்வடைய எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் உண்டாகையால் ஒரு சட்டத்தரணிக்கு சமூகத்தில் எவ்வளவு மதிப்புண்டோ அவ்வளவு மதிப்பு ஒரு நாவிதனுக்கும் இருக்க வேண்டும் என்ற தத்துவத்தை மேற்கூறப்பட்ட நூலிலிருந்து காந்தியடிகள் பெற்றார்.

சாதி, வகுப்பு, மதம் என்ற வேற்றுமையெதுவுமின்றி எவ்விதத்திலும் ஏற்றத்தாழ்வும் சுரண்டலுமற்று உடலுழைப்பை ஆதாரமாகக் கொண்ட சர்வோதய சமுதாயம் கல்வி மூலமே உருவாகலாம் என்பதில் காந்தியடிகள் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார்.

எமது நாட்டின் கல்வியில் இடம்பெற்றுள்ள தொழில் முன்னிலைப்பாடம், வாழ்க்கைத்திறன் பாடம் என்பன காந்தியடிகளின் சிந்தனையிலிருந்து பெற்றனவாகும்.

மனித குலம் வன்முறையற்றதாக, சத்தியத்தின் வழிப்பட்டதாக இருக்க வேண்டும் என்ற அவரது தத்துவத்தில் கல்வியும் ஒரு பகுதி" என்றார். எனவே அவரின் கல்வித் தத்துவம் மனித குலம் உள்ளவரை நிலைத்திருக்கும் ஒன்றாக மாறியுள்ளது.

ஆயுதங்களில் வலிமையானது அகிம்சை. வாழ்வில் நிலையானதும் உயர்வானதும் சத்தியம் என்பதை அனைவருக்கும் உணர்த்திய காந்தியடிகளின் வாழ்வு மக்களுக்கு ஒரு சிறந்த பாடமாக அமைகிறது. அடிகளாரின் 150 ஆவது பிறந்தநாளில் அவரின் கொள்கையைப் பின்பற்றி உன்னத சமுதாயத்தை நோக்கிப் பயணிக்க உறுதி பூணுவோமாக.

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி,
ஆசிரியர் காந்தீயம்,
அகில இலங்கை காந்தி சேவா சங்கம்.

# கோத்தா கூடிய விரைவில் வாபஸ் பெற நேரிடலாம்

## ராஜித தெரிவிப்பு

(கொலன்னாவ)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், வேட்பாளராக களம் இறங்கியுள்ள கோத்தபாய ராஜபக்ஷ வாபஸ் பெற நேரிடலாம் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில், ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியிருக்கும் அமைச்சர் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு தெரிவித்து, கொலன்னாவ பகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அமைச்சர் ராஜித மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கான உரிய கடவுச்சீட்டு கோத்தபாயவிடம் இல்லை என குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவித்ததாகவும் 2 தேசிய அடையாள அட்டைகள் இருப்பதாகவும் குற்றஞ்காட்டியுள்ளார். மேலும், இவற்றை மறைக்கும் முகமாக செயற்பட்டுள்ளார்.

எனவே கூடிய விரைவில் கோத்தபாய தேர்தலில் இருந்து வாபஸ் பெற நேரிடலாம் என ராஜித மேலும் தெரிவித்தார். (இ-7)

# அமெரிக்க முகாமுக்குள் ஜிகாதிகள் தாக்குதல்

(வோஷிங்டன்)

சோமாலியாவில் அமெரிக்க படை வீரர்களுக்கு கொமாண்டோ பயிற்சியளிக்கப்படும் இராணுவ தளத்தை இலக்கு வைத்து ஜிகாதி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் உயிரிழப்புகள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தெற்கு ஷபேல் (Shabelle) பகுதியில் உள்ள பாலேடோக்லே விமானநிலையத்தில் பல குண்டு வெடிப்புகள் மற்றும் துப்பாக்கி சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றதாக உள்ளூர்வாசிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த தாக்குதல்களை தாங்கள் நடத்தியதாக தெரிவித்துள்ள அல்-ஷபாப் (al-Shabab) தீவிரவாத குழு, இராணுவ முகாமின் வாயில்களை கார் வெடிகுண்டு மூலம் தகர்த்ததாகவும், அதன்பின்னர் தமது போராளிகளை முகாமுக்கு உள்ளே அனுப்பியதாகவும் தெரிவித்தது.

தாக்குதல் இடம்பெற்ற இடத்திலிருந்து ஜிகாதி கிளர்ச்சியாளர்கள் அப்புறப்படுத்தப்பட்டதாக இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டனர். (ஜ-2)

# "நீதி தேவதையே கண் திறந்து பார்"

# காணாமலாக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகள் எங்கே?

## மட்டக்களப்பிலும் நேற்று ஆர்ப்பாட்டம்







(ஏறாவூர்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் மட்டக்களப்பில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

'காணாமலாக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகள் எங்கே? அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும்' என வலியுறுத்தி மட்டக்களப்பு காந்தி பூங்காவிற்கு முன்பாக நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்ட காணாமற்போனவர்களின் உறவினர்கள் 'சின்னஞ்சிறு பிள்ளைகள் செய்த பிழை என்ன?', 'சிறுவர்கள் மீண்டும் வருவார்களா?', 'குற்றவாளியை விசாரணை செய்து தண்டனை வழங்கு', 'நீதி தேவதையே கண்திறந்து பார்', 'பாடசாலை சென்ற பாலகர்கள் எங்கே?' போன்ற வாசகங்களை கொண்ட பதாகைகள் மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் படங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும்பொறுப்புக்கூறுஐ.நாவே பொறுப்புக் கூறு போன்ற கோஷங்கள் எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட உறவினர்கள் 'இலங் கையில் காணாமலாக்கப்பட்ட தமிழ் குழந்தைகள்' எனும் தலைப்பில் புத்தகம் ஒன்றையும் வெளியிட்டனர்.

இதேவேளை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் ஊடாக ஐ.நா.சபைக்கு மகஜர் ஒன்றை கிறிஸ்தவ பாதிரியாரிடம் வழங்கினர்.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வடக்கு-கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவி அ.அமலநாயகி தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், சிறுவர்கள், கிறிஸ்தவ பாதிரியார்கள் மற்றும் பொது அமைப்புகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். (இ-7)

# தேசிய கல்வியியற் கல்லூரியில் திருக்குறள் நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ் மன்றமும் வடக்கு மாகாண கலாசார திணைக்களமும் இணைந்து நடத்தும் "மரபு பேணுவோம்" என்னும் தொனிப் பொருளில் "திருக்குறள் நூல் அறிமுக விழா" நாளை 03 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியளவில் பீடாதிபதி சு.பரமானந்தம் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வடமாகாண கலாசாரத் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர்.

அத்துடன் வடமாகாண கலாசாரத் திணைக்களத்தால் பதிப்பித்து வெளியிடப்பட்ட திருக்குறள், திருக்குறள் ஆய்வுநூல், முப்பானூற்சுருக்கம், திருக்குறள் ஆய்வுக் கையேடு, பேர்சிவல் பாதிரியாரால் தொகுக்கப்பட்ட தமிழ்ப்பழமொழிகள் ஆகிய நூல்கள் ஆசிரிய மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்படும். இவ் விழாவில் பழமொழிகள் என்னும் பொருளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பா.பாலகணேசனும் திருக்குறள் என்னும் பொருளில் விரிவுரையாளர் சி.சிவசங்கரும் திருக்குறள் ஆய்வுகள் என்னும் பொருளில் விரிவுரையாளர் திருமதி க.முகுந்தனும் உரையாற்றுவர். (இ-5)

# சர்வதேச சிறுவர், முதியோர் தினம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றுவலுவுடையோர் தினம் நாளை 3 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி.வனஜா செல்வரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் யோ.இருதயராஜா, வடமராட்சி வலயக் கல்விப் பணிமனை ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)



தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி ஒன்றியமும் தென்மராட்சி பொது அமைப்புக்களும் இணைந்து யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெற்ற க.கனகேஸ்வரனைப் பாராட்டி நடத்தப்பட்ட கௌரவிப்பு விழா கொடிகாமத்திலுள்ள நட்சத்திர மஹால் மண்டபத்தில் தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் தம்பு கந்தையா தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் இராமாவில் ஆலடிப்புலம் ஆதி நடராச கந்தசாமி கோவில் ஆதீனகர்த்தா சிவஸ்ரீ குமார சிறிகாந்தக் குருக்கள், சாவகச்சேரி பங்குத்தந்தை வண.பிதா றெக்ஸ் சௌந்தரா, யாழ்.பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி, தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி. தேவநந்தினி பாபு, சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன், தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.சி.சிவத்திரை, மருதங்கேணி பிரதேச செயலக கணக்காளர் க.சுதர்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்: கொடிகாமம் செய்தியாளர்)

# சிறந்த விவசாயிகள் தெரிவு - 2019 விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தால் 2019 ஆம் ஆண்டிற்கான சிறந்த விவசாயிகள் தெரிவானது நான்கு வகுதிகளின் அடிப்படையில் யாழ். மாவட்ட செய்கையாளர்களிடையே நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

1.சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள்.

2. சிறந்த சேதன விவசாயச் செய்கையாளர்கள்.

3.சிறந்த தேனீ வளர்ப்பாளர்கள்.

4.சிறந்த விவசாயச் செயன்முறைத் தொழில்நுட்பங்களை மரக்றிச் செய்கையில் நடைமுறைப்படுத்துபவர்.

போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் போட்டியாளர்கள் தங்கள் பகுதியிலுள்ள விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை 2019 ஐப்பசி மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் விவசாயப் போதனாசிரியருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது மாவட்டக்காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும். கடித உறையின் இடது பக்க மேற்பக்கத்தில் சிறந்த விவசாயிகள் தெரிவு-2019 எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

சிறந்த ஏனைய செய்கையாளர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் விவசாயத்திணைக்களத்தால் கடந்த காலங்களில் மாவட்ட மட்டத்தில் கௌரவிக்கப்பட்டவர்கள் இப் போட்டியில் கலந்து கொள்வதைத் தவிர்க்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

இந் நிகழ்ச்சித் திட்டமானது செய்கையாளர்களுடன் போட்டி மூலமான ஊக்குவிப்பை ஏற்படுத்துவதோடு சூழலுக்கிசைவான பொருத்தமான தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பரவச் செய்து பேண்தகு உற்பத்தியைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் நடத்தப்படுகின்றது.

மேலதிக தொடர்புகளுக்குப் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். 021 222 2175, 077 305 1363, 077 691 3456 என பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் (யாழ்ப்பாணம்) திருமதி. அ.சிறிரங்கன் அறிவித்தார். (இ)




# வாணி விழா

(யாழ்ப்பாணம்)

சரவணை கிழக்கு பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலைய வாணி விழா எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலய நால்வர் மணி மண்டபத்தில் நிலையப் பொறுப்பாளர் ப.ஞான பண்டிதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-5)

# ஆறுமுக நாவலர் குருபூசை தின சைவ வினா விடைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம், சைவச்சிறார்களின் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையை முன்னிட்டு சைவ வினா விடைப் பரீட்சையை நடத்தவுள்ளது.

இப்பரீட்சை தரம் 1 தொடக்கம் தரம் 10 வரையில் பயிலும் மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளது.

இப் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி நாளை மறுதினம் 4 ஆம் திகதி ஆகும். பரிசில்கள் நவம்பர் 24 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

மேற்படி பரீட்சையில் பங்கு பற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பிற்பகல் 3.30 மணி முதல் 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக்கழக பரீட்சை செயலர் சு.சிறீகாந்தன் அறிவித்தார். (இ)

# உதவியாளர் இன்மையே உயிரிழப்புக்குக் காரணம்

## உறுப்பினர் இலங்கேஸ்வரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

அராலி மேற்கில் குடும்பப் பெண் உயிரிழந்ததற்கு சங்கானைப் பிரதேச செயலகமே காரணம் என வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் க.இலங்கேஸ்வரன் குற்றம் சாட்டினார்.

அராலி மேற்கு முத்தமிழ் கிராமத்திற்கு நீர் வழங்கும் சங்கானைப் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான நீர்த்தாங்கி பவுசர் குறித்த பகுதிக்கு நேற்று முன்தினம் காலை நீர் வழங்கச் சென்ற போது பின்பக்கமாக பவுசர் நகர்த்தப்பட்டது.

அதன்போது நீர் எடுக்க வருகை தந்த குடும்பப் பெண் பரிதாபமாக சில்லில் சிக்கி நசியுண்டு உயிரிழந்தார். நீர் வழங்கும் பவுசர் பின்பக்கமாக நகர்த்தப்படும் போது கட்டாயமாக உதவியாளரின் உதவியுடன் நகர்த்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இவ் அனர்த்தம் இடம் பெற்ற போது நீர்த்தாங்கி பவுசரில் சாரதிக்கு உதவியாளர் இருக்க வில்லை. குறித்த பகுதிக்கான நீர் விநியோகத்தில் ஈடுபடும் சங்கானைப் பிரதேச செயலகம் பொறுப்புடன் செயற்பட்டிருந்தால் இந்த அனர்த்தத்தை தடுத்திருக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் சங்கானைப் பிரதேச செயலாளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, தமது பிரதேச செயலகத்திற்கு சாரதி உதவியாளர் தரப்பபடவில்லை எனவும் தற்போது அதற்கான கோரிக்கையை விடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10-104)



மிருசுவில் றோ.க.த.க.பாடசாலையின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீடும் அதிபர் க.சத்தியானந்தன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், சிறப்பு விருந்தினராக யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் ப.ஜெபரட்ணம் அடிகளார், கௌரவ விருந்தினர்களாக (fashion india chavakachcheri) திருமதி.சுகந்தி செந்தில்குகன், யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி திருமதி.சுரம்மியா அன்ரு, தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வடமாகாண பருவகால பழங்களும் மருத்துவப்பண்புகளும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

### களாப்பழம்

தாவரவியற் பெயர்:- Carissa carandas

இது குத்துக்காடுகளிலும் வேலியோரங்களிலும் பயிராகும் முற்செடி. இதில் கக்க அரும்புகள் முட்களாக திரிபடைந்திருக்கும். இதன் காய்கள் பழுத்தபின்பு கரு ஊதா நிறத்தை அடையும். களாப் பழங்களை சேகரித்து சாப்பிட்டுவர உடம்பு வலி நீங்கி உடலுக்கு வன்மையைக் கொடுக்கும். உணவுக்கால்வாய் தொகுதியை பலப்படுத்தி அதிமந்தத்தை நீக்கி பசியை உண்டாக்கும். இதில் இரும்புச் சத்து, கல்சியச்சத்து, பொஸ்பரஸ், மக்னீசியச்சத்துடன் உயிர்ச்சத்து ''C'' உம் காணப்படுவது குறிப்பிட வேண்டிய விடயமாகும். இதன் பழங்களை ஆடி, ஆவணி மாதங்களில் தாராளமாகப் பெறலாம்.


### அத்திப்பழம்

தாவரவியற் பெயர்:- Ficus racemosa

100 கிராம் அத்திப்பழத்திலுள்ள சத்துக்கள், புரதம் 1.3 கிராம், கொழுப்பு 0.2 கிராம், நார்ப்பொருள் 2.2 கிராம், கல்சியம் 80 மி.கிராம், பொஸ்பரஸ் 30 மி.கிராம், இரும்பு 1.0 மி.கிராம், விற்றமின் C 5 மி.கிராம், கரோட்டின் 162 மைக்.கிராம். வயிற்றுப்புண்ணிற்கு சிறந்த பழமாகும்.

### அத்திப்பழ சர்பத்

தேனில் பதப்படுத்தியுள்ள அத்திப் பழம் 70 கிராம், ரோஜா மொட்டு 140 கிராம். இவைகளை 400 மில்லி வெந்



நீரில் ஊறப்போட்டு 24 மணிநேரம் ஊறிய பின்பு அடுப்பிலேற்றி சிறுகக்காய்ச்சி நன்கு பிசைந்து வடிகட்டி அதனுடன் 1500 கிராம் சர்க்கரையைச் சேர்த்து தேன் பதமாக காய்ச்சி வைத்துக்கொள்ள வேண்டும். 2 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு 5 மில்லி-10 மில்லி கொடுக்க மலக்கட்டு நீங்கி மலமிளகும். வளர்ந்தவர்கள் 15 மில்லி-20 மில்லி வரை எடுக்கலாம்.

அத்திப்பழம் காய்ந்தது 10 கிராம் எடுத்து 300 மில்லி பாலைக் காய்ச்சி ஆற விட்டு அதில் அத்திப்பழத்தை போட்டு ஊற வைத்து 10 நிமிடங்கள் கழித்து உண்ண வேண்டும். உண்டு வர உடல் வரட்சி நீங்கி உடல் வலுவடையும். வாய் நாற்றமும் நீங்கும்.

### சீமை இலுப்பை/ சப்போட்டாப்பழம்


தாவரவியற் பெயர்:- Achras Sapota

பழங்கள் மிகவும் சுவையானவை. இரும்புச்சத்து கல்சியம், பொஸ்பரஸ், மக்னீசியம் சத்துக்கள் அதிகளவில் காணப்படும். இதன் கனிகள் பித்தம் ஏற்படாமல் தடுக்கின்றது. இதன் கனி பித்தநீர் குறைவாகச் சுரப்பதற்குரிய தடுப்புமருந்தாக ஆகின்றது. இதன் பழங்களை சாப்பிட்டுவர இரத்தம் விருத்தியாகும். என்புகளுக்கும் உறுதியைக் கொடுக்கும்.

### மாம்பழம்

தாவரவியற் பெயர்:- Mangifera indica

மாம்பழச்சாறு அருந்துவதால் தோல் நோய், முகப்பரு என்பன தடுக்கப்படும். மாம்பழச்சாறுடன் பசுவின் பாலும் தேனும்



கலந்து சாப்பிடின் உடற்சக்தி, ஞாபகசக்தி என்பவற்றை அதிகரிக்கும். புசியைச் சீராக வைத்திருக்கும். நல்ல சதைப்பிடிப்பான பழங்களை தோல் சீவிச்சாறு எடுத்து சீனி சேர்த்து மிக்ஸியில் அடித்து மதியநேரம் சாப்பிட்டு வர மலச்சிக்கல் நீங்கும்.

100 கிராம் மாம்பழத்திலுள்ள சத்துக்கள், புரதம் 0.6 கிராம், கொழுப்பு 0.4 கிராம், கல்சியம் 14 மி.கிராம், பொஸ்பரஸ் 16 மி.கிராம், இரும்பு 13 மி.கிராம், உயிர்ச் சத்து "C" 16 மி.கிராம், கரோட்டின் 2743 மை.கிராம், தயமின் 80 மை.கிராம், றைபோபிளேவின் 90 மை.கிராம். மாம்பழத்தை தேனில் ஊற வைத்துச் சாப்பிட்டுவர மேற் கூறிய மருத்துவக் குணங்கள் சிறப்பாகக் கிடைக்கும். மிகுதியாகவும் மாம்பழத்தை புசிக்கக்கூடாது. சொறி, சிரங்கு வரப்பார்க்கலாம்.

### வெள்ளரிப்பழம்

தாவரவியற் பெயர்:- Cucumid sativus

இதன் கனிகள் மிகவும் குளிர்ச்சியானவை. கோடைகாலத்தில் சாகுபடியாகும் பழங்களில் வெள்ளரியும் ஒன்றாகும். இதன் பிஞ்சு சுவையாக இருக்கும்.

கோடைகாலத்தில் வெயிலின் கொடுமை மிகுதியால் தாகம், களைப்பு போன்றன ஏற்படுகின்றது. இதற்கு நன்றாகப் பழுத்திருக்கும் வெள்ளரிப்பழத்தின் சதைப்பகுதியை விதையை நீக்கி நசுக்கி சாறெடுத்து அத்துடன் சீனி/மோர் கலந்து கொடுக்க தாகம் தணிந்து புத்துணர்ச்சியை ஏற்படுத்தும். வெள்ளரிப்பழத்தை தோல் மற்றும் விதையை நீக்கி சர்க்கரை கலந்து அப்படியே சாப்பிடலாம். இப்பழமானது நன்றாகப் பழுத்தவுடன் தானாகவே பிளந்து கொள்ளும். உடல் உஷ்ணத்தைத் தணிக்கும் ஒரு




சிறந்த பழமாகும்.

வெள்ளரிப்பழம் 100 கிராம் இல் உள்ள சத்துக்கள், புரதம் 0.4 கிராம், கொழுப்பு 0.1 கிராம், காபோவைதரேற்று 25 கிராம், கல்சியம் 10 மி.கிராம், பொஸ்பரஸ் 25 மி. கிராம், இரும்பு 1.5 மி.கிராம், தயமின் 0.03 மி.கிராம், நியாசின் 0.2 மி.கிராம், நார்ச்சத்து 0.4 கிராம்.

### அன்னாசிப்பழம்

கோடை காலத்தில் தாகத்தைத் தணிக்க நன்றாகப் பழுத்த அன்னாசிப்பழத்தை வாங்கி வந்து தோலைச் சீவி பழத்தை நறுக்கி வாயகன்ற கண்ணாடிச் சீசாவில் போட்டு பழம் உள்ள அளவில் சரிபாதி சீனியும் சேர்த்து மொத்தளவில் 3 பங்கு தண்ணீரையும் விட்டு சீசாவை ஒருமணி நேரம் வெயிலில் மட்டும் வைத்துவிட வேண்டும். பின்பு நன்கு கலக்கி நீரை மட்டும் வடிகட்டி தேவையானளவு சாப்பிட வாசனையாகவும் ருசியாகவும் இருக்கும். தாகத்தை தணிக்கும்.

தினமும் இரவு ஆகாரம் முடித்துப் படுக்கப்போக ஒரு மணி நேரத்துக்கு முன் காய்ச்சிய பசுப்பாலில் ஒரு டம்ளர் எடுத்து உலர் அன்னாசிப்பழ வற்றலில் நான்கு துண்டுகளை எடுத்துப் போட்டு மூடிவிட வேண்டும். படுக்க முன் பழத்துண்டுகளைச் சாப்பிட்டு அந்தப் பாலையும் குடித்துப் படுக்க வேண்டும். உடல் பலம் பெறும். உஷ்ணக்



கோளாறு தீரும்.

அன்னாசிப்பழம் 100 கிராம் இல் உள்ள சத்துக்கள், புரதம் 0.4 கிராம், கொழுப்பு 0.1 கிராம், காபோவைதரேற்று 10.8 கிராம், கல்சியம் 20 மி.கிராம், பொஸ்பரஸ் 9 மி.கிராம், இரும்பு 1.2 மி.கிராம், கரோட்டின் 18 மி.கிராம், தயமின் 200 மி.கிராம், நியாசின் 39 மி.கிராம், றைபோபிளேவின் 0.1 மி.கிராம், விற்றமின் "C" 0.5 மி.கிராம்.

### தக்காளிப்பழம்


தோலின் விதையை நீக்கி சிறு துண்டாக்கி சீனி சேர்த்து Mixi இல் அடித்து 200-250 மி.லீற்றர் அளவு தினமும் சாப்பிட்டு வர நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டி தோலை வழுவழுப்பாக்கும். ஆயுளைக் கூட்டும். கண் பார்வை தெளிவடையும். தக்காளிச் சாற்றுடன் தேன் சேர்த்து அருந்த இரத்தம் நன்கு சுத்தியாகும். குழந்தை முதல் பெரியோர் வரை பயன்படுத்தலாம்.

தக்காளிப்பழம் 100 கிராம் இல் உள்ள சத்துக்கள், புரதம் 1.5 கிராம், கொழுப்பு 0.2 கிராம், காபோவைதரேற்று 4.2 கிராம், கல்சியம் 12 மி.கிராம், பொஸ்பரஸ் 46 மி.கிராம், இரும்பு 1 மி.கிராம், தயமின் 11 மி.கிராம், நியாசின் 2.1 மி.கிராம், நார்ச்சத்து 6.7 கிராம்.

### எலுமிச்சம்பழம்

இதில் செம்புச்சத்து அதிகமாகக் காணப்படுகிறது. ஒரு பழச்சாற்றை ஒரு டம்ளர் தண்ணீரில் சீனி சேர்த்து கரைத்து சாப்பிடுவதால் பல்வியாதி சுகமாகும். அரிய சஞ்சீவி போல் தொழிற்படும். குறைந்த செலவில் வியாதிகளைக் குணப்படுத்தும் அரிய மருந்தாகும். எலுமிச்சம்பழத்தை பிழிந்து 1/2 தேக்கரண்டி சோற்றுப்பை போட்டு கலக்கி விடியற் காலையில் சாப்பிட வேண்டும். 3 நாட்கள் சாப்பிடின் மலச்சிக்கல் தீரும். உடலுக்கு தேய்த்துக் குளிக்க அரிப்பு, சொறி, சிரங்கு, கரப்பான் படை நீங்கும். எலுமிச்சம்பழத்தை வதக்கி ரசத்தை அருந்த வயிற்றுவலி தீரும்.

எலுமிச்சம்பழச்சாறு, தயிர், தென்னம் பூச்சாறு ஒவ்வொன்றையும் சமமாக காலை, மாலை குழந்தைகளுக்குத் தர நீர்ச்சுருக்கு குணமாகும். இதனைப் பொட்டில் இலேசாக தடவ தலைவலி குறையும். எலுமிச்சம்பழம் 100 கிராம் இல் உள்ள சத்துக்கள், புரதம் 1 கிராம், கொழுப்பு 0.9 கிராம், காபோவைதரேற்று 70 மி.கிராம், பொஸ்பரஸ் 10 மி.கிராம், இரும்பு 2.3 மி.கிராம், தயமின் 20 மி.கிராம், நியாசின் 0.1 மி.கிராம், விற்றமின் "C" 39 மி.கிராம், நார்ச்சத்து 1.7 கிராம்.



### கொய்யாப்பழம்

இப்பழத்தைச் சாப்பிட மலம் இளகும். விந்து விருத்தியடையும். இரத்த ஓட்டம் சீர்பட உதவும். பற்களுக்கு உறுதிதரும். உடலுக்கு குளிர்ச்சி ஏற்படும். உடல் உறுதி பெறும். இதனை அதிகமாக உண்டால் பசிமந்தம் உண்டாகலாம். வாந்தியும் சில சமயம் உண்டாகும். சுவையுணர்வு மட்டுப்படுத்தும். இதில் உயிர்ச்சத்து சி அதிகளவில் உண்டு. வளரும் சிறார்களின் உடல் வளர்ச்சிக்கு உதவும். மலச்சிக்கலால் கஷ்டப்படுபவர்கள் நன்றாகப் பழுத்த 2 கொய்யாப்பழங்களைச் சாப்பிட்டால் மலமிளகும். இது பசியை மட்டுப்படுத்தும். எனவே ஆகாரத்துக்கு முன் சாப்பிடக்கூடாது.

கொய்யாப்பழம் 100 கிராம் இல் உள்ள சத்துக்கள், புரதம் 1 கிராம், கொழுப்பு 0.9 கிராம், காபோவைதரேற்று 11.1 கிராம், கல்சியம் 70 மி.கிராம், பொஸ்பரஸ் 10 மி.கிராம், இரும்பு 2.3 மி.கிராம், தயமின் 20 மி.கிராம், நியாசின் 0.1 மி.கிராம், றைபோபிளேவின் 10 மி.கிராம், விற்றமின் ''C'' 39 மி.கிராம், நார்ச்சத்து 1.7 கிராம், ஈரலிப்பு 85 கிராம். (முற்றும்)

# சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளை அலரி மாளிகைக்கு அழைக்கும் அதிகாரம் பிரதமருக்கு இல்லை- பீரிஸ் எதிர்ப்பு

(கொழும்பு)

சட்டமா அதிபர் திணைக் களத்தின் அதிகாரிகளை அலரி மாளிகைக்கு அழைக்கும் அதி காரம் பிரதமர் ரணில் விக்கி ரமசிங்கவிற்கு இல்லை எனவும் சட்டமா அதிபர் திணைக்கள த்தை தொடர்புபடுத்தி தற்போது எழுந்துள்ள குற்றச் சாட்டுக்க ளுக்கு இலங்கை சட்டத் தரணி கள் சங்கத் தலைவர் இது வரை யில் மறுப்புத் தெரிவிக்காதது ஏன் எனவும் பொதுஜன பெரமுன வின் தவிசாளர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கேள்வியெழுப்பி னார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி யெழுப்பினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தைப் பாரிய நெருக்கடிக்குள்ளாக்கியே ஜனா திபதி வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவு செய் யப்பட்டார்.

வேட்பாளராகத் தன்னைப் பெயர் குறிப்பிடுமாறு அமைச்சர் சஜித் பிரேமதாஸ முன்னெடுத்த செயற்பாடுகள் முறையற்றதாகும்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்த பாய ராஜபக்ஷவை அரசியல் ரீதியில் எதிர்க்க முடியாதவர்கள் இன்று முறையற்ற விதத்தில் அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கின் றனர்.

அரசியல் அழுத்தங்களின் பிரகாரமே சட்டமா அதிபர் திணைக்களம் செயற்படுகின்றது என்பது தற்போது ஆதாரபூர்வ



மாக வெளிப்பட்டுள்ளது.

அரசியல் அழுத்தத்தின் கார ணமாகவே முன்னாள் பாது காப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக முன் னாள் சொலிசிற்றர் ஜெனரால் தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க குறிப்பிட்டதை தொடர்ந்து அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவர் முன்வைத்த குற்றச் சாட்டுக்கள் முழுமையாக இன்று மறைக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் மீட்பு

(மகியங்கனை)

பதுளை - மகியங்கனை வீதியின் தல்தெனவிலுள்ள பால த்திற்கு அருகிலிருந்து ரி- 56 ரக துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்த ப்படும் ரவைகள் மீட்கப்பட்டன.

பொதுமக்களின் தகவலுக் கமைய அப்பகுதியை சோதனை யிட்ட பொலிஸார் பொதியிடப்ப ட்ட நிலையில் ரி-56 ரக துப் பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 737 ரவைகளை மீட்டனர்.

இந்நிலையில் மீட்கப்பட்ட துப்பாக்கி ரவைகளை யார் அப்பகுதியில் வைத்திருப்பார் கள் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்த னர். (இ-7)

# விருது வழங்கிக் கௌரவிப்பு




(கரணவாய்)

அர்ப்பணிப்பு மிக்க பொது மக்கள் சேவையைப் பாராட்டி பருத்தித்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ. ஜென்சன் றொனா ல்ட் மாவட்ட ரீதியாக கௌர விக்கப்பட்டார்.

வருடந்தோறும் பொதுச் சுகா தாரப் பரிசோதகர் சங்க 84ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை கடவத்தையிலு ள்ள ரோஸ் கார்டின் விடுதியில் இடம்பெற்றது.

இதில் யாழ்ப்பாண பொது சுகாதாரப் பரிசோதகர் சங்கத் தின் சிபார்சின் அடிப்படையில் இவ்விருது வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக கலந்து கொண்ட சுகா தார அமைச்சர் வைத்திய கலா நிதி ராஜித சேனாரத்ன விருதை வழங்கிக் கௌரவித்தார்.(இ-60)

# அகதிகளின் மீள்குடியேற்றம் குறித்து கொழும்பில் விசேட கலந்துரையாடல்



ஐக்கிய இராச்சியத்தின் உள் நாட்டு அலுவலகத்தின் குழுத் தலைவர் செல்வி.லிசா கோபல்ட் நேற்று முன்தினம் தேசிய கொள் கைகள், பொருளாதார அலு வல்கள், மீள் குடியேற்றம், புனர் வாழ்வளிப்பு, வட மாகாண அபி விருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சிற்கு விஜயம் செய்து அமைச்சின் செயலாளர் வே. சிவஞான சோதியுடன் உள் ளக இடம்பெயர்ந் தோர் மற்றும் தாய கம் திரும்பும் அக திகளின் மீள் குடி யேற்றம், புனர் வாழ்வளிக்கப்பட்ட சமூகமய ப்படுத்தப்பட்ட முன்னாள் போரா ளிகள் மற்றும் வீடமைப்பு திட்ட ங்கள், வாழ்வாதார உதவிக் கருத்திட்டம் மற்றும் கண்ணி வெடியகற்றல் செயற்றிட்டம் உள்ளடங்கலாக அமைச்சால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடினார். (இ-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1846

Search for people, places and things

### மாதவி

மகளைப் பெற்ற அப்பாவுக்கு மட்டுமே தெரியும் தன்னைப் பெற்ற அன்னையின் மறுபிறவிதான் மகள் என்று



### சுகுமார்

பிற உயிரின் துயரம் அறிந்தவனே உழைப்பாளி



### வினோத்

மழை வந்தா மட்டும் இல்லை. புயலே அடிச்சாலும் நமக்கு சோறுதான் முக்கியம்



### ஹரி

ஆட்டுக்கறி அதிகமா சாப்பிட்டா கொழுப்பு கூடிப் போயிடும்னு சொல்றாங்க... வெறும் புல்லும் இலை தழை மட்டுமே சாப்பிடுற ஆட்டுக்கு அவ்வளவு கொழுப்பு எங்கிருந்து வந்திருக்கும்



### ராமு

மலையைப் பார்த்து மலைத்துவிடாதே... மலை மீது ஏறினால் அதுவும் உன் காலடியில்



### சந்திரன்

வெற்றி எனும் மரம் வளர வியர்வை எனும் நீர் ஊற்றித்தான் ஆக வேண்டும்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பிரேமதாஸவுடன் நிறைவுக்கு வந்த ஜனாதிபதி தலைமைத்துவத்தை சஜித் மூலம் கைப்பற்றுவோம்

## ரணில் திட்டவட்டம்

(கொழும்பு)

**ரணசிங்க பிரேமதாஸவுடன் முடிவுக்கு வந்த எமது கட்சியின் ஜனாதிபதி தலைமைத்துவத்தை சஜித் பிரேமதாஸவிடம் இருந்து மீண்டும் உருவாக்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் கைகோர்த்து செயற்பட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேலைத் திட்டம் குறித்து கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது ஆட்சியில் நாம் முன்னெடுத்த வேலைத்திட்டங்களைத் தக்கவைக்க மீண்டும் எமது அரசாங்கத்தை உருவாக்க வேண்டும் என்றும் அவர் இதன் போது தெரிவித்தார். (இ-7)

## நாட்டில் மீண்டும் பயங்கரவாத அச்சம்

# எந்தச் சவால்களும் இல்லாமல் பொருளாதாரம் வீழ்த்தப்பட்டது

## விமல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் எந்தவொரு சவால்களுக்கும் முகம் கொடுக்காமலேயே பொருளாதாரத்தை வீழ்ச்சிப் பாதையின் கீழ் கொண்டு சென்றுள்ளதென மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தினார்.

பொதுஜன பெரமுன கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். "முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டது.

ஆனால் தற்போதைய அரசாங்கம், நாட்டில் பயங்கரவாதம் குறித்த அச்சத்தை உருவாக்கியுள்ளது.

மேலும் முன்னைய அரசாங்கம், யுத்தம் உள்ளிட்ட பல வேறு சவால்களுக்கு முகம்கொடுத்த போதிலும், நாட்டின் பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதையை நோக்கியே கொண்டு சென்றது. ஆனால், தற்போதைய அரசாங்கம் எந்தவொரு சவாலுக்கும் முகம்கொடுக்கவில்லை.

அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்து, மக்களையும் துன்பமடையச் செய்துள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டிய

## மருத்துவ குறிப்புக்கள்

### நெருங்கிய உறவுமுறைத் திருமணம் குழந்தையின் 'கேட்கும்' திறனைப் பாதிக்குமா?



சொந்த-பந்தம் விட்டுப்போக்க கூடாது என்று நினைத்து பலர் தங்களுடைய உறவினர்களுக்குள்ளேயே திருமணம் செய்து கொள்கிறார்கள். அவ்வாறு நெருங்கிய உறவினர்களுக்குள் திருமணம் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு உடற் கோளாறுகள் மட்டுமன்றி செவித்திறனும் பாதிக்கப்படக்கூடும் என்று டாக்டர்கள் எச்சரிக்கின்றனர். அதாவது இருபுறத்திலும் (கணவன்-மனைவி) உள்ள குடும்பக் கிளைகளில் ஏதாவது பாதிப்பு இருந்து உறுதியற்ற நிலை இருந்தால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு உடற் கோளாறுகள், மனவளர்ச்சிக் குறைவு, செவித்திறன் பாதிப்பு போன்ற குறைபாடுகள் எளிதில் ஏற்பட்டு விட வாய்ப்பு உள்ளது என்கின்றனர்.

# செய்தித்துளிகள்

## பலாலியில் ஆளுநர் ஆய்வு



(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்றுக் காலை நேரில் சென்று ஆராய்ந்தார். (இ-5)

## நாடகமும் அரங்கியலும் இருநாள் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இருநாள் பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் (சனி,ஞாயிறு) திகதிகளில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிநெறியில் பங்குபற்றவிரும்பும் மாணவர்கள் நாளை மறுதினம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் தமது பெயர், விபரங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. (இ-5)

## யானை தாக்கி ஒருவர் பலி!

(கொழும்பு)

அரலகங்வில பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்தார். அரலகங்வில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீரலந்த, நூஹூகம பகுதியில் நேற்று முன்தினம் நபரொருவர் காட்டு யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்ததாகப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இச்சம்பவத்தில் 47 வயதுடைய நபரொருவரே உயிரிழந்ததாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (இ-7)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 120 | 110 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 150 | 150 | 250 |
| தக்காளி | 140 | 140 | 120 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 90 | 120 | 80 | 100 |
| கோவா | 120 | 120 | 120 | 80 | 120 |
| கரட் | 100 | 100 | 120 | 80 | 120 |
| பூசணி | 80 | 60 | 180 | 70 | 80 |
| புடோல் | 200 | 140 | 80 | 70 | 160 |
| வாழைக்காய் | 120 | 100 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 130 | 160 | 100 | 20C |
| பெரிய வெங்காயம் | 150 | 220 | 200 | 155 | 280 |
| பாகற்காய் | 300 | 260 | 250 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 180 | 70 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 60 | 160 |
| பயற்றங்காய் | 200 | 180 | 180 | 150 | 160 |
| லீக்ஸ் | 140 | 100 | 80 | 70 | 100 |
| பீற்றூட் | 100 | 80 | 80 | 60 | 120 |
| கறிமிளகாய் | 160 | 160 | 180 | 130 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 80 | 100 | 200 |
| போஞ்சி | 250 | 200 | 180 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 100 | 80 | 100 |
| கீரை-1பிடி | 50 | 60 | 50 | 50 | 60 |
| தேசிக்காய் | 250 | 350 | 300 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 35 | 30 | 35 | 20-40 |
| இராசவள்ளி | — | — | — | 160 | — |
| வெங்காயப்பூ | 250 | 200 | — | — | 240 |
| முள்ளங்கி | 80 | 60 | 80 | 40 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 35 | 50 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 30 | 20 |
| ஈரப்பலா | 50 | 100 | — | 140 | 60 |




# வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2019

## குறும்பு



ஓர் ஆற்றங்கரை ஓரத்திலே சிறியதொரு கற்குகை இருந்தது. அந்தக்குகையிலே கண்ணு, கண்மணி, குறும்பு என்ற மூன்று முயல் குட்டிகள் தமது தாயோடு வசித்து வந்தன. ஒவ்வொரு நாளும் சூரிய வெளிச்சத்தில் குளிர்காய அவை மூன்றும் மணற்பரப்பிற்கு வருவது வழக்கம். இம் மூன்று குட்டிகளுள் குறும்பு தாயின் சொற்படி நடப்பதே இல்லை.

ஒவ்வொருநாளும்தாய்முயல் குட்டிகளைப் பார்த்து, "நீங்கள் வளர்ந்து இன்னும் உடற்பலம் பெறவில்லை. ஆதலால் எப்பொழுதும் என்னுடனேயே இருக்க வேண்டும்" என்று புத்திமதி கூறியது.

தாய் இவ்வாறு அடிக்கடி கூறுவதை முயற்குட்டி குறும்பு விரும்பவில்லை. எப்பொழுதும் குகை அருகிலேயே இருப்பதும் அதற்குப் பிடிக்கவில்லை. ஒவ்வொரு நாளும் ஒரே இடத்தில் விளையாடுவதனால் குறும்புக்குக் குதூகலம் இல்லாது போயிற்று.

ஒரு நாள் அதற்கு ஒரு யோசனை ஏற்பட்டது. "எனது கால்கள் இப்பொழுது பலமடைந்து விட்டன. தனியே அங்கும் இங்கும் போய்வர முடியும்" என்று நினைத்தது.

குறும்பு காதுகளை உயர்த்திக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தது. அப்பொழுதே பாய்ந்து ஓடிவிட வேண்டும் என்ற ஆசை அதற்கு ஏற்பட்டது. தாய் நிம்மதியாக நித்திரை செய்து கொண்டிருந்த நேரம் தப்பியோடத் தகுந்த வேளை என்று நினைத்தது. முயற்குட்டி குறும்பு ஒரே பாய்ச்சலாய் ஓடத் தொடங்கியது. பெரியதொரு தோட்டத்தின் வாசலை அடைந்ததும் ஓடுவதை நிறுத்தித் தோட்டத்தைப் பார்த்தது. "ஆ! எவ்வளவு அழகான தோட்டம்! இதன் வனப்பு முழுவதையும் நான் ஆறுதலாகப் பார்த்து இரசிக்க வேண்டும்" என்று அது எண்ணியது.

அத்தோட்டத்தினுள் இருந்த இரண்டு சீமை முயல்கள் வாசலின் அருகே அங்கும் இங்கும் பார்த்தவண்ணம் இருந்த முயற்குட்டி குறும்பைக் கண்டன. குறும்பைப் பார்த்து, "நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டன. குறும்புக்கு ஒரே மகிழ்ச்சி. அவற்றின் கேள்விகளுக்குப் பதில் அளிக்காமல் அது துள்ளி விளையாடத் தொடங்கியது.

சிறிது நேரத்தின்பின் அது நிமிர்ந்து நின்று "என்னை நன்றாகப் பாருங்கள். எனது உடல் மாநிறம் கொண்டது. ஆனால் நானும் ஒரு முயற் குட்டிதான்" என்றது. "என்னால் துள்ளிக் குதிக்க முடியும்" என்று சொன்னபடியே குறும்பு தாவிக் காட்டியது. என்னால் கரணம் அடிக்க முடியும்" என்று கூறியவாறு கரணம் அடித்துக் காட்டியது. "எனக்கு வேகமாய் ஓடவும் முடியும்" என்று சொல்லியவாறு முயற்குட்டி குறும்பு வட்டமிட்டு ஓடிக் காட்டியது. "எனக்கு உங்களோடு விளையாடவும் முடியும்" என்று சொன்னபடியே குறும்பு வாசற்படலை மீது இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டு சீமை முயல்களைப் பார்த்தது.

சீமை முயல்கள் குறும்பைத் தோட்டத்தினுள் அழைத்துக் கொண்டன. குறும்புக்கு மிகுந்த மகிழ்ச்சி. நாள் முழுவதும் விளையாடலாம் என்று அது ஆசைப் பட்டது.

அவை விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது குறும்பு என்றுமே கண்டிராத மிருகம் ஒன்று அத்தோட்டத்தின் வாசல் வழியாக ஓடி வந்தது. அதுதான் அந்தத் தோட்டத்தைக் காவல் புரியும் "வீரன்" என்ற நாய். அதன் உடல் பருத்து இருந்தது.

அது மிகவும் கூரிய பற்களைக் கொண்டிருந்தது. கால்களில் கூரிய நகங்கள் காணப்பட்டன. அந்த நாய் பலமாகக் குரைத்துக் கொண்டு முயற்களைத் துரத்தியது.

வெள்ளை நிறங்கொண்ட சீமை முயல்கள் ஓடிச்சென்று தமது கூட்டினுக்குள் நுழைந்து பதுங்கின. பாவம்! முயற்குட்டி குறும்புக்குப் பதுங்குவதற்கு இடமே இருக்கவில்லை. அதன் வீடு மணற்பரப்பில்தானே இருந்தது. எனவே குறும்பு தலைதெறிக்க ஓடத்தொடங்கியது. புதர்களுக்கு மேலே தாவித்தாவி ஓடியது. செடிகளுக்குக் கீழே புகுந்து புகுந்து ஓடியது. ஆனால் அதற்குத் தன் வீட்டைத் தேடிப் பிடிக்க முடியவில்லை. குறும்புக்கு மிகுந்த களைப்பு ஏற்பட்டது. தன்னைத் துரத்தி வந்த "வீரன்" போன இடம் தெரியவில்லை. ஆனால் தாயையும் வீட்டையும் காணாது பரிதவித்தது.

இருள் எங்கும் பரவத் தொடங்கிய நேரம். அவ்வேளைகளில் குறும்புக்குத் தாயின் அரவணைப்பு வேண்டும். ஆனால் அது தாயை எங்கே தேடுவது? ஆகாயத்தில் நட்சத்திரங்கள் அதனைப் பரிதாபமாகப் பார்த்துச் சிரித்தன. ஆனால் அதற்கு உதவி செய்ய அவற்றால் முடியவில்லை. தனக்கு நல்ல உடற்பலம் இன்னும் ஏற்படவில்லை என்ற உண்மையைக் குறும்பு புரிந்து கொண்டது. அது தனிமையில் பயத்தினால் நடுங்கியது. சற்று நேரத்தின் பின்னர் தூரத்தில் புற்தரை அசைவதைக் குறும்பு கண்டது. "வீரன்" தன்னைத் துரத்தி வருகிறதோ என எண்ணியது. பயத்தால் அங்குமிங்கும் பார்த்தது. தான் இருந்த இடத்திற்கு அருகே கேட்கும் சத்தத்தை உற்றுக் கேட்டது. அது குறும்புக்கே பரீட்சயமான காலடிச் சத்தம். குறும்பு பின்னால் திரும்பிப் பார்த்தபோது தாய் தன்னைத் தேடி வருவதைக் கண்டது.

"என் குறும்பு நீயல்லவா? நாள் முழுவதும் உன்னைத் தேடி எங்கும் அலைந்தேன். இப்பொழுதுதான் பெரிய மன ஆறுதலாக இருக்கிறது. வா வீட்டுக்குப் போவோம். தனியே ஓடித்திரிய உனக்கு வளர்ச்சி போதாது கண்ணே!" என்றது தாய் முயல்.

அப்பொழுது குறும்புக்கு பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. "இனி நான் ஒருநாளும் ஓடிப்போக மாட்டேன் அம்மா. எப்பொழுதும் உங்கள் அருகில்தான் இருப்பேன்" என்று சின்னக் குறும்பு முயல் பயமும் மகிழ்ச்சியும் கலந்த குரலில் சொன்னது. "இனிப் பயப்பட வேண்டியதில்லை, என் கண்மணியே" என்ற தாய்முயல் சின்ன முயற் கட்டியை அணைத்துக்கொண்டது.

# My Country

My Country is Srilanka. It is a small Island in the Indian ocean. This is an agricultural country. Most of the people are farmers.

Sri Jayawardenapura kotte is the capital of Sri lanka. The population of my country is about twenty millions. There are several communities in Sri lanka. They are the Sinhalese,The Tamils, The Muslims and the Burghers.

Piduruthalagala is the highest mountain and Mahaweli is the longest river in Sri lanka. We gained independence in 1948. My country is a republic today. Mr.Maithripala Sirisena is the present president of Sri lanka.

There are many tourist attractions in my country. Water falls sandy beaches and botanical gardens are some of them. I love my country very much.

T.Atputha, Puttur.

# வாசிப்பால் உயர்வோம்

எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து வணங்கி "வாசிப்பின் பயன்கள்" எனும் தலைப்பில் சிறியோன் என் அறிவிற்கு எட்டியவரை எனது கட்டுரையை வரைகிறேன்.

வாசிப்பு எம்மில் பலரும் பின்பற்றி வரும் அறிவியல் ஆசான். "என்னை என்றும் எச்சமயத்திலும் கைவிடாத என் நண்பர்கள் நல்ல நூல்களே" ஆகும். இளமைப்பருவம் இனியது. இப்பருவத்தை மேலும் இனிதாக்கிக்கொள்ள வாசிப்பு மிகவும் இன்றி அமையாத ஒன்று. நூல்கள் பலதரப்பட்டவை. வரலாறு, சமயம், தத்துவம், விஞ்ஞானம், இசை, புனைக்கதை, விளையாட்டு எனப் பல்வேறு வகைப்பட்ட நூல்கள் இருக்கின்றன. இவற்றை எதிர்கால முன்னேற்றத்திற்கு வாழ்க்கைக்கு பயன்தரும் நூல்களை அறிந்து கற்றல் வேண்டும்.

"நூலகம் என்பது தேன்கூடு. அதனுள் இருக்கும் தேன்துளிகள் புத்தகங்களே" என்றார் ஓர் அறிஞர். நூலகத்தில் எண்ணில் அடங்காத நூல்கள் வாசிக்க எவருமின்றி காத்துக்கிடக்கின்றன.

வாசிப்பு மனிதனை பூரணமடையச்செய்கிறது. வாசிப்பதன் மூலம் எமக்கு எண்ணிலடங்காத தகவல்கள் கிடைக்கின்றன. வாசிப்பை ஒரு பொழுதுபோக்காகக் கொண்டால் கூட நாம் பல நூல்களை வாசித்துவிடுவோம். நூல்கள் மூலம் அறிவைப் பெறுக்கொள்ள வேண்டுமாயின் அதை நன்கு வாசிக்க வேண்டும். வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொண்டால் மட்டுமே அது சாத்தியமாகும். வாசிப்பதால் பாடங்களில் சிறந்த பெறுபேற்றைப் பெற முடியும். வாழ்க்கை பூராகவும் நாம் மகிழ்ச்சியாக இருக்கக் கூடிய வழியைக் கண்டுகொள்ளலாம்.

நாம் நூல்களை எம் தலை சிறந்த நண்பனாக கொள்வோமானால் வாசிப்பால் கிடைக்கும் அனைத்து பயன்களையும் பெறமுடியும். வாசிப்போம் அதனால் கிடைக்கும் பயன்களைப் பெற்று மகிழ்வாய் வாழ்வோம்.

நிசாந்தன்.ஜென்சிகா,
தரம் 8 K, யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி.

தொகுப்பு:- திருமதி.உ.காஞ்சனமாலா, நூலகர், பொது நூலகம், வலி.கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.

தன் கையே தனக்கு
உதவி என்பவர்களுக்குத்தான்
கடவுளும் உதவுகிறார். – ஃப்ராங்க்லின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழர்களின் வாக்குப் பலத்தை பேரம் பேசும் சக்தியாக மாற்றுங்கள்

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேர்தல் களம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

அதிலும் குறிப்பாக தென்பகுதி அரசியல் பரப்பில் ஜனாதிபதித் தேர்தல் சூடு பற்றி விட்டது. இனி எங்கும் தகதகிப்பாக இருக்கும்.

இவை ஒருபுறமிருக்க, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதாக இருந்தால் தமிழ் மக்களின் வாக்குகள் தேவை என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

எனவே தமிழ் மக்கள் தங்கள் வாக்குப் பலத்தை முதன்மைப்படுத்தி தங்களுக்கான தீர்வைப் பெறுகின்ற நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

எனினும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தரப்புகள் இன்னமும் ஒரு நிறுதிட்டமான முடிவுக்கு வரவில்லை.

மாறாக ஜனாதிபதி வேட்பாளர்களுடனும் அவர்கள் சார்ந்த கட்சியினருடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறது.

இந்தப் பேச்சுவார்த்தையின் நோக்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படும் என எழுத்து மூலமான உத்தரவாதங்களைப் பெறுவதாக இருக்கலாம்.

எனினும் எழுத்துமூலமான உத்தரவாதங்களை ஜனாதிபதி வேட்பாளர்கள் எவரும் தரப்போவதில்லை என்பதுதான் உண்மை.

இந்த உண்மை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தெரியாததல்ல. இருந்தும் தாங்கள் முயற்சி எடுத்ததான ஒரு காட்டாப்பைக் காட்ட வேண்டிய தேவை அவர்களுக்கு உள்ளது.

உண்மையில் எழுத்துமூலமான உத்தரவாதத்தைப் பெறுவதாக இருந்தால்,

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தைக் காப்பாற்றுகின்றபோது அந்த எழுத்துமூல உத்தரவாதத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

அவ்வாறு எழுத்துமூலமான உத்தரவாதத்தைப் பெறுகின்ற சந்தர்ப்பங்கள் பல தடவைகள் ஏற்பட்டனவாயினும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, சட்டவிரோத சிங்களக் குடியேற்றத்தை நிறுத்தல் என்பன தொடர்பில் கூட எழுத்துமூல உத்தரவாதத்தைப் பெற்றுக் கொள்ளத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்படவில்லை.

உண்மையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்குத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்கின்றபோது எழுத்துமூலமான உத்தரவாதத்தைப் பெறுவது சாத்தியமானதாக இருந்திருக்கும்.

உங்களுக்கு எழுத்துமூலமான உத்தரவாதம் தந்தால் அது சிங்கள மக்களின் வாக்குகளைக் குறைக்கும் என்ற பேச்சுக்கே இடமில்லை.

அதாவது பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே வாக்களித்தல் என்ற சந்தர்ப்பத்தில் எந்தக் காரணத்தையும் முன்வைக்க முடியாமல் எழுத்துமூலமான உறுதிமொழியைப் பெற்றிருக்க முடியும்.

இதைவிடுத்து இப்போது ஜனாதிபதித் தேர்தலில் எழுத்துமூலமான உறுதிமொழியைக் கேட்டால் அதற்கு அவர்கள் கூறக்கூடிய பதில் உங்களுக்கு எழுத்துமூலமான உத்தரவாதத்தைத் தந்தால் அதனூடு தென்பகுதியில் எமக்கான எதிர்ப்பிரசாரம் பூதாகரமாகும்.

எனவே எழுத்துமூல உத்தரவாதம் தரமுடியாதென்பதாக பதில் இருக்கும்.

இத்தகையதோர் சூழ்நிலையில் அவர்கள் கூறுவது சரியென்றிராமல் தமிழ் மக்களின் வாக்குப் பலத்தைக் கொண்டு பேரம் பேச வேண்டும்.

இதற்கான நுட்பங்கள் பற்றி ஆராய்வது தான் இன்றைய அவசர தேவையாகும்.

### மகிந்த அணிக்கு 5 ஆம் திகதி வரை காலக்கெடு

## பொதுச்சின்னத்தில் போட்டியிடும் நோக்கில் பேச்சுவார்த்தை நடத்துவோம்- தயாசிறி

(கொழும்பு)

பொதுச் சின்னத்தில் பரந்த கூட்டணியை அமைக்கும் நோக்கத்தில் பேச்சுவார்த்தைகளை நடத்துவோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து பயணிப்பதா, இல்லையா என்பது குறித்து சிந்தித்து பதிலளிக்க எதிர்வரும் 5 ஆம் திகதி வரையில் பொதுஜன பெரமுனவுக்கு காலக்கெடு வழங்குவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர எம்.பி. தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்து பயணித்தால் பாதிப்பு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கே என்பதை மறந்துவிட வேண்டாம் எனவும் தயாசிறி எச்சரித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கூட்டம் குறித்தே அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. இந்நிலையில் நேற்று முன்தினம் மத்தியகுழு கூடிய வேளையில் எம்மால் இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்க முடியவில்லை.

காரணம் என்னவெனில் நாம் இப்போதும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து பயணிக்கும் நிலைப்பாட்டில் உள்ளோம்.

ஆனால் வெறுமனே ஒரு கட்சியாக அல்ல, பொதுவான சின்னம், பொது வான கொள்கையின் அடிப்படையில் நாம் செல்லவே நினைக்கின்றோம்.

எனவே எதிர்வரும் 5 ஆம் திகதி வரையில் இறுதித் தீர்மானம் எடுக்க காலக்கெடு உள்ளது என தயாசிறி மேலும் தெரிவித்தார். (இ-7)

### ஹபரண காட்டுப் பகுதியில்

## துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் யானையின் உடல் கண்டுபிடிப்பு

### உயிரிழப்பு 8 ஆக அதிகரிப்பு

(ஹபரண)

ஹபரண காட்டுப் பகுதியில் மேலுமொரு யானை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

யானையின் தலையிலும் உடம்பிலும் பல துப்பாக்கிச்சூட்டுக்காயங்கள் காணப்பட்டதாக வனஜீவராசிகள் திணைக்கள பொலநறுவை பிராந்திய அத்தியட்சகர் டபிள்யூ.டி.ஜே. விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடந்த மாதம், 28,29, 30 ஆகிய திகதிகளில் ஏழு யானைகள் ஹபரண காட்டுப்பகுதிக்குட்பட்ட ஹிரிவட்டுண,தும்பிக்குளம் ஆகிய பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

இந்த இறந்த யானைகளின் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கையை வனஜீவராசிகள் திணைக்களம் எதிர்பார்த்துள்ளது.

இதேவேளை,கடந்த மூன்றாண்டுகளில் 176 யானைகள் கொல்லப்பட்டுள்ளதுடன், 68 பொதுமக்களும் யானைத்தாக்குதலால் உயிரிழந்தனர்.

2016 ஆம் ஆண்டில் 76 யானைகள்,21பொதுமக்கள், 2017ஆம் ஆண்டு 44 யானைகள்,16பொது மக்கள்,2018 ஆம் ஆண்டு 76 யானைகளும் 26 பொது மக்களும் உயிரிழந்திருப்பதாக விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## நவராத்திரி பாமாலை

செல்வத்திற்கு இன்று முதலாம் நாள்



### வரம் ஒன்று தாருமம்மா

செல்வங்கள் பல தரும் தேவி நீயே–பார்
செழித்திட வரம் ஒன்று தாரும் அம்மா...
பொன்னான வாழ்வு தரும் தாயும் நீயே–உம்
பொற்கரம் நீட்டி துயர் தீருமம்மா...
செங்கமலம் மீதிருக்கும் வாணி தாயே–நாம்
செழிப்புடனே வாழ்ந்திடவே வரமருள்வாய்...
நின்பதம் பணிந்து நானும் வேண்டுகின்றேன்–என்
துன்பங்கள் அத்தனையும் போக்கிடம்மா...

வேந்தன் சுபாணன்
யாழ். அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5. மணிவரை யாழ் பிரதேசத்தில் சுன்னாகம் மின் நிலைய பிரதேசம், உரும்பிராய், விளாத்தியடி மருதனார்மடம், அங்கிலிப்பாய், குமரகோட்டம், கோண்டாவில் இ.போ.ச பிரதேசம் ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் பெரிய பண்டிவிரிச்சான், சின்னப் பண்டிவிரிச்சான், மடு பிரதேசம் ஒரு பகுதி, மடு நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

## இரு குழுக்களுக்கிடையே மோதல் ஒருவர் காயம்; ஒருவர் கைது

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு மயில்வாகனபுரம் பகுதியில் இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதலில் ஒருவர் காயமடைந்துள்ளதுடன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இக்குழு மோதலின் போது காயமடைந்தவரை ஏற்றிச்சென்ற காரையும் மோதலில் ஈடுபட்டவர்கள் தாக்கியுள்ளனர். குறித்த விடயம் தொடர்பாக தருமபுரம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்தபோது மோதலில் ஈடுபட்டவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். அதில் இரு மோட்டார் சைக்கிள்களை விட்டுச் சென்றுள்ளனர்.

அதனடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (9-316)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

பிறர் குற்றத்தை ஒருபோதும் கவனிக்காதீர்கள். பிறர் நிறைவையும் தனது குறையையும் கருதுபவனே மேன்மையுறுகிறான் -வள்ளலார்

## ஆன்மீகச் சிந்தனைகள்

### மனமிருப்பவன் என்ன செய்வான்?

✦ ஞானத்தைக் கொடுப்பவர் குருவைத் தவிர வேறு யாருமில்லை. நம் வாழ்க்கையில் சிறந்த ஒரு ஆசிரியர் கிடைத்துவிட்டால் நிச்சயம் பிறவிக்கடலைத் தாண்டி விடலாம்.

✦ நாம் பிறவாத இடமோ, பேசாத மொழியோ, தோன்றாத குலமோ கிடையாது. எனவே எல்லா நாடும் நமது நாடே, எல்லா மக்களும் நமது சகோதரர் என்று கருதி சாந்தமாகவும், அன்பாகவும் வாழ வேண்டும்.

✦ கிரகம் என்றால் வீடு அல்லது இருப்பிடம். "வி" என்றால் மேன்மை. மேன்மையான இருப்பிடம் விக்கிரகம். இறைவனது திருவருள் சிறப்பாக விளங்கி தோன்றும் உயர்ந்த இடம் விக்ரகம்.

✦ விலங்குகளிலிருந்து மனிதன் உயர்ந்து காட்சி அளிப்பது தெய்வ உணர்ச்சி ஒன்றினால் தான். "மனித வாழ்க்கைக்கு கடவுள் வணக்கம் தேவையா? நாங்கள் கடவுளை வணங்காமல் வாழவில்லையா?" என்று சிலர் கேட்கிறார்கள். மானம் உள்ளவன் ஆடை உடுப்பான், மனம் உள்ளவன் இறைவனை வணங்குவான்.

# இலங்கை போக்குவரத்து சபை அணியை வீழ்த்தி சம்பியனாகியது யாழ். போதனா வைத்தியசாலை அணி






யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் ஊழியர் நலன் புரிச்சங்கம் மற்றும் விளையாட்டுக் கழகம் இணைந்து நடத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வடக்கு மாகாண சுகாதார திணைக்களங்கள் மற்றும் யாழ். மாவட்ட அரச நிறுவனங்களை சேர்ந்த 29 அணிகள் பங்குபற்றியிருந்தன. இப் போட்டிகள் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகி வார இறுதி நாட்களில் நடைபெற்று வந்தன. அதன் இறுதிப் போட்டி கடந்த 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இறுதிப் போட்டியில் யாழ். போதனா வைத்தியசாலை அணி மற்றும் இலங்கை போக்குவரத்து சபை அணிகள் மோதின. அதில் யாழ். போதனா வைத்தியசாலை அணி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.

முதலில் துடுப்பெடுத் தாடிய யாழ். போதனா வைத்தியசாலை அணி 10 ஓவர்கள் நிறைவில் 74 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டது.

75 என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை போக்குவரத்து சபை அணி 71 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 4 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

போட்டியின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெற்றியாளர்களுக்கு கேடயங்கள் வழங்கிக் கௌரவித்தார். (க)

அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# காலிறுதிக்கு தகுதி பெற்றது புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் அணி



சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக் கழகம் மாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் புதுக் குடியிருப்பு சுப்பர்றாங் அணியை எதிர்த்து வலைப்பாடு சென். ஆன்ஸ் அணி மோதி யது.

ஆட்ட நேர முடிவில் சுப்பர்றாங் அணி 02: 00 கோல் அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

சுப்பர்றாங் அணி சார்பாக டப்பி , ஜெகன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர். (க)

# அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது வல்வெட்டித்துறை ஆதிசக்தி



பருத்தித்துறை லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை, வடமராட்சி லீக்கின் அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்று போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல் கணக்கில் ஆதிசக்தி அணி வெற்றி பெற்றது. (க)

# உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி வெற்றி



பருத்தித்துறை லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை, வடமராட்சி லீக்கின் அங்கத்துவ கழகங்களுக்கிடையில் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் பருத்தித்துறை ஐக்கியம் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 03:01 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்றது. (க)

# யுனிபைட் அணியினை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது வளர்மதி



சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக் கழகம் மாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் முள்ளியவளை வளர்மதி அணியை எதிர்த்து யுனிபைட் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் வளர்மதி அணி 02 : 01 கோல் அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (க)

# அபார வெற்றியை பதிவு செய்தது கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி



பருத்தித்துறை லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை, வடமராட்சி லீக்கின் அங்கத்துவ கழகங்களுக்கிடையில் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்று போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் நெடியகாடு இளைஞர் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 06:01 என்ற கோல் கணக்கில் றேஞ்சர்ஸ் அணி வெற்றி பெற்றது.

றேஞ்சர்ஸ் அணி சார்பாக சுஜாஸ் 02, ஆர்த்தி 02, வர்மன், ஈழவேந்தன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர். (க)

## பாம்புக்கடிக்கு...

யில்..கடந்த புதன்கிழமை (25.09.2019) வீட்டு முற்றத்தில் நின்ற பொழுது பாம்பு தீண்டிய நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கடந்த வெள்ளிக்கிழமை யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் (30.09.2019) பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரின் மரண விசாரணையினை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## மணற்காட்டில்...

கிழமை பிற்பகல் மணற்காடு பகுதி ஊடாக கஞ்சா கடத்தப்படுவதாக காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து காங்கேசன் துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சேனாதிரா தலைமையிலான பொலிஸ் குழுவினர் மணற்காடு பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்றை சோதனையிட்ட போது கேரளக் கஞ்சாவினை கடத்திய நாகர்கோவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து 6 கிலோகிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட கஞ்சாவும் கைது செய்யப்பட்ட நபர்களும் பருத்தித்துறை பொலிஸில் பாரப் படுத்தப்பட்டுள்ளனர். (ம-3,60,101)

## அநுரகுமார...

க்க இன்றைய தினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்.மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகாமையில் உள்ள றிம்பர் மண்டபத்தில் பொதுமக்கள் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-3,10)

## பூஜித கைதாகி...

நீதிவான் நீதிமன்றம்.

நேற்றுக் காலை பூஜித கைது செய்யப் பட்டிருந்தார்.

2017ம் ஆண்டு பொலிஸ் தலைமையகத்தில் மின்தூக்கி ஊழியர் ஒருவரை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை பூஜிதவை கைது செய்த சிஐடியினர், கொழும்பு நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போதே, அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ம-3)

## தேரரின் உடல்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு நாயாறு விகாரையின் விகாராதிபதியின் பூதவுடலைத் தகனம் செய்வது தொடர்பில் நீதிமன்றத்தில் இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாக விசாரணை நடைபெற்ற அதேவேளை, மறுபக்கத்தில் மரணமடைந்த தேரரின் பூதவுடல் அழுகிக்கொண்டிருந்தது.

வெகு நேரத்தின் பின்னர் அங்கு பூதவுடலைத் தகனம் செய்வதற்கான பிரதேசத்தைத் தெரிவு செய்யுமாறு தீர்ப்பு வழங்கப் பட்டது. எனினும் அதற்குள் தேரரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டுவிட்டது.

தற்போது இவையனைத்தும் நடைபெற்று முடிந்துவிட்ட நிலையில், அதனை அப்படியே விட்டுவிட வேண்டும். இவ் விவகாரத்தினால் அங்கு தமிழ் - சிங்கள மக்களுக்கு இடையில் எவ்வித முரண்பாடுகளும் வெடிக்கவில்லை. எனவே தேவையின்றிப் போராட்டங்களை நடத்த வேண்டிய அவசியமில்லை என்றார். (ம-3)

## ஆசிரிய, ரயில்...

யிலான பேச்சுவார்த்தையின்போது தமது கோரிக்கைகளுக்கு தகுந்த தீர்வொன்று கிடைக்கப்பெறவில்லை.

அதனால் வேலை நிறுத்த போராட்டத்தை தொடரவுள்ளதாகவும் ரயில்வே பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் பிரதான செயலாளர் ஜானக்க பெர்ணான்டோ தெரிவித்தார்.

ரயில்வே தொழில் சங்கங்களின் தொடர் வேலை நிறுத்தத்தின் காரணமாக பொது மக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளனர். ரயில்வே தொழிற்சங்கங்கள் நேற்று ஆறாவது நாளாகவும் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டதுடன், நேற்று 10 ரயில்களும் மாலை 9 ரயில்களுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

இதன் காரணமாக காலையில் தொழில் நடவடிக்கைகளுக்காக செல்லும் அரச மற்றும் தனியார் ஊழியர்களும் மாலையில் வீடு திரும்பும் ஊழியர்களும் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள், சாரதிகள், கட்டுப்பாட்டாளர்களின் தொழில் சங்கங்களின் சுமார் 15000 ஊழியர்கள் கடந்த புதன்கிழமை நள்ளிரவிலிருந்து வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 15 ஆயிரம்...

காரிகளுக்கான கொடுப்பனவிற்கு உரித்துடைய அனைவருக்கும் 15 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இந்த சம்பள அதிகரிப்பின்போது, அவர்களின் சேவைக்காலத்தை கணக்கிலெடுக்காமலிருக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## நீராவியடி ஆலய...

டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பாக ஊடகங்களில் வெளியாகிய காணொளிகள் மற்றும் ஒளிப்படங்களைப் பெற்றுக் கொள்வதற்கு பொலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதியளித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அனைத்து ஊடகங்களிடமிருந்தும் காணொளி மற்றும் ஒளிப்படங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதியளிக்கக்கோரி முல்லைத்தீவு தலைமையகப் பொலிஸார் நேற்று செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் ஊடாக விண்ணப்பம் செய்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பத்தை ஆராய்ந்த முல்லைத்தீவு நீதவான் எஸ்.லெனின்குமார், அதற்கான அனுமதிக் கட்டளையை பொலிஸாருக்கு வழங்கினார். நீதிமன்றின் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியை அடையாளம் காட்டுவதற்காக சட்டத்தரணிகள் நீராவியடி பிள்ளையார் ஆலயப் பகுதிக்குச் சென்றிருந்தனர்.

அதன் போது சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் மற்றும் மூவர் பௌத்த பிக்குவால் தாக்கப் பட்டனர்.

இதுதொடர்பாக அன்றைய தினமே சட்டத்தரணி கே.சுகாஷ், முல்லைத்தீவு தலைமையகப் பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில் சட்டத்தரணி சுகாஷ் மீதான தாக்குதல் தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்றில் தனியாக பி அறிக்கை ஒன்றை பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கல் செய்தனர். இந்த வழக்கு முல்லைத்தீவு நீதிமன்ற நீதவான் எஸ். லெனின் குமார் முன்னிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தது..

தாக்குதல் நடத்தியவர்களை மன்றில் முற்படுத்தினால் அவர்களை அடையாளம் காட்டத் தயார் என சட்டத்தரணிகளால் மன்றுரைக்கப்பட்டது.

சட்டத்தரணி சுகாஷ் உள்ளிட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் காணொளி மற்றும் ஒளிப்பட ஆதாரங்கள் உள்ளன, அவற்றை வைத்து சம்பந்தப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்துவோம் என்று பொலிஸார் மன்றுரைத்தனர்.

அதனால் வழக்கு விசாரணை எதிர் வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஒத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கூட்டணி அமைப்...

பொதுஜன பெரமுனவுக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் கூட்டணியை ஏற்படுத்துவதற்காக இரண்டு கட்சிகளுக்கும் இடையில் பல மாதங்கள் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட போதிலும் இதுவரை எந்தவொரு இணக்கப்பாடும் எட்டப்படவில்லை

இவ்வாறு நீண்ட நாட்களாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் முரண்பாடான ஒரு சூழல் நிலவி வருகின்றது.

இந்த நிலையில் தற்போது ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இரு தரப்பிற்கும் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளன.

இருப்பினும் சஜித் - மைத்திரி சந்திப்பு எப்போது இடம்பெறும் என்பதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் இன்னும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (ம-3)

## நீராவியடி ஆலய...

விட்டார்.

முல்லைத்தீவு நீதிமன்றின் கட்டளையை அவமதித்தவர்கள் மற்றும் அவர்களுக்கு துணை நின்ற பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் வரை தொடர் போராட்டத்தில் வடக்கு மாகாண சட்டத்தரணிகள் கடந்த 24ஆம் திகதி தொடக்கம் 4 நாட்கள் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் நீதிமன்றக் கட்டளையை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ் எதிரிகள் எவரையும் பெயர் குறிப்பிடாமல் முல்லைத்தீவு நீதிமன்றில் பொலிஸார் பி அறிக்கையைத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை முல்லைத்தீவு நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

நீதிமன்றக் கட்டளையை இணக்கத்துடன் பெற்றுக்கொண்டு அதனை அவமதித்த பிக்குவை மன்றில் முற்படுத்துவதற்கு அழைப்பாணை வழங்குமாறு பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பத்தை நிராகரித்த நீதவான், நீதிமன்றக் கட்டளையைப் பெற்றுச் சென்று அதனை மீறி நீதிமன்றை அவமதிக்கும் செயலில் ஈடுபட்ட பிக்குவை மன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அதனால் வழக்கு விசாரணைகள் ஒக்ரோபர் 14ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. (ம-3)

## வெங்காயத்துக்...

வெங்காயத்தின் விலை அதிகரித்ததன் காரணமாக நுகர்வோரான பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியிருப்பதை கவனத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-3)


கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 01-10-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2257
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 19 29 38 79

நீரோகா
திகதி 2019/10/01
சீட்டிழுப்பு இலக்கம் 0605
லக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 07 13 22 54

செவன
திகதி 01/10/2019
சீட்டிழுப்பு இலக்கம் 223
G 13 35 44 62

மஹஜன சம்பத
திகதி 2019/10/01
சீட்டிழுப்பு இலக்கம் 4018
V 0 2 9 5 3 2

S 06 33 41 53
65137
அடுத்த சுப்பர் ஜக்பொட் 142,100,633/=
502 01 ஒக். 2019
இளம் சிவப்பு

ஜயோதா உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1608 சீட்டிழுப்பு திகதி 01/10/2019
வெற்றி இலக்கங்கள் 31 47 51 53 X
ரூ. 38,416,604

ராசி அதிர்ஷ்டம்
திகதி 10/10/2019 வெற்றி வாரம் 2634 வர்ணம் சிவப்பு
சிம்மம் 09 11 34 36
ரூ. 3,486,052

அட விசேட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல.: 748
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.10.01
ரூ.50,000,000/-
ரூ. 55,930,760/-
வெற்றி இலக்கங்கள் 02 37 56 72 Q
9377
204791
841184

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# அரசின் கடன் நெருக்கடியே தற்போது பாரிய சவாலாகவுள்ளது

## மகிந்த ராஜபக்ச எச்சரிக்கை

(கொழும்பு)

இந்த நாட்டில் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட கடன் நெருக்கடி தற்போது தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய சவாலாக காணப்படுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச எச்சரித்துள்ளார்.

நாட்டின் கடன் சுமை தொடர்பாக நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

2015 ஜனவரியில் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நேரத்தில் 7.39 டிரில்லியன் நாட்டின் மொத்த கடனாக இருந்தது. ஆனால் 2019 யூலை இறுதிக்குள் 12.64 டிரில்லியன் என கடன் தொகை 71% அதிகரித்துள்ளது.

அரசாங்கம் எடுத்த கடனில் வெளிநாட்டு கடன்கள் அதிக விகிதமாகும், இது நாட்டிற்கு ஆபத்தை அதிகரிக்கிறது என கூறிய மகிந்த ராஜபக்ச, சர்வதேச மதிப்பீட்டு நிறுவன மான மூடிஸ் இந்த விவகாரம் தொடர்பாக சமீபத்தில் ஒரு எச்சரிக்கையை வெளியிட்டது என்றும் தெரிவித்தார். அத்தோடு 2015 ஜனவரி முதல் இன்றுவரை 26 பில்லியன் அமெரிக்க டொலர்களை வணிக கடன் மூலம் அரசாங்கம் எடுத்துள்ளது என்று ராஜபக்ச கூறினார்.

வெளிநாட்டு நாணய கடன்களை வெளிநாட்டு நாணயத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். எனவே ரூபாயுடன் தொடர்புடைய அமெரிக்க டொலரின் மதிப்பு அதிகரிக்கும் போது கடன் சுமை தானாகவே அதிகரிக்கும் என்றும் மகிந்த ராஜபக்ச சுட்டிக்காட்டினார்.

அதன் பிரகாரம் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது 131 ரூபாயாக ஆக இருந்த அமெரிக்க டொலரின் மதிப்பு இன்று 183 ரூபாயாக உயர்ந்துள்ளது எனவும் சுட்டிக்காட்டினார்.

2015 முதல் 2018 இறுதி வரை மட்டும் நாணயத்தின் தேய்மானம், அரசாங்கத்தின் கடன் சுமையை 1,709 பில் லியனாக அதிகரித்துள்ளது என மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு அந்த கடன்கள் எடுக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டிய மகிந்த ராஜபக்ச அவை அனைத்தும் அரசாங் கத்தின் அன்றாட செலவினங்களை பூர்த்தி செய்யவே எடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். (ஞா)


உங்கள் வெளிநாட்டுக் கனவை நனவாக்க
திறக்கிறது புதிய வாசல்!
RUSSIA
Student Visa & Work
Option 1
3 மாத மொழிக் கற்கையுடன் தொழிற்சாலை வேலைவாய்ப்பு
Lingva Foreign Language School
மாதம் 85,000/- வருமானத்துடன்
Option 2
விரும்பியதுறையில் பட்டக்கல்வி ஏற்பாடு
Aviation - Electronics & Engineering
மிகக் குறைந்த கட்டணங்கள் - வாழ்க்கைச் செலவு குறைந்த நாடு
Latvia, Belarus, Poland, Romaniaவுக்கு அருகே
3ஏ மாதத்தில் பயணமாகலாம்!
மேலதிக விபரங்களுக்கு 0777 324 004, 021 221 9 221
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
FAST TRACK to CAREERS
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.sikaram.lk
Sikaram Academy
(C-7768)



வேலை வாய்ப்பு
யாழ். திருநெல்வேலியில்
1. மின் இணைப்பு பிளம்பிங் தெரிந்தவர்கள்
2. பெயின்ரிங் வேலை
3. சமையல் ஓரளவு தெரிந்த தொழிலாளி
தொடர்பு : 076 554 1472



பயண முகவர் தேவை
Air Ticketing இல் அனுபவமுள்ள பயண முகவர் தேவை
தொடர்புகளுக்கு. SB Travels and Tours Pvt Ltd
No 212, Kasthuriyar Road, Jaffna. 0212229555
(C-7765)



3 மாத கால அலுவலக பயிற்சிகள்
2019 இல் A/L எடுத்தவர்கள் மாத்திரம்





விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS
எமது கிளைகள்
கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கொடிகாமம், புதுக்குடியிருப்பு, கன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மருதனார்மடம்
எமது அனைத்து கிளைகளிலும் 3 மாத கால வேலை வாய்ப்பு பயிற்சிகள் உண்டு.
பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
A/L பெறுபேறுகள் கிடைக்கும் வரையிலான காலப்பகுதியில் மட்டும்.
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com
(C-7599)



வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை
(C-7762)



இரண்டு மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள்
077 9086737
GUNA BEST PC COMPUTER REPAIR
522 மானிப்பாய் வீதி ஒட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்
(494)





ஆரம்பம்
Oct 5 & 8 2019
Special Offer
30,000/=
ஹோட்டல் மனேஜ்மென்ட்
100% வேலை
90% செய்முறை வகுப்புக்கள்
படிக்கும் போதே கைநிறைய சம்பாதிக்க வெளிநாட்டில் உயர் கல்வி
No.1544, KKS Road,Jaffna.
0760579999, 0213146171



யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள
North Lanka IIT வளாகத்தினால்
பின்வரும் பாட நெறிகள் ஆரம்பமாகின்றன
பாடநெறி ஆரம்பம்
05.10.2019 சனிக்கிழமை
காலை 10 மணி
பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரம் (UGC) பெற்றது
UNESCO, IAU, WHED யின் அங்கீகாரம் பெற்றது.
கல்வி அமைச்சினதும், மாகாணக் கல்வி அமைச்சினதும் அனுமதி பெற்றது.
பல்கலைக்கழக பேராசிரியர்களின் இணைந்த சேவை.
இலகு தவணைக் கட்டணம்
1.B.Sc in Computer Science - (Top up - 1 year)
Entry qualification :- 2 Years Diploma / HND
2. B.Sc in Computer Science - ( 3 years) Entry qualification :- G.C.E (O/L), G.C.E (A/L)
3. M.Sc in Computer Science - ( 1 year) Entry qualification :- Any Degree
4. B.Sc in Agriculture Science - (Top up - 1year) Entry qualification :- 2 Years Diploma
5. B.Sc in Agriculture Science - ( 3 years) Entry qualification :- G.C.E (O/L), G.C.E A/L)
6. B.Sc in Civil Engineering - (Top up - 1 year)
Entry qualification :- 2 years Diploma/ HND
7. B.Sc in Physical Education & Sports - (Top up - 1 year)
Entry qualification :- 2 years Dip in Physical Education/ Trained Teacher
8. Higher Diploma in Sports Coaching ( 2 years)
Entry qualification :- புதிதாக நியமனம் பெற்ற விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பு ஆசிரியர்கள்
9. Ph. D - 2 ½ years)
Entry qualification :- Any Master Degree
தொடர்புகளுக்கும், மேலதிக தகவல்களுக்கும்
North Lanka IIT
Top Floor
People's Bank Building,
Stanley Road Jaffna
077 884 9677 / 076 750 4535 / 021 492 7088
IHHRI (PVT) LIMITED
(Dr. Shanthakumar)
6, Ramakrishna Terrace,
Wellawatte, Colombo - 06
Tel : 077 775 4108 / 011 236 3131
(C-7761)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(496)



வேலை வாய்ப்பு
நீங்கள் O/L, A/L படித்தவரா? 18-40 வயதிற்கு உட்பட்டவரா? உலகலாவிய ரீதியில் முன்னணி வகிக்கும் எமது EDM கம்பனியின் கிளை நிறுவனங்கள் விஸ்தரிப்பு.
பதவிகள்
●கணக்காளர் ●நிர்வாக உத்தியோகஸ்தர்
●உதவி முகாமையாளர் ●மேற்பார்வையாளர்
●களஞ்சியக் காப்பாளர்
வட மாகாணம் முழுவதும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பப்பதிவுகளை மேற்கொள்ள உங்கள் பெயர், முகவரியை SMS செய்யவும். 077-9858580
தொடர்புகளுக்கு: 021 722 3317 / 076-8853201
(495)



SB travels and tours pvt Ltd
●சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களை மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
● இந்தியா, மலேசியா, பாங்கோக் நாடுகளுக்கான வீசாக்களையும் எமது நிறுவனத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.
● இந்தியா வீசா விண்ணப்பப்படிவம் ரூபாய் 100/- நிரப்பித் தரப்படும்
● இந்தியா E – வீசா வினையும் ( E– Visa ) பெற்றுக் கொள்ளலாம் மற்றும் Schengan Visa விண்ணப்பப்படிவமும் நிரப்பித் தரப்படும்.
● சென்னைக்கு 23800/= ரூபாவில் இருந்து இரு வழி விமான பயணச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு இல 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0212229555, 0212228555 / 0766911080, 0766911082
வெள்ளவத்தை – 0112361711 / கொழும்பு 15 - 0112540111
(C-7765)



NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD JAFFNA
ENGLISH MEDIUM & TAMIL MEDIUM
BIOLOGY BY
MR.S.P. NAAHANATHAN
FOR A/L 2020 BATCH
TUES, WED, THU, FRI
7.00 – 9.30
ஆரம்பம் :-04.10.2019
(C-7759)



SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதியோர், இளைஞர் யுவதிகள், வீட்டுப்பெண்கள், தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!
2வது சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 05.10.2019
1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
ஒவ்வொரு பிரிவிலும் 15 பேர் மட்டுமே
தொலைபேசிமூலமும் முன்பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.
பயிற்சிநெறிமுடிவில் பெறுமதியான Diploma சான்றிதழ்
SAMSON
Experts in English Training
403,வெலிங்டன் சந்தி யாழ்நகர்.
021 222 4282
077 6214567
(C-7766)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.